

தி. ஜானகிராமன்
பிடிகருணை

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பிடி கருணை | 1 |
| சந்தானம் | 13 |
| பாயசம் | 25 |
| தாத்தாவும் பேரனும் | 37 |
| புண்ணிய பாங்க் | 50 |
| அதிர்வு | 63 |
| ஒரு விசாரணை | 73 |
| பஸ்ஸும் நாய்களும் | 82 |
| [illegible]திக்கு | 93 |
| [illegible]பிள்ளைத் தோழன் | 108 |
| [illegible]யின் ஆட்டுக்குட்டி | 121 |

இத்தொகுதியில் உள்ளவை, சுதேச மித்திரன், கணையாழி, கல்கி, ஆனந்த விகடன் முதலிய பத்திரிகைகளில் வெவ்வேறு ஆண்டுகளில் வெளிவந்தவை. இலக்கண சுத்தமான சிறுகதைகள் அல்ல. அந்த வகை எப்போதுமே என் கைவச மானதில்லை. குடிசைத் தொழில் பீங்கான் போல பொருக்கு, கட்டி எல்லாம் சேர்ந்திருக்கின்றன. இப்போது நீக்குவது சிரமம். இந்த நேரம் ஒருமுறை மீண்டும் படித்தபோது பழைய ஓலைக் கிலுகிலுப்பையை ஆட்டுவது போலிருந்தது. இதற்கும் பத்துப்பேர் இருப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கை. இந்த டில்லி குளிரில், நம்பிக்கை போர்வை மாதிரி தோற்றமளிக்கிறது.

**தி. ஜானகிராமன்**

30-11-74

# பிடி கருணை

வாழப்பட்டு சாமி இன்னிக்கி புடி கர்ணையும் ஒரு சீப்பு மொந்த வாளப்பளமும் கொண்டாரச் சொல்லிருக்கு. மணிக்கணக்கால்லே உக்காந்திருக்கு, நிட்டையிலே - கல்லிலே அடிச்சாப்பல! நெஞ்சி வயிறு மூலம்லாம் நெருப்பா எரியுமே! அதுக்குத்தான் மொந்த வாளப்பளமும் புடி கர்ணையும் திங்கிதாம். இந்தச் சாமிங்க என்னல்லாம் கண்டுபிடிச்சு வச்சிருக்கு! புடி கர்ணையை அப்படியே நெருப்பிலே போட்டு வாட்டி, தோலைத் தேச்சிட்டு கையாலே நசுக்கி உதுத்து, தேனோ என்னவோ குளச்சுச் சாப்பிட்டா கண்ணெரிச்ச, மூலம்லாம் இருக்கிற இடம் தெரியாமே பறந்திருமாம். அதே புடி கர்ணையெ தண்ணியிலே வேக வச்சு மசியப் பண்ணி சாப்பிட்டா சூடாம். யப்பாப்பா! என்னா ரகசியம்லாம் தெரியுது இதுங்களுக்கு! சும்மாவாச் சாமியா ஆயிருக்கு?

அதுவும் இந்தக் கர்ணையாச் சாப்பிட்டா, எந்த மூலம் தான் பறக்காது! காராக் கர்ணையெல்லாம் இது கிட்ட பிச்சைவாங்கணும். அப்படியாப்பட்ட கிளங்கு பச்சைக்கூடத் திங்கலாம். நாக்கிலே ஒரு காரல் காருமா? ஒரு நமைச்சல்தான் ராவுமா? புதுத்தெரு கிளங்கில்லே! பாத்தா கறுப்பும் சொர சொரப்புமா ஆனை கணக்கா இருக்கு. தின்னா வெண்ணெய்! சாமியும் எம்மேலே வெண்ணையாத்தான் இருக்கு. நான் போனா அது முகத்திலேதான் என்ன பாத்தியம்! என்ன அன்பு! சிரிப்பிலேயே எத்தனையோ சிரிப்பு இருக்கே. எல்லாரையும் தான் பார்த்துச் சிரிக்கிறோம். மனசார, நீ ஒண்ணும் எனக்குக் கொடுக்கவாணாம், செய்ய வாணாம். உன்னைக் கண்ணாலே பார்த்ததே போதும்ங்கறாப்பல சுத்தமாச் சிரிச்சிற முடியுமா யாரைப் பார்த்தாலும்? நாய் வாலை ஆட்டுறாப்பல. குளந்தைங்க சிரிக்கிறாப்பல, எப்பவும் சிரிக்க முடியுமா சுத்தமா! ஆனா என்னைக் கண்டவுடனே சாமி சிரிக்கிறது, குளந்தை சிரிக்கிறாப்பலதான்.

நான் என்ன பணம் கொடுக்கிறேனா, பாயஸமும் அதுக்கெதுக்கு! அது என்ன குடித்தனம் நடத்தற ஆம்பளையா? அதுக்கு வேண்டியதெல்லாம் ரண்டு மூணு பிடி கர்ணை, ஒரு மொந்த வாளப்பளம்! தேனுகூட எங்கிட்ட கேக்கறதில்லே, நான் கடைபடாதவன்னு. சாமியோட உடம்பைக் குளிரப்பண்ணணும். அதோட கண்ணையும் மனசையும் குளிரப்பண்ணணும், இந்தப் பிடி கர்ணை.

இந்தக் கடைக்கு வந்து, ஒரு நொடி குந்துனாப் போதும் சாமி. இந்த இடத்திலே அது காலு பட்டாப் போதும். ஒரே ஒரு எள்ளுண்டை இங்க வந்து என் கையாலே வாங்கித் தின்னாப் போதும். அப்புறம் இந்த அஞ்சுக்கு மூணுலே காலை ஒடிச்சுக்கிட்டு எள்ளுண்டை, கடலை உண்டை விக்குமா விக்குமான்னு ரோதனைப் படவாணாம்! ஆனா சாமி ஊருக்குள்ற வந்தே ஒரு மாமாங்கம் ஆயிரிச்சாம்!

போன மாமாங்கத்துக்கு ரண்டு வருசம் முன்னாலே வந்திச்சாம். காபி கடை சுப்புணி அய்யர் கடைத் திண்ணையிலே வந்து குந்திச்சாம். சுப்புணி அய்யரு எளுந்து வந்தாராம். "ஏய், எனக்கு ஒரு இட்லி கொடுப்பியா?"ன்னு கேட்டுதாம் சாமி! உடனே உள்ற ஓடிப்போய், சுடச் சுட நாலு இட்லியை எடுத்து, எண்ணெய், கொத்சு, சட்னியெல்லாம் போட்டுக் கொண்ணாந்து வச்சாராம் சுப்புணி அய்யரு. ஒரு பாதி இட்லியைத் தின்னிச்சாம் சாமி. மீதியை அப்படியும் இப்படியுமா எறைச்சுதாம். ரோடு திண்ணையெல்லாம். அப்படி அப்படியே இலையை இளுத்து வாசப்படியிலேயே எறிஞ்சுதாம். இறங்கி நடந்து போயிட்டுதாம். மறுநாள்ளேர்ந்து புடிச்சுதே பார்ப்பம் வியாபாரம் சுப்புணி அய்யருக்கு! கூட்டம் தாக்குப் புடிக்க முடியல்லே. பெரிய கட்டடத்துக்கு மாறிச்சி கடை. ரண்டு ஆளு வேலை செஞ்ச இடத்திலே இருவது ஆளு வந்தது. அதுவும் பத்தலெ. அப்புறம் ஓட்டலுக்குத் தனிக் கட்டடமே கட்டிட்டாரு. கட்டடமே எம்பதாயிரம் பொறும்.

பாலு வெளியே வாங்கவாணாம், சுத்தமாயில்லேன்னு சீமைப் பசு, நெல்லூர்ப் பசு, காராம் பசுன்னு ஒரு அறுபது

மாடு வாங்கிட்டாரு. எருமை மாட்டிலே பதினைஞ்சு-அதுங்களுக்குத் தனி கொட்டிலு. காசுக்காரத் தெருவிலே பாதி வீடுங்களை விலைக்கு வாங்கினாரு. பிடாரி கோயில் கிட்ட நாப்பது காணி நிலம். உடம்பிலே ஒரு சேப்பு கொடுத்தது. மினு மினுன்னும்...வந்தா ஒண்ணாவா வரும்? லச்சுமி அப்படி நடந்து போறப்போ அவ காத்து பட்டால் பத்தாது? அப்படில்ல அடிக்கிறது சுப்புணி அய்யருக்கு! எல்லாம் அந்த ஒரு வாய் இட்லி செஞ்சிருக்கிற வேலை! சாமி அப்படிக் கொட்டிப்புட்டுப் போச்சாம்!

அந்த மாதிரி ஒரு நாளைக்கு இப்படி வந்து ஒரு பாக்கு வெட்ற நேரம் இங்க குந்தினாப் போதும். வராம இராது சாமி. நான் கால்லே வுளுந்து கும்பிட்டு கேட்டா, மாட்டேன்னு சொல்ல மனசு வருமா அதுக்கு! ஆனா எப்படிக் கேக்கறது! நம்ம பாடுதான் இப்படித் தாளம் போடற பாடா இருக்கே. பிடி கர்ணை வாங்கியாச்சு. மொந்த வாளப்பளம் வாங்கணும். காசில்லே! கிழக்கு வெளுக்கக் கடையெத் தொறந்தாச்சு. இன்னிக்கி, ஒரு கர்ப்பூரக் கட்டி விலை போகக் காணும். ஊரிலே இந்தப் பாழும் காச்சல் வரணுமா? அதுக்காக தலைவலி காச்ச மாத்திரைகளை வாங்கி வந்ததிலே மொந்தம் பளத்துக்கு காசில்லாம வாயை அகட்டிட்டுது சுருக்குப் பை. காலையிலேயே ஏதாவது காசைப் பார்க்கலாம்னு தொறந்து வச்சா, இந்தத் தலைவலி மாத்திரை கூட விக்கல்லே.

மணி ஒம்பதாயிட்டாப்லெ இருக்கு... வாத்யாரம்மா பிலுக்கு பிலுக்குன்னு பள்ளிக்கூடம் போறாங்க, ராவுஜி கூட அச்சாபீஸிக்குப் புறப்பட்டுட்டாரு.

"செட்டியாரே-"ன்னு அவரு கிட்ட வரதுக்கு முன்னாடியே இதோ எடுத்தாச்சு பத்து பீடி. ரண்டணாக்கு வெத்திலை பாக்கு.

"செட்டியாரே, கணக்கு என்னாச்சு?"

தினம் தினம் ராவுஜி இதை ஒரு தடவை கேக்காம போறதில்லே, என்னமோ உடனே கணக்குத் தீக்கப் போறாப்பல.

"ஏன், பணம் ஏதாவது கொடுக்கப் போறீங்களா?"

"பணமா, இன்னக்கி ஏது பணம்? பன்னண்டு தேதிக்கு?........என்ன ஆச்சினு தெரிஞ்சுக்கலாம்ல!"

"என்னாத்த பெரிசா ஆயிடப் போவுது? தினம் பத்து பீடி, போறப்ப ரண்டணா வெத்திலை பாக்கு, வரப்ப ஓரணா வெத்திலை பாக்கு! கடசித்தேதி அன்னிக்குத்தான் எளுதிக் கொடுக்கிறேனே, பத்தாதா?"

அந்தக் கணக்கை மாத்திரம் ராவுஜி பாக்கறாரா..... என்ன? ரண்டு ரூவா கூட எளுதினாலும் எப்படி ஏதுன்னு கண்டுபிடிக்கப் புத்தி இருந்தால்ல? தினமும் நாலு பைசா, அஞ்சு பைசான்னு கூட்டி எளுதறது சரியில்லேதான். ஆனா அவுரு மாசா மாசம் கணக்குத் தீர்த்தா இந்த நாயம் பார்க்கலாம். அது ஏது? அவருக்குத் தீவுளி போனசு, சங்கராந்தி போனசு, நவராத்திரி அட்வான்சு, பள்ளிக்கூடத்துப் புத்தகம் அச்சடிக்கறப்ப ஓவர்டைம்... இப்படி வந்தாத்தானே காசுபேருது? அதுவரைக்கும் காத்துக்கிட்டிருக்கோமே! மாசம் ஒண்ணு ரண்டு கூடப் போனாத்தான் என்னவாம்? தாங்கற மாசத்துக்கு வட்டி!

"பொவயிலை வாங்கியாறச் சொல்லிச்சு அப்பா. அப்படியே ஒரு தேங்காக் கீறும் கருவேப்பிலே கொத்தமல்லியும் வாங்கியாறச் சொல்லிச்சு அம்மா"

காளிமுத்து ஆசாரியார் மவளா!.... சரி, எடுத்துக் கிட்டுப்போ........கணக்கு எளுதுவம்......பொவயிலை 09காசு, தேங்காபத்தெ 07 காசு, க-எல கொத்மலை 04 காசு, பூவம் பளம் 08 காசு...... பூவம்பளம் வாங்கிட்டுப் போகலே அது. அதுனாலென்னா? என்னமோ எளுதியாச்சு....இனிமே அடிக்கக் கூடாது அப்புறம் சந்தேகம் வரும். எளுதினாத்தான் என்ன குத்தம்? சும்மாவா எளுதறோம்? கடன்ல கொடுக்கறோம்! ஒரு மாசம் நாப்பது நாளுக்கு பைசா வாங்காம கொடுக்கறப்போ கொஞ்சம் கூடச் சொன்னா கிராக்கியும் கையை உட்டுப் போயிடும்..... ஒம்பது பைசா வாங்கின புகையிலைக்கு ஒரு பைசா லாபம் கொடுன்னா 'பேராசைக்காரன்' அப்படிம்பாங்க. இப்படி வாளப்பளம் எட்டு பைசான்னு எளுதினா கண்டு பிடிக்கத் தெரியாது!

ம்ஹூம்... கதவெத் திறந்து வச்சதிலேந்து இப்படியே கடன் கொடுக்கறதும் பத்து எளுதறதுமாவே இருக்கே? நாலணா முளுசாக் கல்லாவிலே விளுந்தபாடில்லே.

ராவுத்தர் மவன் வந்து வயித்தே வலிக்குதுன்னு ஒரு சோடா குடிச்சிட்டுப் போனான். மூனு மணி நேரமா இதுதான் ரொக்க வியாபாரம்.

"சிகரெட் இருக்காய்யா?"

"இருக்குங்களே....இந்தாங்க....."

"ம்ஹூம்.... பாக்கிட் வாணாம்.... ரண்டே ரண்டு போதும்....எத்தினி?"

"எட்டு பைசா!"

"ஏன்யா! நீதானே பழம்புளி, புதுப்புளி, உப்பு எல்லாம் வண்டிலே வச்சிட்டு தெருவோட வித்திட்டுப் போவே?"

"ஆமாங்க"

"இப்ப கடையாவே வெச்சாச்சா?"

"அது வெச்சு ஒரு வருசம் ஆயிட்டுதுங்களே! முடியலீங்க! வெயிலு, மளை, குளிருன்னு எல்லாத்தையும் தலையிலே வாங்கிக்கிட்டு எத்தினி காலம்தாங்க சுத்த முடியும்? இருவது வருசம் வண்டியேத்தள்ளி வெயிலும் குளிரும்மாத்தான் தின்னாச்சு. இந்த ஆஸ்த்மா தொந்தரவு ரொம்ப சாய்ஸ்த்தீங்க. போன மார்களிக்கு ஒரேயடியா ஆளைத் தள்ளிருச்சு. ஆசுபத்திரியிலே இருவத்தி நாலு நாளு கெடந்தேன். அப்பதான் டாக்டரு சொன்னாங்க. 'இந்தா பாரையா! இன்னமே வண்டி கிண்டி தள்ளிக்கிட்டு தெருவிலே சுத்தினியோ, அவ்வளவுதான். உம் பொண்டாட்டி புள்ளை யெல்லாம் தெருவிலே வந்து நிக்க வேண்டியதுதான்'னாரு. அப்புறம்மேலேதான் சீட்டுக் கட்டுன பணம் ஒரு அறுபது ரூவா சேர்ந்திருந்தது. அதே வச்சுகிட்டு கள்ளிப்பெட்டி ஒரு டஜன் வாங்கினேன். இப்படி நாலு வெச்சேன். மீதியே உடைச்சு, அலமாரியா பண்ணச்சொன்னேன். கடை அஞ்சுக்கு மூணுதான். நான் வச்சிருந்த வண்டியெவிடச் சின்னதுதான். அது எட்டுக்கு மூணரை. இது அஞ்சுக்கு மூணு. இருந்தாலும் உக்காந்திருக்க முடியுது. அப்ப காசைத் தேடிக்கிட்டு போவம். இரக்கப்பட்டு வந்துச்சு. இப்ப நான் உக்காந்திருக்கேன். நீ என்னைத் தேடிக்கிட்டு வான்னா, சுளுவா வரத்தான் மாட்டேங்குது. என்னாங்க செய்யறது?

கூட வர்றகாசு டாக்டருக்குப் போயிட்டிருந்தது. இப்ப அது இல்லெ. நடக்கிறமோ, குந்திருக்கிறமோ நமக்குக் கிடைக்கறதுதான் கிடைக்கும். கிடைக்கிறது கிடைச்சுதான் தீரும். தெரியலே, நான் சொல்றது.....!"

"ம்ம்ம். நமக்கு என்னா தேவை. என்ன தர்றதுன்னு அவனுக்குத் தெரியும்யா"ன்னு சிகரெட்டைப் பத்தவச்சுக்கிட்டே போறாரு...

'அது சரி...ஆண்டவனுக்குத் தெரியும்கிறாரே...என்ன தெரியும்? அஞ்சடிக்கு மூணடியிலே காலை ஒடிக்கிக்கிட்டு... உப்புலேருந்து கர்ப்பூரம் வரைக்கும், கருவேப்பலையிலிருந்து கடலைப்பருப்பு வரைக்கும். எள்ளுருண்டையிலேந்து ஏலக்காய் வரைக்கும் வச்சுக்கிட்டு பொளுதன்னிக்கும் இப்படி முழங்காலை முகவாயிலே மொத்திக்கிட்டு உட்காந்திருக்கிறேன். ஒரு மனுசனுக்கு இது தான் தேவையா? இது தந்தாப் போதுமா? இந்த மாதிரி நான் கூடத்தான் பேசுவேன், எங்கப்பாரும் என்னைப் படிக்க வச்சு, இப்படி சொக்கா, குளாயெல்லாம் மாட்டி, 'வேலைக்குப் போடா' பேனாப் புடிச்சி எளுதுரா'ன்னு சொல்லியிருந்தா!....ம் ஹும். அப்பவாவது காலாற நடந்துகிட்டாவது இருந்தோம். அட வெயிலோ, மளையோ- காலும் கையும் அசஞ்சுது. இந்த மாதிரி உக்காந்து உக்காந்து சோகை புடிக்கலியே! நாலுதெரு சுத்தறப்ப, ஒரு ஊருகோலம், ஒரு கரகம், ஒரு சண்டை, ரண்டு கோவிலு, நாலு சேதி இப்படி எத்தினியோ கண்ணிலே படும், காதிலெ விளும், ஒரு சைகிள் மோதும், ஒரு பஸ்காரன் திட்டுவான். ஒரு நாய் குலைக்கும்-

யாரு இது வாண்டு? பொறந்த மேனிக்கு வருது! பானை வயிறு, பரட்டைத் தலை, அதுலெ ஒரு பின்னலு; ஒளுகு மூக்கு...மேலெல்லாம் சாம்பப்பூத்து-பெத்தவளுக்கு இருக்காது கொஞ்சம் கருக்குன்னு பாப்பமேன்னு! இந்தப் பரட்டையைச் சீவி, இந்த சாம்பலைத் தேச்சுக் குளுப்பாட்டி மூக்கைத் துடச்சு, ஒரு துண்டைக் கட்டி அனுப்பப்படாது?....வர்ணம் பூசறானே பெயிண்டர் ராமலிங்கம்-மவன் மாதிரில்ல இருக்கு. ஆமடையான் ஊடு ஊடாப் பூந்து டப்பா டப்பாவா வர்ணம் பூசறான். உனக்கு ஒரு சவுக்காரக் கட்டிக்கி நாதியில்லியாம்மா, உம்மவன்

மேலே இருக்கிற சாம்பலையும் புளுதியையும் கழுவி விடறதுக்கு?....

"என்னடா ஒணும்!"

"இது....இது...."

"எள்ளுருண்டையா-இந்தா'.

"அது!அது!!"

"அதுவும் வேணுமா, கடலை மிட்டாயா-இந்தா."

அட! என்னடா ஒரு ரூவாயைக் கொடுக்குது! சரி..... இருக்கட்டும்....சரி...போ...பேசக் கூடத் தெரியல. இது கிட்ட ஒரு ரூபாயைக் கொடுத்தனுப்பனா ஒரு பொம்பிளை. ,அப்படில்ல இருக்கு காசு மிதப்பு-இவங்களுக்குத்தான்யா, காலம் இப்ப!

அது பாக்கி சில்லறைகூட வாங்கிக்காமே ·போவுது... போவட்டும் போவட்டும்... மம்புட்டி புடிச்சா நாலு ரூபா, பிரஷ் புடிச்சா அஞ்சு ரூபா ஆறு ரூபா! இப்படி 'எள்ளு முட்டாயி வாங்க முதல் வேணுமே, கண்ணாடி டப்பா, வேணுமே'ன்னு கவலை கிடையாது! சரி...வத்தமொளகா, பட்டைச் சோம்பு வாங்கக்கூட ஆளைக்காணும். ஊட்டுக் குப்போயி சுடு தண்ணி ஒரு வாயி குடிச்சாரலாம்.

யாரங்கே...இதோ பாரு. இதோ ஒரு ரூவா இருக்கு. மார்க்கட்டுக்குப் போயி ஒரு டஜன் மொந்த வாளப்பழம் வாங்கியா... சுருக்கப் போய் வரணும். எட்டணா ஆகும். மீதியைப் பத்திரமாக் கொண்டா...கடையைத் தொறந்து போட்டு வந்திருக்கேன். யாருமில்லே, வரேன். நீ போறப்ப ஒரு லோட்டா சுடு தண்ணி கொண்டு வச்சிட்டுப் போ. ரொம்ப தாகம். இருக்கிற சூடு போதும்....இதுக்காக அடுப்பை மூட்டிக்கிட்டு உக்கார வாணாம். மார்க்கட்டுக்கு அப்புறம் நாளியாயிடும். நீ வந்தப்புறம் தான் நான் குளுச்சிட்டுச் சாமியைப் போயி பார்க்கணும்.

" என்னா செட்டியாரே-புள்ளைகிட்ட முட்டாயி கொடுத்தீங்க. சில்லறையைக் கொடுக்கலியே!"

"சில்லறையா! ஏது சில்லறை?"

"ஒரு ரூவா கொடுத்தனுப்பிச்சேனே?"

"ஒரு ரூவாயா. அது வந்து இது இதுன்னு கையைக் காமிச்சது. ரண்டு கொடுத்தேன்."

"காசு குடுக்காமியா கொடுத்தீங்க?"

"நீ அப்புறம் குடுக்கப் போறேன்னு நெனச்சிட்டுக் குடுத்தேன்...ரூவாயா கொடுத்தனுப்பிச்சே?"

"கடுதாசி ரூவாயா? காசு ரூவாயா?"

"காசு ரூவா."

"நல்ல பொம்பள போ. வாயைத் தொறந்து பேசக் கூடத் தெரியலெ. அது கிட்டவாவது ரூவாயைக் கொடுத்தனுப்ப வாவதும்மா!...ஏண்டா தம்பி! எங்கடா போட்டே ரூவாயை?"

"பப்புருமுட்டு டப்பா மேலே வச்சேன்னு விரலைக் காமிக்குது! நீங்க பார்க்கவேல்லேங்கிறீங்களே?"

"வச்சா மீதியைக் கொடுத்திட்டுப் போறேன். நான் வெச்சிக்கிட்டு என்ன செய்யப்போறேன்? நீதான் பாரேன். இதோ பாரு- கல்லா பெட்டி - பாத்துக்கிட்டியா! உன் ரூவா கெடச்சா பாரு. பதினாலு பைசா இருக்கு. காலமே பிடிச்சு இதான் போணி... உன் ரூபா எனக்கென்னாத்துக்கு! போம்மா, தேடிப் பாரு. அது வந்த வழியே தரையிலே பார்த்துக்கிட்டே போ... உன் ஊட்டு வாசல்வரைக்கும் பாரு. அது ஓரமாத்தான் நடந்திட்டு வரும். குப்பையெல்லாம் கிளறிக்கிட்டே வரும். மினு மினுன்னு ஏதாவது இருந்தா பொறுக்கிக்கிட்டே போகும். ஓரமெல்லாம் பார்த்துக்கிட்டே போ..."

"என்னாது?"

"சுடு தண்ணியா! வையி!"

"என்னா தேடுது அது?"

"ஏதோ காசு கொடுத்தனுப்பிச்சுதாம், குளந்தை கிட்ட. அது எங்கியோ போட்டிடிச்சு... பதினாறு முளம் சேலை கட்டிக்கிட்டு, இதுக்கும் கூடவா புத்தியிராது? பச்சைப் புள்ளையிட்டவா காசைக் கொடுத்து அனுப்புவா ஒருத்தி? சரி... நீ போ... மொந்தம் பளத்தை வாங்கிக்கிட்டு சீக்கிரமா வந்து சேரு... என்னாம்மா, உன் வீடு வரைக்கும் பாத்திட்டியா."

"பாத்தாச்சு. எந்தக் காளியாயிலே போறவன் எடுத்துக்கிட்டாளோ... சால் கணக்கா வயித்தைப் போட்டுக் கிட்டு நடக்குது பாரு."

"ஊ....ஊவ்...அம்மா-"

"என்னாம்மாது புள்ளையை இப்படி அடிச்சுட்டே. இப்படியா அடிப்பாங்க? கீள வுளுந்து துடிக்குது இப்படி! இப்படியா அடிக்கிறது புள்ளையை! முதுகிலே விரல் பதிஞ்சு தடிச்சுப் பூட்டுதே! நீ யோசனை யில்லாம பண்ணினதுக்கு அதுவா இப்படித் துடிக்கணும்? பச்சைப் புள்ளை-ஏம்மா!-"

"பின்ன என்னய்யா? கல்லு மாதிரி ஒரு முளு ரூவாயை துலைச்சுட்டு நிக்கிது."

"ஊவ் ஊவ்!"

தூக்க முடியாம ரண்டு வீசை பிடி கர்ணை, ஒரு சீப்பு மொந்தம் பளத்தைத் தூக்கிட்டு, என்னத்துக்காகப் போறோம் இப்படி-இந்தப் படை பதைக்கிற வெய்யில்ல! சாமி இதெல்லாம் தின்னுதுன்னா நமக்கென்ன வர்ப் போவுது! அந்த ஆளு சொன்னாப்பல, நமக்கு என்னாத்தை கொடுக்கறதுன்னு ஆண்டவனுக்குத் தெரியாதா! ஏன் இப்படி சித்து, பண்டாரம், சாமின்னு அலைஞ்கிக் கிட்டேயிருக்கோம்... அப்படின்னு நெனச்சு திரும்பி போகலாம்னா அதுவும் முடியலெ. காலு சாமி கிட்டதான் இளுத்துக்கிட்டுப் போவுது.

சாமிகிட்ட போகணும் போலவும் இருக்கு. போக வாணாம் போலவும் இருக்கு. ஒரு பக்கம் போங்குது. ஒரு பக்கம் திரும்பிப் போங்குது.

யப்பா! என்னா அடி! என்னா அடி! பச்சைப் புள்ளை! அப்படியே விளுந்து பல்லிவாலு மாதிரி அது துடிச்ச துடி-தெருப் புழுதியிலே பெரண்டு! என் முதுகிலெ சுளீர்னுதே பார்ப்பம்-அடெ! என்னை அடிக்க முடியலேன்னுதான் புள்ளையை அடிச்சாளா அவ? அடி என்னுது, முதுகு புள்ளையுது!

சாமி என்ன-இன்னிக்குச் சாவடித் திண்ணையிலேயே உக்காந்திருக்கு? ஆகா! என்ன சிரிப்பு! வெள்ளைச் சிரிப்பு!

என்ன பாத்தியம்! குடிக்கிற தண்ணி மாதிரில்ல இருக்கு சொகம்மா, ருசியா, இதம்மா!

"வாய்யா செட்டியாரே."

"வந்தேனுங்க...."

"போதும்...போதும்...எத்தினி தடவை விளுந்து கும்பிடறது. மூணு தடவை போதாதா? என்னா மூட்டை?"

"பிடி கர்ணை-மொந்த வாளப்பளம்! புதுத்தெரு கர்ணக் கிளங்கு, வெள்ரிப்பிஞ்சுதான். ஒரு காரல், ஒரு நமைச்சல் எடுக்காது."

"சாமிமேலே கொள்ளை விசுவாசம் உனக்கு...வியாபாரம் எல்லாம் எப்படி நடக்குது!"

"இருக்கு!"

"குளந்தை, சம்சாரம் நல்லபடியா இருக்கா?"

"ஏதோ தள்ளிக்கிட்டுப் போவுது...மொந்தம்பளத்தை என் கையாலெ உரிச்சுக் கொடுக்கிறேனே!"

"ம்...ரொம்ப ருசியா யிருக்கே...இந்த ஊர்ப் பளமா இது! அமிர்தமா இருக்கு!...ஏன் செட்டியாரே! ஏன் இப்படி கண்ணாலே ஜலம் விடறே! ஏம்பா! என்னாது? ஏன், இப்படி விசும்பறே?.. சொல்லுப்பா...திங்கவும் சொல்லிட்டு இப்படி அழுவானேன்!"

"சாமிக்கு நெசமாவே அந்தப் பளம் தித்திக்குதா! ருசியாயிருக்கா?"

"என் அப்பன் படைப்பிலே ருசியில்லாத பண்டம் ஏது? எட்டி, பாகல் கூட இனிக்கத்தானே செய்யுது! மண்ணுகூட இனிப்புதான். பட்டினிகூட பரமான்னம் தான்."

"சாமி நான் பாவம் பண்ணாம, ஆகாத்யம் பண்ணாம இருக்கும்படியா எப்ப செய்யப் போவுது சாமி?"

"என்ன ஆகாத்யம் பண்ணினே?"

"தினமும் பண்ணிக்கிட்டே இருக்குறேன். மண்ணெண் ணையை ரண்டு டப்பா தண்ணியாவது கலக்காம விக்க மனசு வல்லெ. அஞ்சு ரூவாக்கு சாமான் கொடுத்திட்டு ஏளு ரூவா கணக்கு எளுதறேன். சாமிக்கு மொந்தம் பளம்

வாங்கக் காசில்லெ இன்னிக்கி. ஒரு கொளந்தை கையிலேந்து ஒரு ரூவாயை ஓசைப் படாம திருடிப்புட்டேன். இல்லவே இல்லேன்னு கொடி கட்டிப் புட்டேன். பெத்தவ பேய் மாதிரி பிள்ளையை அறஞ்சா-தூக்கிட்டு போயிட்டா. என் உள்ளெல்லாம் வெந்துக் கிட்டிருக்கு..."

"யாரோ செய்யறாங்க-யாரோ படறாங்க."

"நான் தான் செஞ்சேன். புள்ளெ பட்டுது. எனக்கு வாயெல்லாம் கசக்குது. வயித்தெல்லாம் கலக்குது. தலை கனக்குது. பொட்டு வலிக்குது. நிக்கக்கூட முடியலெ. அதை நெனச்சா. இந்தப் பாவம் எல்லாம் நான் பண்ணாம இருக்க சாமி பண்ணக் கூடாதா?"

"சாமி என்ன செய்யணும்?"

"சாமி வந்து...ஒரு நொடி என் கடையிலே வந்து குந்திட்டுப் போனாப் போதும்."

"என்னாத்துக்கு?"

"வவுத்துக்குப் பத்தாமத்தானே இந்தப் பாவம்லாம் பண்றேன்."

"சாமி வந்து குந்தினா?"

"எனக்குத் தெரியும். நான் தொட்டதெல்லாம் பொன்னா ஆயிடும்"

"பாவமெல்லாம்?"

"அதுக்கும் சாமிதான் வழி செய்யணும்."

"நான் வந்தாப் பணம் வருமா?"

"ஒரு வாய் இட்டலி சுப்புணி அய்யிரைக் குபேரனாக்குன கதை உலகெல்லாம் பொடை பொடைச்சிருக்கே!"

"நீ கர்ணக் கிளங்கை எடுத்திட்டு வரப்பவே தெரியும். ஊர்லெ யோக்கியமா இருக்கத் தெம்பில்லாத பயலுவள்ளாம் அப்படி ஒரு சேதியைக் கிளப்பிட்டானுவ. சாமிக்கு சாவடியை விட்டும் நகர முடியாம போச்சு அதுனாலெ. சுப்புணி அய்யன் நல்ல இட்டலியா வித்தான்? நல்ல எண்ணையா ஊத்தினான்? நல்ல காபியா கொடுத்தான்? அவன் வேலையை ஒழுங்காப்

பாத்துக்கிட்டிருந்தான். உம்மாதிரி புடி கர்ணையை தூக்கிட்டா அலையறான்?"

"சாமி அவ்வளவு எளிதாகச் சொல்லுதே!"

"போய்யா -என் வேலையைக் கெடுக்காதே.. போய்யான் னா...!"

"சாமி."

"போமாட்டியா! நான் போகணுமா?"

படார்!

"சாமி கதவைத் தாப்பாப் போட்டுட்டுதே...நான் உத்தரவு வாங்கிக்கிட வேண்டியதுதானா?"

"சாமி, இந்தப் பச்சைப் புள்ளெயை நினச்சா என் உடம்பிலே காச்ச வராப்பல ஆயிடுதே... நான் என்ன செய்வேன்? ஒண்ணுக்கு நாலா அவங்க வீட்டிலெ கொண்டு போட்டுடறேன்."

"போடாதே. அப்புறம் மறந்து போயிடும். தினம் அடி வாங்கிகிட்டேயிரு...போ....போ...இங்கே நிக்காதே...என்னய்யா நிக்காதேங்கிறேன்..."

அப்பா! நல்ல அடி. சன்னல் வளியா ஒரு பிடி கர்ணையை எடுத்து குறி பார்த்து...அப்பா! என்னா குறி!டமார்னு மண்டையிலே ஈயக் குண்டு கணக்கா அது அடிச்ச அடி!

"சாமி! இந்தப் பிடி கருணையையாவது எடுத்துட்டுப் போறேன்."

"போ....போ...இன்னமே இங்க வராதே."

ஜ௦ஜ

# சந்தானம்

சங்கு ஊதிற்று. முதலியார் சட்டென்று எழுந்து நின்று ஜன்னலண்டை போய்ப் பார்த்தார். எதிர்வீட்டுக் காம்பவுண்டில் முப்பது பேர் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்தார்கள். வாசல் கேட்டுக்கு வெளியே தாதன் குள்ளமாக முண்டாசு கட்டி, பொருக்குத் தட்டிய வெண்சங்கை, கன்னம் உப்ப ஊதிக் கொண்டேயிருந்தான். காம்பவுண்டுக்குள் கூட்டத்திற்கு நடுவில் வெள்ளை வெளேர் என்ற முண்டாசும் அறையில் வெண்பட்டும் ஆக இரண்டு கைகளிலும் வெள்ளைத் துணி மூடிய பெரிய தட்டு ஒன்றை ஏந்திய வண்ணம் முத்தையாவின் பெரிய பையன் நின்று கொண்டிருந்தான். வெள்ளைத் துணியை மீறி பச்சைத் தென்னம்பாளை வெளியே சற்று நீட்டிக் கொண்டிருந்தது. பக்கத்தில் சின்னப் பையன் எல்லப்பன் நின்று கொண்டிருந்தான். அவனுக்கும் ஒரு வெள்ளை முண்டாசு, அரையில் வெண்பட்டு. முத்தையா காலமாகி பத்துப் பன்னிரண்டு நாட்கள் ஓடிவிட்டன. கடைசி ஈமக்கிரியைக்காகக் கூட்டம் புறப்பட்டுக் கொண்டி ருந்தது.

தாதன் நகர்ந்தான். பெரிய பையன் தொடர்ந்தான். கூட்டமும் தொடர்ந்தது. அக்கம்பக்கத்து வீட்டு வாசல்களிலும், ஆணும் பெண்ணுமாக வேடிக்கை பார்க்க வந்து நின்றார்கள். முதலியாரின் மனைவியும் வந்து அவர் பக்கத்தில் நின்றுகொண்டாள்.

"எல்லப்பனா அது! அடேயப்பா! முண்டாசு, பட்டு வேட்டி. எத்தினி லட்சணமாயிருக்கு புள்ளே.கருமாதிக்குப் போறாப்பலவா இருக்கு? பட்டம் கட்டிக்கல்ல கிளம்பினாப்பல இருக்கு!"

சங்கொலி நீண்ட குழாய் போலக் கேட்டது. மெதுவாகத் தேய்ந்தது.

முதலியார் உட்கார்ந்துகொண்டார். எதிர் நாற்காலியில் மெத்தைமீது படுத்திருந்த பூனை, அவர் நாற்காலியில் உட்கார்ந்த அரவம் கேட்டு, தலையைச் சற்று நிமிர்த்திப் பார்த்துவிட்டு, மீண்டும் தலையைப் போட்டுக் கண்ணை மூடிக்கொண்டது.

அந்த வருத்தத்துக்கு நடுவில் முதலியாருக்கு ஒரு புன்னகையும் வந்தது. அவர் மனைவி பாதியில் விட்டு விட்டு வந்த அடுக்களை வேலையைக் கவனிக்க உள்ளே போனாள்.

"ஆதலின் மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே. சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று பாடிக்கொண்டு "ஏய் கிட்டி, இங்க வா சொல்றேன்" என்று பூனையைக் கூப்பிட்டார்.

கிட்டி கண்ணைத் திறந்தது.

"இங்க வாடின்னா."

கிட்டி எழுந்து குதித்து அருகே வந்தது. தூக்கி மடியில் வைத்துக் கொண்டு அதன் நெற்றியைக் கண் அகலத் தடவி "சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று மீண்டும் பாடினார் முதலியார்.

"கூப்பிட்டீங்களா?" என்று உள்ளே வந்தாள் அவர் மனைவி.

"இல்லியே. கிட்டியைல்ல கூப்பிட்டேன். உசிரு, வெள்ளத்திலே வாழைக்கட்டையாட்டம், தன் இச்சையில்லாம மிதந்துகினு போவுது. பெரிய உசிரு, சின்ன உசிரு எல்லாம் மிதக்கவேண்டியதுதான். அதனாலெ படா ஆளாயிருந்தாலும் மதிக்கமாட்டேன். தம்மாத்தூண்டு ஆளாயிருந்தாலும் அசட்டை பண்ணமாட்டேன்னாரு புலவரு. தெரியுமாடி கிட்டி?"

கிட்டி புரண்டு மல்லாந்து மீசையைக் காட்டி வாயைப்பிளந்து, கூர்ப் பற்களைக் காட்டிற்று.

"சங்கு ஊதிச்சு, இவ போய்ப் பார்க்கப்படாது? பேசாம கண்ணை மூடிக்கினே படுத்திருக்கா, ஏய்! முத்தையாவை கிலிமூட்டு ஆட்டிவச்சீல்ல மூணாம் வருசம் அதிகார நந்தியன்னிக்கு... சிரிக்கிறா பாத்தியா? படாகுறும்பு!" என்று கிட்டியின் பல்லைப் பார்த்தார் முதலியார்.

"போலீஸ் சூப்ரிண்ட் வவுத்திலேயே கிலி மூட்டின பெருமை அவளுக்கு. அதான் வாயெல்லாம் பல்லாகீது. எடி கூத்தியா-வாயை மூட்றீ" என்றார் முதலியார். மனைவி அதன் வாயை மூடினாள். கிட்டி முன்னங்காலால் அவள் மணிக்கட்டைத் தேய்த்தது.

மனைவி நகர்ந்தாள். "அனுப்புங்க அவளை. கொஞ்சம் வெந்நீர் சாதம் போடறேன். கார்த்தாலே ஒரு ஆளாக்கு பால் குடிச்சதுதான். ஏய், கிட்டி, வறியா?" என்று கதவண்டை நின்று கூப்பிட்டாள். குதித்து ஒரு தடவை முதுகை உயர்த்தி வளைத்துவிட்டு அவளோடு போயிற்று கிட்டி.

முதலியாருக்கு அதை நினைத்து மீண்டும் சிரிப்பு வந்தது. முத்தையா ஜில்லா போலீஸ் தலைவராக மூன்றாம் வருடம் மாற்றலாகி இங்கு வந்தார். அந்தப் பதவிக்காக ஒதுக்கப்பட்டிருந்த எதிர் வீட்டுக்குக் குடியேறினார். மறு நாள் முதல் ஊர் தூள் பறந்தது. எதிர்வீட்டு வாசல் வெறிச்சிட்டுக் கிடந்தது. வழக்கமாக வரும் எம்.எல்.ஏ.யைக் காணவில்லை. பிள்ளையார் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் பண்ணப் போவதாக விறகு வண்டிகளை யெல்லாம் மறித்து பத்துக் கட்டு பன்னிரண்டு கட்டு என்று வண்டிக்கு ஒரு டஜனாகக் கட்டுகளை இறக்கி, ஏலம் போட்டு இடுப்பில் செருகிக் கொள்ளும் கோபாலக் கோனாரின் சத்தம் கேட்கவில்லை. கழுத்து வரையில் குடித்துவிட்டு, மற்ற வண்டிக்காரர்களைச் சண்டைக்கிழுத்து, பெரிய சாக்கடையில் விழுந்து ஏற முடியாமல் யார் யாருடைய முப்பாட்டன் முப்பாட்டிகளையோவெல்லாம் வேசிகளாக்கித் திட்டிக்கொண்டிருக்கும் மாமுண்டியின் இரைச்சல் கேட்க வில்லை. ஐந்தாந்தெரு அக்ரகாரத்தில் பெண்கள் கூட மூன்று சீட்டு ஆடுவார்கள். அக்ரகாரத்திற்கு நடுநாயகமாக இருந்த பஞ்சம்பட்டு ஜமீன்தார் அய்யர் வீட்டு வாசல் கதவு திறந்து கிடந்தது. மைனரும் அவரது மற்ற ஜமீன்தார் தோழர்களும் தினப்படி ரங்காட்ட வைபவத்தை வேறு எந்த மாவட்டத்திற்கோ மாற்றிக்கொண்டு போய் விட்டார்கள் என்று தெரிந்தது. தஞ்சை ஜில்லாவில் ஒரு அக்ரகாரத்திற்கு போய்விட்டதாகத் தகவல். இந்தக் கெடுபிடியில்,

திண்ணைகள் இரண்டாம் சனிகளிலும் ஞாயிறுகளிலும் குமாஸ்தாக்கள் நடத்தும் வெற்று 304, 504 ஆட்டங்கள் கூடக் காணாமல் வெறிச்சிட்டுக் கிடந்தன. ரயில்வே ஸ்டேஷன் சாலையோரமாக காலை மாலை அந்திகளில் இருமருங்கிலும் சுருட்டு நெருப்புடன் உட்கார்ந்து, ரயிலுக்குப் போகிற பயணிகளுக்கு ஆண், பெண் என்று விலக்குப் பாராமல் அணிவகுப்பு மரியாதை நடத்திய நெசவு மகாஜனங்களைக் காணவில்லை. பேருந்து நிலையங்களில் க்யூ வரிசை. சினிமாக் கொட்டகைகளில் க்யூ வரிசை. பால் கட்டி, சர்க்கரை எல்லாம் நியாய விலைக்கு. மடளாகச் சந்தில் சிறுநீர் நெடியே இல்லை, குளப்படி கூட வழுக்கவில்லை.

முத்தையாவைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னார்கள். அவர் மாறு வேடங்களில் போவாராம்; பிச்சைக்காரன் மாதிரிப் போவாராம்; திருடன் மாதிரிப் போவாராம்; குடுகுடுப்பாண்டி மாதிரிப் போவாராம் சாஸ்திரிகள் மாதிரிப் போவாராம்; மைனர் மாதிரிப் போவாராம்; சேட்டு மாதிரிப் போவாராம்-துப்புத்துலக்க திருநெல்வேலியில் இருந்தபோது, பக்கத்து வீட்டுப் பொம்மனாட்டி முத்தையாவின் சம்சாரத்திடம் கொல்லையில் காய்த்ததாக முருங்கைக்காய் இருபது கொண்டு கொடுத்தாளாம். அது லஞ்சம் என்று சொல்லி சம்சாரத்தை மூன்று நாள் பூட்டி வைத்துவிட்டு, பிறகு ஆறு மாசம் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டு ஐயா அப்பா என்று காலில் விழுந்த பிறகுதான் அழைத்துக் கொண்டாராம். இது எவ்வளவு உண்மையோ? நல்லவன் என்றால் கோமாளியாக்கவும் தயங்கமாட்டார்கள் ஜனங்கள்

முத்தையாவை அநேகமாக இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை ஜன்னலிலிருந்து பார்க்க நேரும் இரவு ஒரு மணிக்குச் சாப்பிட்டுவிட்டு வாசல் முகப்பில் சாய்வு நாற்காலியின் சட்டத்தை முன் நீட்டி, காலை வைத்துச் சாய்ந்து சிகரெட்டு ஒன்றைப் பற்ற வைத்து காம்பவுண்டின் வாதாமர, வேப்பமரக் காற்றை நுகர்ந்து கொண்டிருப்பார் முத்தையா. அரை மணி அப்படி உட்கார்ந்திருந்து விட்டு, பிறகு உள்ளே போய்விடுவார்

அறை முன் அறையில் நடுநிசி வரை விளக்கு எரிந்து கொண்டிருக்கும். படிக்கிறாரோ, எழுதுகிறாரோ, இல்லை, கொல்லை வழியாக மாறுவேடம் அணிந்து போய்விட்டாரோ! சில நாட்களில் முதலியாருக்கு அவரோடு போய்ப் பேசலாமா என்று தோன்றும். ஒரு நாள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, கிட்டியைக் கையில் தூக்கிக்கொண்டு (கிட்டி அப்போது நாலு மாதக் குட்டி), வாசலுக்குப்போய் சற்றுத் தயங்கி அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவரைச் சிறிது நேரம் பார்த்த முத்தையா ஏதோ நினைத்துக் கொண்டு எழுந்து உள்ளே போய்விட்டார். வாசல் கதவு தாழிடப்பட்டு விட்டது. அந்த வாய்ப்புப் போய்விட்டது. ஏன் தயங்கி நின்றோம் என்று தன் கோழைத்தனத்தை நொந்து கொண்டே கிட்டியோடு உள்ளே திரும்பி வந்தார் முதலியார்.

ஒரு நாள் முத்தையாவின் சின்னப் பையன் வந்தான். எட்டு வயதிருக்கும். கிட்டியோடு விளையாடினான். பிறகு அதைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான். ஒரு மணி நேரம் கழித்துக் கொண்டுவிட்டுப் போனான். முத்தையா ஊரில் இல்லையோ, என்னவோ! இல்லாவிட்டால் தைரியமாக எதிர் வீட்டு வரையில் வந்து பூனைக்குட்டியை எடுத்துக்கொண்டுபோய் எப்படி விளையாட முடியும்?

அன்று மாலை இருட்டியதும் முத்தையாவின் சம்சாரம் வந்தாள்.

"நான்தாங்க-எதிர் வீடு" என்று அறிமுகப்படுத்திக் கொண்டே வந்தாள்.

"வாங்க வாங்க" என்று பெரிய இடத்து மனுஷிக்கு ஏற்ற மரியாதையும் பரபரப்புமாக வரவேற்றாள் முதலியாரின் மனைவி. "உட்காருங்க."

"பரவாயில்லே....உங்க வீட்டிலெ பூனைக்குட்டி இருக்கா?"

"இருக்கே. உட்காருங்க. உங்க பையன்கூட மத்தியானம் அதோட விளையாடிக்கிட்டிருந்தானே. தூக்கிக்கினுகூடப் போனான். உக்காருங்க"

"உக்கார நேரமில்லீங்க. அவங்க வர்ற நேரம். இனிமே அவன் கேட்டான்னா பூனைக்குட்டியைக் கொடுக்காதீங்க."

"அது என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? கொளந்தை கேட்டா, என்ன ஆயிரும்?"

இதுவும் லஞ்சமா என்று உள்ளேயிருந்த முதலியார் சிரித்துக் கொண்டார்.

"அவன் எது கேட்டாலும் கொடுங்க. ஆனா பூனைக் குட்டியை மட்டும் கொடுக்காதீங்கம்மா."

"என்ன அப்படி?"

"வேணாம். கொடுக்காதீங்க."

"அது கடிக்காதும்மா, சாது."

"அதுக்கு இல்லை. அவங்களுக்குப் பூனைக் குட்டின்னாப் பிடிக்காது."

"அவங்களுக்குப் பூனைக்குட்டியைப் பிடிக்காதா?"

"சும்மா இல்லீங்க. பூனைக்குட்டியை பாத்திட்டாங்களோ- மூஞ்சியெல்லாம் முள்ளு படந்துக்கும். வாய் கொளறும். கிலி பிடிச்சாப்பல ஓடுவாங்க."

"என்னது?"

"ஆமாங்க. பெரிய பூனையைக் கண்டா அவ்வளவு பயப்படமாட்டாங்க. குட்டிப் பூனை வந்திட்டாப்போதும், யாரோட பேசிக்கிட்டிருந்தாலும், ஒரு துள்ளு துள்ளி எழுந்து ஓடுவாங்களே பார்ப்பம், மாரெல்லாம் படபடவென்று அடிச்சிக்கும். காய்ச்சல் கூட வந்திடும். திண்டுக்கல்லில் இருந்தப்ப ஒரு நாள் சாப்பிடறப்ப ஒரு குட்டி வந்திரிச்சி. அவ்வளவுதான் அப்படியே எச்சிக் கையோட விழுந்தடிச்சிகிட்டு ஓடினாங்க பாருங்க கொல்லைப்பக்கம்! சின்ன வயசிலெ எப்படி எப்படி பயந்துகிட்டாங்களோ என்னமோ தெரியலே. பூனைக்குட்டியை மாத்திரம் பார்க்கப்படாது. சிங்கம், புலி, பெரிய பூனை எல்லாம் பார்ப்பாங்க, குட்டி மட்டும் கண்ணிலே படப்படாது" என்று ஒரு இரக்கமும் சிரிப்புமாகச் சொன்னாள் முத்தையாவின் சம்சாரம்.

முதலியாரின் மனைவியும் இரக்கத்துடன் சிரித்தாள்

"இன்னிக்கி, அதிகாரநந்தி, லீவு விட்டிருக்காங்க; சிநேகிதங்களோட சினிமாவுக்குப் போகணும்னான், சின்னவன், காலையிலே பிடிச்சி கேட்டுக்கிட்டே

இருந்தான். மாட்டேன்னிட்டாங்க. அவங்க மத்தியானம் சாப்பிடக் கூட வரலெ. இவன் நச்சு பிடுங்கிக்கிட்டெ யிருந்தான். சாயங்காலம் வந்தாங்க. அவங்க சாப்பிட்டிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டாங்க. இந்தப் பய உங்க வீட்டுப் பூனைக் குட்டியை எடுத்துகிட்டு வந்தான். "யப்பா பூனைக்குட்டியைக் கொண்டாந்திருக்கேன். என்ன சொல்றீங்க. சினிமாவுக்குப் போகவிடறீங்களா இல்லையா?"ன்னு குட்டியைக் காண்பிச்சான். அவ்வளவுதான். ஒரே பாச்சலாகப் பாஞ்சாங்க, மாடியைப் பார்க்க. உள்ள போய் கதவைச் சாத்திக்கிட்டாங்க. அப்புறம் நான் போனேன். ஆடர்லிக்குப் போன் பண்ணி இந்தச் சனியன் பிடிச்சவனைச் சினிமாக்கு அழைச்சிட்டுப் போகச் சொல்லுன்னாங்க. அது இருக்கா கொண்டு போய் விட்டிட்டானான்னு கேட்டாங்க. பூனைக்குட்டின்னு கூடச் சொல்லமாட்டாங்க. அதுன்னுதான் சொல்லுவாங்க. நிச்சயமாக் கொண்டுவிட்டிட்டான்னு சொன்னப்பறம்தான் கதவைத் திறந்தாங்க. பார்த்தா பேயறைஞ்சாப்ல இருந்தது மூஞ்சி, கண் எல்லாம்."

"ஆச்சரியமால்ல இருக்கு!"

"எனக்கும்தான் சிரிப்பா வருது. என்ன செய்யிறது?" என்றாள் முத்தையாவின் மனைவி.

பிறகு ஐந்து நிமிடம் பேசிவிட்டு, மீண்டும் எச்சரித்து விட்டு அவள் விடை பெற்றுக்கொண்டாள். முதலியாரின் சம்சாரம் தேங்காய், வெற்றிலை, பாக்கு, குங்குமம் வைத்து அவளுக்கு விடை கொடுத்துவிட்டு வந்தாள்.

முதலியார் அதை நினைத்து நினைத்துச் சிரித்தார். சம்சாரமும் வந்து சேர்ந்துகொண்டாள். அந்தச் சிரிப்புக்குக் கீழ் ஒரு ஏக்கமும் நெளிந்தது. குழந்தைகள் இப்படியெல்லாமா வேடிக்கை காட்டும்? அறிவு விலாசம் படைத்திருக்கும்? இந்த மாதிரி படுத்திவைக்க ஒரு பூச்சி வயிற்றில் விழவில்லையே என்று முதலியார் மனைவிக்கு ஏக்கம். முதலியாருக்குக் குறை பட்டுப்பட்டுப் பார்த்துப்பார்த்து மனசு காய்ந்துவிட்டது. கடைசியில் ஏதோ நம்பிக்கை மாதிரி நிழலடித்தது. நாற்பத்தைந்து வயதில் வருகிற கோளாறு என்று சம்சாரத்தின் பேதை மனம் புரிந்து

கொள்ள ஒரு வருஷமாயிற்று. இப்பொழுது அவளுக்கு வயது ஐம்பத்து மூன்று. முதலியாருக்கு ஐம்பத்தெட்டு.

ஜன்னல் வழியாக முத்தையாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் முதலியாருக்குச் சிரிப்பு வரும்.

இப்போதும் வந்தது. முத்தையா இதயத்தில் வலி என்று இரண்டு வாரம் முன்னால் ஆபீஸில் பாதி வேலையை விட்டு வீட்டுக்கு வந்தாராம். வலிவலி என்று மார்பைப் பிடித்துக் கொண்டாராம். டாக்டருக்குச் சொல்லி அனுப்பினார்கள். தண்ணீர் கேட்டார் முத்தையா. தண்ணீர் வருவதற்குள் தலை தொங்கலிட்டுவிட்டது.

என்ன இது! பெரிய பிள்ளை வேலைக்குப் போய்விட்டான். சிறிய பிள்ளை எல்லப்பனுக்குப் பத்து வயது! எப்படிப் பொறுப்பில்லாமல் முத்தையா திடீர் என்று இறந்து போனார்? முதலியாரின் மனத்தில் அதிவேகக் கேள்விகள் எல்லாம் எழுந்து கொண்டிருந்தன.

இரண்டு பேரும் முத்தையாவின் சம்சாரத்தை நினைத்து அவதிப்பட்டார்கள். எல்லப்பனை நினைத்து மனம் கலங்கினார்கள்.

"குளிச்சிட்டு வாங்களேன். சமையல் ஆயிடிச்சு," என்றாள் சம்சாரம்.

கொல்லையில் வந்த இரண்டு பேரும் கிட்டி கத்துவதைக் கேட்டார்கள். எங்கிருந்து வருகிறது என்று புரியவில்லை. குளியல் அறையில் இல்லை. விறகு அடுக்கின அறையில் இல்லை. கழிவிடத்திலும் இல்லை. மியாவ் மியாவ் என்றில்லாமல் ஙாவ் ஙாவ் என்று காட்டுக் கத்தலாக, பயக் கத்தலாக வந்தது. கிணற்றில் எட்டிப் பார்த்தார்கள். கிட்டி நீர் மட்டத்தில் பாசி பிடித்த பொக்கை விழுந்த இரண்டு அங்குலப் படியில் பற்றிப் பற்றி நழுவிக்கொண்டிருந்தது. முழுகி முழுகி எழுந்து பற்றிக் கொண்டது.

"கிட்டி!" என்று முதலியார் தொண்டை உடையக் கூப்பிட்டார்.

"ஙாவ்" என்று நிமிர்ந்து பார்த்தது கிட்டி. அந்தப் பராக்கில் கால் நழுவி மீண்டும் தத்தளித்து, முழுகி,

அடித்துக்கொண்டு, மேட்டைப் பற்றிக்கொள்ள ஒரு நிமிஷம் ஆயிற்று.

"கிட்டி!"

முதலியார் அழத் தொடங்கிவிட்டார்.

"சும்மா அளுதுகினே நின்னா?" என்று கயிற்றையும் பக்கெட்டையும் உள்ளே விட்டார்கள்.

"கிட்டி!கிட்டி! இதைப் பிடிச்சு ஏறிக்க" என்று கத்தினாள் அவள்.

"பிடிச்சுக்கடீ கண்ணு!" என்று முதலியார் புலம்பினார்.

நாலைந்து தடவை கிட்டி முயன்று பார்த்து முழுகிற்று.

முதலியார் அங்கும் இங்கும் ஓடினார். கால் கொள்ளாமல் பறந்தார். முருங்கைக்காய் பறிக்கிற கோலை விட்டார். கிட்டி அதைப் பற்றிப் பற்றி நழுவி விழுந்தது.

"நான் என்ன ராஜேச்வரி செய்வேன்?"

பக்கத்து வீட்டில் போய் முகத்தில் பயம் தேங்க நின்றார் அவர். நாலைந்து பேர் ஓடி வந்தார்கள்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. நேரமாகிக் கொண்டே யிருக்கிறது.

முதலியார் வெட்கத்தை விட்டு எதிர் வீட்டுக்குள் ஓடினார். முத்தையாவின் சம்சாரம் பிள்ளைகளைக் கருமாதிக்கு அனுப்பிவிட்டு தரையில் குப்புறக் கிடந்தாள். உறவினர்கள் சமையல் செய்து கொண்டிருந்தார்கள்.

"அம்மா" என்றார் அவர்.

அவள் திரும்பி சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

"உங்க ஐயாவை நான் வேணும்னு பயமுறுத்தலெம்மா. பூனையும் வேணும்னு செஞ்சிருக்காது. அதுக்கென்ன தெரியும்? வேணும்னு செய்யாட்டியும் பாவம் பாவம் தானே? அது கிணத்திலெ விழுந்திடிச்சிம்மா. உசிருக்கு மன்றாடிட்டு கிடக்கு" என்று கண்ணால் நீர் விட்டார்.

அவள் பிரமைபிடித்தாற் போல நின்றாள். அவர் சொன்னது அவள் காதைத் தாண்டி மனதில் ஏறியதாகத் தெரியவில்லை.

உறவினர்கள் வந்து விசாரித்தார்கள். முதலியா தெளிவாகச் சொல்ல இரண்டு நிமிஷம் ஆயிற்று.

"ஆடர்லியைக் கூப்பிடுங்க" என்றாள், இதுவ வாயடைத்து நின்ற முத்தையாவின் சம்சாரம்.

ஆடர்லி வந்தான். " நெருப்பணைக்கிற ஆபீசுக்கு போன் பண்ணுய்யா. பூனை கிணத்திலே விழுந்திரிச்சா உடனே வரச் சொல். நான் சொன்னேன்னு சொல்லு... நீங் போங்க, வண்டி வரும் இப்ப" என்று படுத்துக் கொள்ள தயாராயிருப்பதுபோல் சொன்னாள் முத்தையாவி மனைவி.

முதலியார் போனண்டை ஓடினார். ஆடர் சொன்னான்.

அவர் வீட்டுக்குத் திரும்பி வந்து கொல்லைப் பக்க ஓடினார்; அழுது கொண்டு நின்றார். கிணற்றை எட் எட்டிப் பார்த்தார். கால் தரிக்காமல் வண்டி வருகிற என்று பார்க்க வாசலுக்கு ஓடுவார்; மீண்டும் கொல்லைக் வந்து எட்டிப் பார்ப்பார். மீண்டும் வாசல். ஆனா என்னவோ தான் அருகில் இல்லாவிட்டால் கிட் முழுகிவிடப் போவது போல மீண்டும் கிணற்றுக்கு ஓ வருவார்.

"முத்தையாவை இது கிலி மூட்டினத்துக்கா சந்தோஷப் பட்டோம். அதுதான் நமக்கு வினைய வந்திடிச்சு" என்று இடுப்பில் இரு கைகளையும் வைத்து கொண்டு மனைவியைப் பார்த்து புருவத்தை தூக்கியவாறு சொன்னார். "தெரியாமக் கூட யாருக்கு தொல்லை கொடுக்கக் கூடாது. உடனே இல்லாட் எப்பவாவது அதற்குத் தண்டனை கிடைச்சிடும்" என்றா

சம்சாரம் அதை ஒப்புக்கொள்வது போல் "பா முகத்துடன் நின்றாள்.

"வண்டி!" என்றார் முதலியார். இருவரும் வாசலி வந்து நின்ற தீயணைக்கிற மோட்டாரைப் பார்த்துவிட் அங்கே ஓடினார்கள்.

"சார், இந்த வீட்டுக்கு அதுதான் சந்தானம், பிள்ளை, பெண்ணு, பேரப்பிள்ளை எல்லாம் அதுதான்" என்று யமனைக் கெஞ்சுவது போல் கெஞ்சினார் அவர்.

வந்த நான்கு பேர்களில் ஒருவன் கயிற்றைப் பிடித்துக் கரையில் நின்றான். இன்னொருவன் இறங்கினான். அவனைப் பார்த்து என்னமோ ஏதோ என்று கண்ணை உருட்டி உருட்டிச் சீறிற்று கிட்டி. அது மூன்றாம் வருஷக் கிட்டி இல்லை. எல்லாச் சந்தானங்களின் போஷாக்கையும் ஜீரணித்து, முக்கால் நாய் அளவுக்கு வளர்ந்து கிடந்தது.

"பிடுங்கிடும் போலிருக்கே" என்றான் இறங்குகிறவன். "அந்தக் கம்பளித் துண்டைப் போடு, ட்ரைவர் சீட்டுக்கு கீள இருக்குப் பாரு, அது".

மூன்றாவது ஆள் கம்பளியை எடுத்து ஓடி வந்தான்.

இறங்க இறங்க கிட்டி சீறிற்று. திகிலும், திகில் எழுப்புகிற வெறியும் எழுப்புகிற குரல்.

'எத்தனை "ஜாலக்"காக இறங்குறான்!'. என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார் முதலியார்.

நீர் மட்டத்திற்கு அருகே உள்ள பாசிமேட்டில் கால் வைத்ததும் கரே புரே என்று கிட்டி துள்ளிற்று. அங்குமிங்கும் பாய்ந்தது, விழுந்தது, முழுகிற்று, எழுந்தது, முழுகிற்று. முதலியார் "கிருஷ்ணா, கிருஷ்ணா, வெங்கடேசா, என் அப்பா" என்று அழுதார்.

"சும்மா இருங்க" என்றாள் மனைவி.

மற்றவர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள்- உள்ளுக்குள். மேலுக்கு 'பாவம்' என்றார்கள்.

ஐந்து நிமிடமாயிற்று-கிட்டியை எட்ட லபக்கென்று கம்பளியைத் தலைமீது போட்டு மூடி லாவி விட்டான் அவன்.

"மூச்சு, மூச்சு!"

க்ராக் க்ராக் என்று கம்பளி கத்திற்று.

"மூச்சிய்யா மூச்சு."

"அட இருங்க, களுத்தைத் திருகவா பிடிச்சிருக்கேன்? காப்பாத்ததானே? மூணு நிமிஷம் வரைக்கும் மூச்சு அடக்கிக்கும். சும்மா இருங்க" என்று சொல்லிக் கொண்டே ஏறினான்.

"அவன் மேலே வரும்போது வீடு முழுவதும் அக்கம் பக்கத்துக் கூட்டம் எல்லாம் கூடி வழிந்தது.

முதலியார் வாங்கிக் கொண்டார். கம்பளியைத் தூக்கினார். சடாரென்று குதித்து, கால்களுக்கிடையே பாய்ந்து, முன் அறைக்கு ஓடிற்று கிட்டி. முதலியாரும் ஓடினார்.

அவரையும் பார்த்துச் சீறிற்று அது, சோபாவில் உட்கார்ந்தது.

"சரி, வரலெ. அப்பறம் பார்க்கறேன்" என்று நகர்ந்தார். எல்லாரும் வேடிக்கை பார்த்தார்கள்.

"தண்ணியையாவது துடச்சு விடறேனடி" என்றார் முதலியார்.

மீண்டும் சீறல்.

"சரி சரி, இல்லே இல்லே."

கூட்டம் கலைந்தது. தீயணைக்கும் படையினர்கள் ஆளுக்கு ஒரு டம்ளர் மோரும் மூன்று மூன்று ரூபாய் வெகுமதியும் பெற்றுப் போனார்கள்.

போலீஸ் சூப்ரிண்டெண்டு முத்தையா பூனைக் குட்டியைப் பார்த்து கிலி கண்ட கதை, அவரைப் பற்றிய மற்ற கதைகளைப் போல, இப்படித்தான் பரவிற்று. நல்ல வேளையாக அவர் உயிரோடிருக்கிற போது அது குடும்பத்தைத் தாண்டிப் பரவவில்லை. தெரிந்து விடவும் வாய்ப்பு நேரவில்லை. சந்ததிகளைக் கொடுத்தும் கொடுக்காமலும் விளையாடுகிற இறைவன்தான் அந்த உதவியையும் புரிந்திருக்க வேண்டும் என்று முதலியார் நம்பினார். வேறு குழந்தையைப் பயமுறுத்தக் கூட கிட்டியைப் பயன்படுத்துவதில்லை என்று அவர் சபதம் செய்து கொண்டார்.

# பாயசம்

சாமநாது அரசமரத்தடி மேடை முன்னால் நின்றார். கல்லுப் பிள்ளையாரைப் பார்த்தார். நெற்றி முகட்டில் குட்டிக் கொண்டார், தோப்புக்கரணம் என்று காதைப் பிடித்துக்கொண்டு லேசாக உடம்பை மேலும் கீழும் இழுத்துக் கொண்டார்.

"நன்னா முழங்காலை மடக்கி உட்கார்ந்து எழுந்துண்டுதான் போடேன் நாலு தடவை. உனக்கு இருக்கிற பலம் யாருக்கு இருக்கு? நீ என்ன சுப்பராயன் மாதிரி நித்ய கண்டம் பூர்ண ஆயுசா? சுப்பராயன் மாதிரி மூட்டு வியாதியா, ப்ளட் ப்ரஷரா, மண்டைக் கிறுகிறுப்பா உனக்கு?" என்று யாரோ சொல்வது போலிருந்தது. யாரும் சொல்லவில்லை. அவரேதான் சொல்லிக்கொண்டார். அந்த மனதே மேலும் சொல்லிற்று. "எனக்கு எழுபத்தேழு வயசுதான். சுப்பராயனுக்கு அம்பத்தாறு வயசுதான். இருக்கட்டும். ஆனா யாரைப் பாத்தா எழுவத்தேழுன்னு சொல்லுவா? என்னையா, அவனையா? பதினைஞ்சு லக்ஷம், இருபது லக்ஷம்னு சொத்து சம்பாதிச்சா ஆயிடுமா? அடித்தென்னமட்டை மாதிரி பாளம் பாளமா இப்படி மார் கிடைக்குமா? (கையிலேயும் ஆடுதசையிலியும் கண்டு கண்டா இப்படிக் கல்லுச் சதை கிடைச்சுடுமா?) கலியாணம் பண்றானாம் கலியாணம்! உலகம் முழுக்கக் கூட்டியாச்சு! மோளம் கொட்டி, தாலிகட்டி கடைசீ பொண்ணையும் ஜோடி சேத்து, கட்டுச்சாதம் கட்டி எல்லாரையும் வண்டி ஏத்திப்பிட்டு, நீ என்ன பண்ணப் போறே? கோதுமைக் கஞ்சியும் மாத்திரையும் சாப்பிட்டுண்டு, பொங்கப் பொங்க வெந்நீர் போட்டு உடம்பைத் துடச்சுக்கப் போறே. கையைக் காலை வீசி இப்படி ஒரு நாளைக்கு வந்து காவேரியிலே ஒரு முழுக்குப் போட முடியுமான்னேன்!"

சாமநாது சுற்றுமுற்றும் பார்த்தார். அரசமரத்து இலைகள் சிலு சிலுவென்று என்னமோ சொல்லிக் கொண்டிருந்தன. காவேரிக்குப் போகிற சந்தில் இந்தண்டையும் அந்தண்டையும் குளித்தும் குளிக்கவும் ஆண்கள், பெண்கள், குளுவான்கள் எல்லாம் கடந்துகொண்டிருந்தார்கள் முக்கால் வாசி புது முகங்கள்-போகிற வாக்கில் பட்டுப் புடவைகள், வெறுங் குடங்கள்-வருகிறவாக்கில் சொளப் சொளப்பென்று ஈரப் பட்டுப் புடவைகள், நிறை குடங்கள். ஈரக்காலில் பாதை மண் ஒட்டி மிளகு மிளகாகத் தெறிக்கிறது (கீரைத்தண்டு மாதிரி ஒரு குட்டி-ஐந்தாறு வயசு-குளித்துவிட்டு அம்மணமாக வருகிறது) காவேரியில் குளித்துவிட்டு அங்கேயே உடைமாற்றி நீல வெளுப்புடன் சேலம் பட்டுக்கரை வேஷ்டிகள் நாலைந்து வருகின்றன. முக்காலும் தெரியாத முகங்கள்.

"கலியாணமா?" என்று ஒரு சத்தக் கேள்வி. ஒரு நீல வெளுப்பு வேட்டிதான் கேட்டது.

"ஆமாம்" என்ற சாமநாது அந்த முகத்தைப் பாத்தார் கண்ணில் கேள்வியோடு. மனசிற்குள், "ஏன் இப்படிக் கத்தறே? நான் என்ன செவிடுன்னு நெனச்சுண்டியா?" என்று கேட்டார்.

"தெரியலியா?" என்றது அந்தச் சலவை ஜரிகை வேஷ்டி. "நான்தான் சீதாவோட மச்சினன்- மதுரை-!"

"அப்படியா?...ஆமாமா இப்ப தெரியறது. சட்டுனு அடையாளம் புரியலெ... இன்னும் பலகாரம் பண்ணலியே போங்கோ.... ராத்திரி முழுக்க ரயில்லெ வந்திருப்பேள்" என்று உபசாரம் பண்ணினார் சாமநாது.

"இவா, சுப்பராயரோட சித்தப்பா. குடும்பத்துக்கே பெரியவாளா இருந்துண்டு, எல்லாத்தையும் நடத்திவைக்கறவா" என்று பக்கத்திலிருந்த இன்னொரு சலவை வேட்டியிடம் அறிமுகப்படுத்திற்று மதுரை வேட்டி. அவர் போனார்.

"இவர் வந்து..." என்று என்னவோ யாரோ என்று அறிமுகப்படுத்தவும் செய்தது.

"நீங்க போங்கோ-நான் ஸ்நானம் பண்ணிவிட்டு வந்துடறேன்" என்ற சாமநாது அவர்களை அனுப்பினார்.

மனசு சொல்லிற்று. "சீதாவுக்கு மச்சினனா? சுப்பராயா, எப்படிடா இப்படி ஏழு பெண்ணைப் பெத்தே! ஒரோரு குட்டிக்குமா கலியாணம்னு ரயில் ரயிலா சம்பந்திகளையும் மாப்பிள்ளைகளையும் மச்சினன்களையும் கொண்டு இறக்கறே. காவேரியிலே கால் தட்டுறதுக்குள்ளே இன்னும் எத்தனை மச்சினன்களைப் பாக்கப் போறேனோ!"

அரசமரத்தை விட்டு, பாதை அதிர அதிர, காவேரியை நோக்கி நடந்தார் சாமநாது. (நுனியை எடுத்து இடுப்பில் செருகி, முழங்கால் தெரிகிற மூலக்கச்சம். வலது தோளில் ஒரு ஈரிழைத்துண்டு-திறந்தபாள மார்பு, எக்கின வயிறு, சதை வளராத கண், முழுக்காது-இவ்வளவையும் தானே பார்த்துக்கொண்டார்.)

காவேரி மணலில் கால் தட்டு முன்பே, தெருவிலிருந்து தவுல் சத்தம் தொடங்குவது கேட்டது. நாகஸ்வரமும் தொடர்ந்தது. பத்தரை மணிக்குமேல் தான் முகூர்த்தம். மணி எட்டுக்கூட ஆகவில்லை. சும்மா தட்டுகிறான்கள். அவனுக்குப் பொழுது போக வேண்டும். சுப்பராயனும் பொழுது போகாமல் தானே ஏழு பெண்களையும் நாலு பிள்ளைகளையும் பெற்றான்?

தண்ணீர் முக்கால் ஆறு ஓடுகிறது. இந்தண்டை கால் பகுதி மணல். ருய்ருய் என்று அடியால் மணலை அரைத்துக் கொண்டு நடந்தார்.

மேளம் லேசாகக் கேட்கிறது. கூப்பிடுவார்கள். குடும்பத்திற்குப் பெரியவன். சித்தப்பா சித்தப்பா என்று சுப்பராயன் கூப்பிட்டுக்கொண்டு வருவான். இல்லாவிட்டால் அவன் தம்பிகள் கூப்பிடுவார்கள்-என்னமோ நான்தான் ஆட்டி வைக்கிறாற்போல....கூப்பிடட்டும்...

சாமநாது பார்த்தார் -இடது பக்கம்.

ஆற்றின் குறுக்கே புதுமாதிரிப் பாலம்-புதுப்பாலம்-சுப்பராயனா அது நடந்துபோறது?....இல்லை....எத்தனையோ பேர் போகிறார்கள். லாரி போகிறது; சுமை வண்டிகள், நடை சாரிகள்-எல்லாமே சுப்பராயன் மாதிரி

தோன்றுகின்றன-லாரிகூட, மாடுகூட. சுப்பராயன் தா பாலம் இந்த ஊருக்கு வருவதற்குக் காரணம். அவ இல்லாவிட்டால் நாற்பது மைல் தள்ளிப் போட்டிருப்பார்க சர்க்காரிடம் அவ்வளவு செல்வாக்கு.

வலது பக்கம் பின்னால் வேளாளத் தெருவில்-புகை வெல்லம் காய்ச்சுகிற புகை. புகை பூத்தாற்போல அந்தண்டை கருப்பங் கொல்லை, கருப்பம் பூக்கள்-காலை வெயில் பட்டு பாதிப் பூக்கள் சிப்பி பூக்களாகியிருக்கின்றன. கூர்ந்து பார்த்தால் சுப்பராய மாதிரி இருக்கிறது... -சுப்பராயன்தான் கரும்புப் பயிரை கொண்டு வந்தான் ஊருக்கு-எதிரே அக்கரையில் நா இடத்தில் புகை. வெல்ல ஆலைப் புகை-எல்லா சுப்பராயன்.

அதோ பள்ளிக்கூடம்-சுப்பராயன்.

பாலத்துக்கு ஓரமாக கோவாப்பரட்டி-சுப்பராயன்.

"ஏன் கிடந்து வேகறேள்! உங்க அண்ண பிள்ளைதானே... அவன்! நானும் உங்க கையை பிடிச்சுண்டு படியேறி இருபது வருஷம் பாதி நாளைக்கு பழையது, வத்தக் குழம்பு, இந்தப் பவழமாலை-வே என்னத்தைக் கண்டேன்? சுப்பராயனுக்கு மாசம் நா ரூவா சம்பளம் அனுப்பிக்க முடிஞ்சுதா, உங்களாலியு உங்க அண்ணாவாலேயும்! யாரோ உறவுன்னு ஒருத்தரை பிடிச்சு மலைக்கோட்டையிலே கொண்டு படிக் வச்சேளே-நன்னாப் படிக்கிறான்னு. அது தான் முழுக் முடிஞ்சுதா உங்களாலே, உங்க அண்ணாவாலே முக்காலரைக்கால் கிணறு தாண்ட வச்சாப்பல, கட வருஷத்திலே போரும் படிச்சதுன்னு இழுத்துண்டு வந்தேள். குழந்தை ஆத்திரமாத் திரும்பி வந்தான். அலையா அலைஞ்சான். ஓடாக் காஞ்சான். லக்ஷ்மி வந்து பளிச் பளிச்சுன்னு ஆடலானா, குடும்பத்துக்குள்ளே...."

சாமநாதுவுக்குக் கேட்க இஷ்டமில்லை. அது அவர் மனைவி குரல். இப்போது காற்றில் கேட்கிறது. ஏழெட்டு வருஷம் முன்பு, நேரில் கேட்டது.

சுப்பராயனைப் படிக்கவைக்க முடியவில்லை தான். ஊருக்கு வந்தான், ஓடிப்போனான். கோட்டையில் கடையில் உட்கார்ந்து, கணக்கு எழுதினான். அங்கே சண்டை. கடைவாடிக்கை ஒருவரிடமே கடன் வாங்கி பாதி பங்குலாபத்திற்கு அதே மாதிரி மளிகைக்கடை வைத்தான். பயலுக்கு என்ன ராசி! முகராசியா? குணராசியா? சின்னக் கடை மொத்தக் கடையாகி, லாரி லாரியாக நெல் பிடித்து, உளுந்து பிடித்து, பயறு பிடித்து, இருபது வருஷத்துக்குள் இருபது லட்சம் சொத்து. உள்ளூரிலேயே கால் பங்கு நிலம் வாங்கியாகி விட்டது.

அதையே பாகம் பண்ணி சாமநாதுவுக்குப் பாதி கொடுத்தான். சாமநாதுவுக்குக் கோபம். அவர் பங்கு ஊருக்குச் சற்று எட்டாக் கையில் விழுந்தது. அது மட்டுமில்லை. ஆற்றுப்படுகைக்கும் எட்டாக்கை. சண்டை. அப்போதுதான் வாலாம்பாள் சொன்னாள் "என்ன! கொடுத்து வச்சேளா? உங்க பாட்டா சம்பாதிச்ச சொத்தா-இல்லே உங்க அப்பா சம்பாதிச்சதா? ஒண்டியா நின்னு மன்னாடி சம்பாதிச்சதை, பாவம் சித்தப்பான்னு கொடுக்கறான். இந்த தான மாட்டுக்குப் பல்லு சரியாயில்லியா? வாலு சரியாயில்லியா? பேசாம கொடுத்ததை வாங்கி வச்சுக்கட்டும். ஊரிலே கேட்டா வழிச்சுண்டு சிரிப்பா. நான் ஊர்ப் பெரியவாள்ள ஒருத்தியா இருந்தேனோ-"

" நீ இப்பவேதான் வேறயா இருக்கியே! நீ அவனுக்கு பரிஞ்சுண்டு கூத்தாடறதைப் பார்த்தா, நீ என் ஆம்படையாளா. எங்க அண்ணா ஆம்படையாளான்னே புரியலியே-"

"தூ-போறும்-அசடு வழியவாண்டாம்" என்று வாலாம்பாள் நகர்ந்து விட்டாள்.

"ம்ஹஹ" என்று அவருடைய அடித் தொண்டை மாட்டுக் குரலில் சிரித்தது-பெருமையோடு, பெருமை அசட்டுத் தனத்தோடு. பிறகு அவராகவே குழைந்து தொடர்ந்தார். "கோச்சுக்காதெ. உன் மனசு எப்படியிருக்குன்னு பார்த்தேன்."

"போரும், என்னோட பேச வாண்டாம்."

மூன்று நாள் வாலாம்பாள் பேசத்தான் இல்லை- அந்த அசட்டு விஷமத்திற்காக.

..........அவள் கண்ணை மூடுகிற வரையில் சொத்துத் தகராறு இல்லை. பாகம் பிரித்தாகிவிட்டது. ஏற்றுக் கொண்டாகி விட்டது. இனிமேல் என்ன?

ஆனால் முழு பாகமும் கிடைக்கவில்லை. சாமநாதுவின் வாலாம்பாள் இப்போது இந்த உலகத்தில் இல்லை. அவள் பெற்ற முதல் இரண்டு பிள்ளைகள்-இந்த உலகத்தில் இல்லை. மூன்றாவது பெண்-இல்லை. நாலாவது பெண்-கலியாணமாகி மூன்றாவது வருடம் கணவனை இழந்து, பிறந்த வீட்டோடு வந்துவிட்டாள். பழுப்பு நார்மடி கட்டிக் கொண்டு பிறந்த வீட்டோடு வந்து விட்டாள். குடும்ப வழக்கப்படி தலைமுடியை வாங்கி நார்ப்பட்டுப் புடவை அணிவித்தார்கள். சுப்பராய னுடைய மூன்றாவது பெண்ணோடு ஒரே பந்தலில்தான் அந்தக் கலியாணம் நடந்தது. ஐந்தாவது-பையன்-டில்லியில் ஏதோ வேலையாய்-சித்திரம் வரைகிறானாம்-ஆறாவது-பையன்-எடுப்பாள் மாதிரி. இந்த ஏழாவது பெண் கலியாணச் சந்தடியில் அலைந்து கொண்டிருக்கிறாள். "போய், குளிச்சுட்டு வாங்களேன், சட்சட்டுனு. பெரியவாளா யாரு இருக்கிறது?" என்று அவன்தான் அவரைக் காவேரிக்குக் குளிக்கத் துரிதப்படுத்தி அனுப்பினவன்.

ஈரிழையை இடுப்பில் கட்டி முடிச்சிட்டு சாமநாது தண்ணீரில் இறங்கினார்: முழுக்குப் போட்டு, உடம்பைத் தேய்த்தார்.

பாலத்தின்மீது பஸ் போகிறது. பஸ்ஸின் தலைக்கட்டு மேல் வாழை இலைக்கட்டு-ஒரு சைகிள், நாலைந்து மூட்டைகள்-கருப்பங்கட்டு-எல்லாம் சுப்பராயன். "அப்படியே அந்தப் பயலைக் கழுத்தைப் பிடித்து உலுக்கி, கண்ணு பிதுங்க...அவன் பெண் பிள்ளைகளை எல்லாம் ஒரு சாக்கில் கட்டி..." அவர் பல்லை நெறித்தார்.

"காவேரியிலே கொண்டு அமுக்கட்டும். அப்பதானே கரையேறாத நரகத்திலே கிடக்கலாம். இப்பவே போங்கோ..."

அவளேதான். வாலாம்பாள்தான், துவைக்கிற கருங்கல்லில் அவள் மாதிரி தெரிகிறது. கறுப்பு நிறம். அலை பாய்கிற மயிர்-பவழமாலை, கெம்புத்தோடு. ரவிக்கையில்லாத உடம்பு. நடுத்தர உடம்பு. அவள் காவேரியில் குளிக்கும்போது எத்தனையோ தடவை அவரும் வந்து சற்றுத் தள்ளி நின்று குளித்திருக்கிறார். யாரோ வேற்றுப் பெண் பிள்ளையைப் பார்ப்பது போல, ஓரக்கண்ணால் பார்த்திருக்கிறார். அந்த ஆற்று வெளியில், வெட்டவெளியில் ஈரப் புடவையை இடுப்பு, மேல்கால் தெரிந்துவிடாமல் சிரமப்பட்டு அவள் தலைப்பு மாற்றிக் கொள்ளும் போது ஒரு தடவை அவர் பார்த்துக்கொண்டேயிருந்து, அவள் அதைக் கவனித்ததும்-சரேலென்று அவர் ஏதோ தப்புப் பண்ணி விட்டது போல, அயல் ஆண் போன்று நாணினது....

இப்போதும் அது தெரிகிறது! ஏன் அவள் மேலுலகத்துக்கு முந்திக்கொண்டாள்?

"சம்பாதிச்சதிலே பாதி நமக்குக் கொடுத்திருக்கான். மீதியைத் தன் தம்பியோட பாகம் பண்ணிண்டிருக்கான் சுப்பராயன். அவன் பிள்ளைகளுக்கு அதிலியும் கால் கால்னுதான் கிடைக்கும்? ஏன் இப்படிக் கரிக்கிறேள்...?" என்று இந்தக் காவேரியில்தான் அவரைப் பிடித்து அலசினாள் அவள் ஒரு நாள்.

ராட்சச முண்டை! கடைசி மூச்சுவரைக்கும் என்ன நியாய புத்தி! என்ன தர்ம புத்தி!

"என்னை மனுஷனா வச்சிருந்தியேடி, என் தங்கமே-போயிட்டியேடி" என்று முனகினார். கண்ணில் நீர் வந்தது. திரும்பிப் பார்த்தார். அடுத்த துவைகல் எங்கே இருந்தது? யாரும் கேட்டிருக்க மாட்டார்கள் கேட்டாலும் சுலோகம் போலிருந்திருக்கும்.

(நர்மதே சிந்து காவேரி என்று சுலோகம் சொல்லிக் கொண்டே பிழிந்து) உடம்பைத் துடைத்துக்கொண்டு, அரை வேட்டியைப் பிழிந்து கொசுவி உதறிக் (கட்டிக் கொண்டு) விபூதி பூசிக்கொண்டு நடந்தார் சாமநாது. (சித்தப்பா சித்தப்பா என்று அர்த்றுவான் சுப்பராயன் பாவம்.)

நாயனமும் தவுலும் நெருங்கிக்கொண்டிருந்தன. அரசமரத்து மேடைமுன் நின்று பிள்ளையாரையும் கல் நாகங்களையும் கும்பிட்டுவிட்டு விரைந்தார். தெருவில் நுழைந்தார்.

கிராமமே கலியாணப் பெண் போல ஜோடித்துக் கொண்டிருக்கிறது. புதுப் புடவைகளும் நகைகளும் சிவப்புப் பாதங்களும் சிவப்பு ஆடுசதைகளும் முகங்களும் வீடு வீடாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கின்றன. நாலு திண்ணைகளில் சீட்டாட்டம். தெருவெல்லாம் சலவை வேஷ்டி. நாலு மூலைத்தாச்சி பாய்கிற குளுவான் இரைச்சல்கள்.

"மணலூரார் கலியாணம்னா கலியாணம்தான்-" சாமநாதுவே சொல்லிக்கொண்டார். அவர் குடும்பம் இந்த ஊரே இல்லை. மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் (புரோகிதம்) பிழைப்புக்காக மணலூரை விட்டு இங்கு குடியேறி ஒரு (அக்ரஹாரத்து) ஓரத்தில் ஒரு குச்சில் நுழைந்தது. இப்போது தெரு நடுவில் பக்கம் பக்கமாக இரண்டு மூன்று கட்டு வீடுகளில் சொந்த இடம் பிடித்து விட்டது. மணலூர்ப் பட்டம் போகவில்லை. உள்ளூரான்களை எகிறி மிஞ்சி வந்த இந்த நிலை சாமநாதுவின் பார்வையிலும் நடையிலும் இந்தக் கணம் எப்படித் தெறிக்காமல் போகும்? உள்ளூர், வந்தவர்கள் எல்லாரும் பார்க்கட்டும்.

அவர் வீடு, சுப்பராயன் வீடு இரண்டும் அண்ணன் தம்பியாக நிற்கின்றன. இரண்டு வாசல்களையும் அடைத்துப் பந்தல், திண்ணையெல்லாம் புது வேட்டிக் கூட்டம். உள்ளே கூடத்தில் பூ, பிச்சாணா, குழந்தைகள் இரைச்சல், ட்ரங்குகள்.

தாண்டிக் கொண்டு உள்ளே போனார். வேட்டியைக் கட்டிக்கொண்டார். கொல்லைக்குப் போய்க் காலை அலம்பி வந்து ஜபத்திற்கு உட்கார்ந்தார். முன்பெல்லாம் அறையின் நான்கு சுவர்களிலும் கிருஷ்ணன், ராமன், பிள்ளையார் என்று வரிசையாகப் படங்கள் மாட்டியிருக்கும். இப்போது ராமனும் கிருஷ்ணனும் பிள்ளையாரும் பூஜை அலமாரிக்குள் மட்டும் இருந்தார்கள். சுவர்களில் மாது எழுதின படங்களாக மாட்டியிருக்கின்றன.

மாது-அவருடைய மூன்றாவது பையன். கலியாணத்திற்கு வரவில்லை. சுப்பராயன் பெண்கள் பிள்ளைகள் என்ற எத்தனை கலியாணத்திற்குத்தான் வருவான்?

"அப்பா!"

கூப்பிட்டது அவர் பெண்தான். நார்மடியும் முக்காடுமாக நின்ற பெண்.

"மாப்பிள்ளையை அழைச்சு மாலை மாத்தப்போறா. பரதேசக் கோலம் புறப்படப்போறது. போங்களேன். நாளைக்கு ஜபம் பண்ணிக்கலாமே."

"சரி சரி-வரேன் போ."

அவள் ஏறிட்டுப் பார்த்தாள் அவரை, குழப்பம்.

"போயேன். அதான் (நான் இதோ) வரேன்னேனே... இதான் வேலை" கடைசி வார்த்தைகள் அவள் காதில் விழவில்லை.

முண்டனம் செய்த தலை. முப்பத்தோரு வயது. கன்னத்திலும் இருபது வயது பாலாக வடிகிறது-

"போன்னா போயேன். வரேன்."

அவள் நகர்ந்தாள்-கதவை லேசாக சாத்திக்கொண்டு, அவர் கழுத்துக்குள் அனலாகச் சுடுகிறது.

சுற்றுமுற்றும் பார்த்தார், மாது வரைந்த படங்கள். கூர்ந்து பார்த்தார், சிரிப்பு வருகிறது. ஒரு படம் முழுதும், வெறும் முழங்கால். அதில் ஒரு கண். கண்ணில் ஒரு சீப்பு செருகி யிருக்கிறது. இன்னொன்று பெண் பிள்ளை மாதிரி இருக்கிறது. ஒரு கால் பன்றிக்கால். வயிற்றைக் கிழித்துக் காட்டுகிறாள். உள்ளே நாலு கத்தி-ஒரு பால் டப்பா-ஒரு சுருட்டின சிசு. இன்னொன்று-தாமரைப்பூ-அதன் மேல் ஒரு செருப்பு, பாதிச் செருப்பில் மீசை...

என்ன இதெல்லாம்! திகைப்பூண்டு மிதித்தாற்போல மனம் ஒடுங்கிப் பார்த்துக்கொண்டே நின்றார். கால் வலிக்கிறது. எனக்குக்கூடவா?

மேளச்சத்தம்.

"அப்பா, கூப்பிடுறாப்பா"-நார்மடித் தலை எட்டிப் பார்த்தது. சிறிசு முகம்.

"இதோ."

சாமநாது வெளியே போனார்.

"சித்தப்பா, எங்க போய்ட்டேள்?"

சுப்பராயன் குரல். மூச்சு வாங்குகிற குரல், கூனல் முதுகு.

மாலை மாற்றுகிறார்கள்-பெண்ணும் பிள்ளையும். அதையும் ஊஞ்சலையும் பார்த்தால், பார்வதி பரமேச்வரனை, லக்ஷ்மி நாராயணனை பார்க்கிற புண்யமாம். ஊரிலிருக்கிற விதவைகள் கூட மூலை முடுக்கெல்லாம் வந்து நிற்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பல். ஒடிந்த பல், அழுக்கிடுக்குப் பல், தேய்ந்தபல், விதவைப் பல், பொக்கைப் பல், சமையற்காரன் கூட வந்து நிற்கிறான்.

"கண்ணூஞ்சலாடி நின்றார்...."

நாயனக்காரன் வாங்கி வாசிக்கிறான் அந்த 'ஊஞ்சலை'!

சாமநாதுக்கு மூச்சு முட்டிற்று. மெதுவாக நகர்ந்தார். வியர்வை சுடுகிறது. காற்றுக்காகக் கொல்லைப்பக்கம் நடந்தார். கூடத்தில் ஈ காக்காய் இல்லை. கொல்லைக் கட்டு வாசற்படி தாண்டி கடைசிக்கட்டு. அங்கும் யாருமில்லை. கோட்டையடுப்புகள் மொலா மொலா என்று எரிகின்றன. கூட்டம் கூட்டமாக நெருப்பு எரிந்தது. தவலை தவலையாகக் கொதிக்கிறது. சாக்கு மறைவில் எண்ணெய்ப் பாடத்தோலும் அழுக்குப் பூணூலுமாக ஒரு பயல் வெள்ளரிப் பிஞ்சு நறுக்குகிறான். வேறு ஒரு பிராணி இல்லை. பார்வதி பரமேச்வராள் மாலை மாற்றுகிற காட்சியில் இருக்கிறார்கள்.

கோட்டையடுப்புக்கு இப்பால் மேடை மீது ஒரு பாரி ஜோட்டுத் தவலை. இடுப்பளவு-மேல் வயிறளவு உயரம். பாயசம் மணக்கிறது. திராட்சையும் முந்திரியுமாக மிதக்கிறது. எப்படித்தான் தூக்கி மேடைமீது வைத்தான்களோ? மேல்

வளையங்களில் கம்பைக் கொடுத்து பல்லக்கு மாதிரி இரண்டு பேராகத் தூக்கினால்தான் முடியும்.

ஐந்நூறு அறுநூறு பெயர் குடிக்கிற பாயசம்.

நான் ஒண்டியாகவே கவிழ்த்து விடுவேன்.

சாமநாது இரண்டு கைகளையும் கொடுத்து மூச்சை அடக்கி, மேல்பக்கத்தைச் சாய்த்தார். ப்பூ-இவ்வளவு தானே. அடுத்த நொடி, வயிறளவு ஜோட்டி, மானம் பார்க்கிற வாயை, பக்கவாட்டில் சாய்த்துப் படுத்து விட்டது. பாயசம் சாக்கடையில் ஓடிற்று.

வெள்ளரிப் பிஞ்சு நறுக்குகிற பயல் ஓடிவந்தான்.

"தாத்தா தாத்தா!"

சாமநாதுவுக்கு முகம், தோலிலெல்லாம் மணல் படர்ந்தது.

அரிவாள் மணையை எடுத்துண்டுன்னா வரான் பயல், கை கால் உதறல்-வாய் குழறிற்று.

"படவாக்களா, எங்கே போயிட்டேள் எல்லோரும்-இத்தனை பெரிய எலியைப் பாயசத்திலே நீஞ்சவிட்டு விட்டு. இத்தனை பாயசத்தையும் சாக்கடைக்கா படைச்சேள்-கிராதகன்களா! மூடக்கூடவா தட்டு இல்லே?"

ஒரு வேலைக்காரி ஓடிவந்தாள்.

"என்னா பெரியசாமி!"

"ஆமாண்டி-பெரியசாமி பார்க்காட்டா. பெருச்சாளி முழுகின பாயசம்தான் கிடைச்சிருக்கும். போங்கோ, எல்லாரும் மாலை போட்டுண்டு ஊஞ்சலாடுங்கோ."

இன்னும் நாலைந்து பேர் ஓடிவந்தார்கள்.

நார்மடியும் முக்காடுமாக, அந்தப் பெண்ணும் ஓடிவந்தாள்.

வேலைக்காரி அவளிடம் சொன்னாள்.

"எப்படிப்பா இத்தணாம் பெரிய ஜோட்டியை சாச்சேள்!"

அவள் உடல், பால்முகம்-எல்லாம் குரு படர்கிறது.

“போ அந்தண்டை” என்று ஒரு கத்தல். “நான் இல்லாட்டா இப்ப எலி பாஷாணம்தான் கிடைச்சிருக்கும். பாயசம் கிடைச்சிருக்காது.”

பெண் அவரை முள்ளாகப் பார்த்தாள். கண்ணில் முள் மண்டுமோ?

சாமநாதுவுக்கு அந்தப் புதரைப் பார்க்க முடியவில்லை. தலையைத் திருப்பிக்கொண்டு, “எங்கே அந்த சமையக்கார படவா?” என்று கூடத்தைப் பார்க்கப் பாய்ந்தார்.

--பெ பெ பே பே

பே பெ பே பே எ-

ஆனந்த பைரவியில் ஊஞ்சல் பாட்டை வாங்கி நாயனம் ஊதுகிறது.

வாலாம்பாள் பாடுகிற மாதிரியிருக்கிறது.

# தாத்தாவும் பேரனும்

எதிரிகள் காவல் காக்க தட்டுத் தடுமாறி நடந்து வந்தார் கிழவர். தோற்றுப் போனவர். அது மட்டுமில்லை, மேலெல்லாம் போர்க்களத்து மண்ணும் குருதியும் பூசித் தெறித்துக் கிடந்தன. அருகே வரவர அந்த முகவாட்டமும் நடையின் தள்ளாட்டமும் விடூடபனுக்கு ஒரு கழிவிரக்கத்தைக் கூட உண்டாக்கி விட்டன. அவன் கண்ணில் ததும்பிய புன்னகை கேலி எல்லாம் மேகத்தில் பரவின. ஒளி போல மறைவது தெரியாமல் மறைந்தன. உட்கார்ந்திருந்தவன் எழுந்தே விட்டான். கிழவர் அருகே வந்துவிட்டார் எனத் தோன்றிய விடூடபனுக்கு விழுந்து வணங்க மட்டும் மனம் வரவில்லை.

"நமஸ்காரம் தாத்தா!" என்று வாயால் மட்டும் சொன்னான்.

மகாநாமர் அதை ஏற்றுக் கொள்வதுபோல் புன் முறுவல் பூத்தார். புன்னகையில் பாசம் இல்லாவிட்டாலும் கோபம் இருக்குமோ என்று துருவித் துருவிப் பார்த்தான் பேரன். ஒன்றும் தெரியவில்லை. கோபம், துயரம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. நீண்ட ஆத்ம சர்ச்சையால் விளைந்த அமைதியா, புத்தியில்லாத திட சித்தத்தில் மிதக் கும் அமைதியா என்று புரியாமல் குழம்பினான் விடூடபன்.

எப்படியாவது இருக்கட்டும். வயதில் பெரியவர். அம்மாவைப் பெற்றெடுத்த தாத்தா. நிற்க வைத்துப் பேசுவானேன்? உட்காரட்டும் என்று போர்க்கள உபயோகத்துக்காகவே கொண்டு வந்திருந்த ஓர் ஆசனத்தைப் போடச் சொல்லி "தாத்தா! உட்காருங்கள்" என்றான் அவன். மகாநாமர் உட்கார்ந்து கொண்டார். கையில் ரத்தக் கறைகள். உடலில் புழுதி. இரண்டும் படிந்த ஆடை.

ஏதாவது பேசினால்தான் கோபம் வரும். அவர் ஏதாவது சொல்லுவார். நாமும் சொல்ல நினைத்ததைச் சொல்லலாம்; இல்லாவிட்டால் இந்தப் பாழும் மரியாதை மனசிலேயே எல்லாவற்றையும் அமுக்கிச் சாக அடித்து விடும்.

"தாத்தா? என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?"

புன்னகையே பதிலாக வந்தது.

"உங்களுக்கு எத்தனையோ பேரன்கள் பேத்திகள். பட்டமகிஷி- படாத மகிஷிகள் வேறு. க்ஷத்திரிய மனைவிகள், க்ஷத்திரிய வாசனை இல்லாத மனைவிகள் இத்தனை பேரிடமும் உங்களுக்குத் குழந்தை குட்டிகள். அந்தக் குழந்தை குட்டிகளுக்கு எத்தனையோ குழந்தை குட்டிகள். அதனால் என்னை ஞாபகமிருக்கிறதா, அடையாளம் தெரிகிறதா என்று கேட்டேன்" என்றான் விடூடபன்.

கிழவர் மறுபடியும் புன்னகைதான் புரிந்தார்; பேசவில்லை.

"உங்கள் புன்னகையின் அர்த்தம் புரியவில்லை. நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டீர்களா என்று இன்னமும் எனக்குப் புரியவில்லை. எங்கள் கொடியைப் பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கலாம். இது கோசல நாட்டுப் படையென்று. கோசல நாட்டு ராஜாவாக இருந்தாரே பிரசேனஜித். அவருடைய மகன் விடூடபன்."

அவன் எதிர்பார்த்தபடியே மகாநாமரின் புருவம் சற்றுச் சுளித்தது.

"கோசல நாட்டு ராஜாவாக இருந்தாரே என்று சொல்வது புரியவில்லையா உங்களுக்கு? ஆமாம் தாத்தா, என் அப்பா செத்துப்போய் விட்டார்-உங்கள் மாப்பிள்ளை"

"என்ன?"

"ஆமாம். ஒரு மாதம்கூட ஆகவில்லை. நான் உங்களுக்குச் செய்தி அனுப்பவில்லை. அனுப்பினால் நீங்கள் வருவீர்கள். என் சபதம், ஆணையெல்லாம் கரைந்து விடுமோ என்ற பயம். சொல்லாமலேயே இருந்து விட்டேன். உங்களைக் கட்டி இழுத்து வந்து நேரேயே சொல்லி விடலாம் என்கிற எண்ணம் தான்."

சூன்யத்தைப் பார்த்துக்கொண்டு வாயடைத்து வெறித்து உட்கார்ந்திருந்தார் மகாநாமர்.

"என் அப்பா கோசல ராஜா குளிரில் விறைத்துச் செத்துப் போய்விட்டார். ஒரு நாள் வேட்டையாடப் போனவர் வெகு தூரம் போய்விட்டார் போலிருக்கிறது. திரும்பி வரவில்லை, கோட்டைக் கதவுகளைத் தாழிடச் சொல்லி விட்டேன். ராணுவ பலம், பராக்கிரமம் எல்லாம் இருந்தால் பயமும் அதிகம்தானே. அதனால்தான் அந்த மாதிரி உத்தரவிட்டேன். நடுநிசியில் அப்பா திரும்பி வந்திருக்கிறார். கோட்டை திறக்கிற சுவடேயில்லை. பசி வேறு; குளிர் வேறு. விறைத்துச் செத்துப் போய் விட்டார்."

"ஒரு சஷத்திரிய வீரனுக்கா இந்த மரணம்?"

"க்ஷத்திரியனோ, வைசியனோ-எவன் கர்மம் எவனை விடும்?.... யாரோ இறந்துவிட்டார் என்று சொல்லும் போது ஜாதியைப் பற்றியே பேசுகிறீர்களே தாத்தா, மகா ஞானியாகி, நிர்வாண நிலை அடைந்த அர்ஹதர், சித்தார்த்தர், புத்தர் உங்களுடைய அண்ணன் புதல்வர். இந்த உறவு கூடவா உங்கள் இருட்டு அழுக்கையெல்லாம் போக்கவில்லை? நீங்களே இப்படியிருக்கும்போது, வீரனைக் கண்டு யமனா பயந்து ஓடிப் போவான்? அவனவன் கர்மம் விடாது. அதனால்தான் என் அப்பா அப்படிக் குளிரில் விறைத்து இறந்து போனார். ஆனால் நான்தான் வேணும் என்றே அப்படிக் கதவைச் சாத்தி அவரைக் குளிரில் விறைக்கச் செய்து மரணத்திடம் அர்ப்பணம் செய்ததாகப் பேசிக் கொள்கிறார்கள் மூட ஜனங்கள். அப்போது சொல்லவில்லை. இப்போது சொல்கிறார்கள். அவர் ராஜாவாக இருக்கிற வரையில் என்னைக் கபிலவாஸ்துவின் மீது படையெடுக்க விட்டிருக்க மாட்டாராம். அதற்காகப் பயந்துதான் நான் அவரை அப்படி இறக்கச் செய்து விட்டேனாம். மனித புத்தி எவ்வளவு பேதைமை நிறைந்தது என்பதற்கு இந்த அபவாதமே சான்று."

"எனக்கு வயதாகி விட்டது. நான் இறந்து விட்டால் உன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாதல்லவா? உன் சபதத்தைவிட உன் தகப்பனாரின் உயிர் பெரிதல்ல உனக்கு என்று மற்றவர்கள் நினைத்தார்களோ என்னவோ?"

"பேஷ், பேஷ்! தாத்தாவுக்கு என் சபதம் ஞாபகம் இருக்கிறாற்போல் இருக்கிறதே. உங்களுக்கு ஞாபகம் இருக்கிறது என்ற செய்தியே எனக்கு வெற்றிதான்" என்று சிரித்தான் விடூடபன்.

விடூடபனுக்கு அந்தக் காட்சியை நினைத்தபொழுது ஓர் ஏளனம் உதட்டில் தவழ்ந்தது.

எல்லா அரசர்களையும்போல் சித்தார்த்தரின் கருணை வலையில் விழுந்தவன்தான் கோசல மன்னன் பிரசேனஜித்தும். கருணை வள்ளலுக்கு எதைக் கொடுக்கலாம் என்று துடித்தான். ஆனால் தானத்துக் கெல்லாம் பெரிய தானமான ஞானதானத்தை உலகுக்குத் தந்து அலைகின்ற வள்ளல், பூமியாளும் மன்னனிடம் கைநீட்டிப் பெற என்ன இருக்கிறது? "பரஞானத்தை நோக்கி ஓடும் வெள்ளத்தில் சேர்ந்துவிட்ட தங்கள் பிக்ஷுக்களுக்கு உணவளிக்கும் பேற்றையாவது எனக்கு அளியுங்கள்" என்று சித்தார்த்தரை வேண்டினான்." "நீ கேட்பது மகத்தான புண்ணியம்" என்று இசைந்தார்.

ஆனால் அந்தப் புண்ணியம் நீடித்துக் கிட்டவில்லை. முதல் நாள் வந்த பிக்குகளுக்குத் தானே நின்றிருந்து உபசரித்து அன்னமளித்தான் பிரசேனஜித். மறு நாளும் மறு நாளும் நின்றான். அரசின் அலுவல்கள் எங்கெங்கோ அவனை இழுத்துச் சென்றன. பிக்குகளை நேராகக் கவனிக்க இயலவில்லை. ஒரு வாரம், இரண்டு வாரம் ஆயிற்று. அரண்மனைச் சிப்பந்திகள் அலுத்துக் கொண்டார்கள். அசட்டை செய்தார்கள். பிக்குகளை இலை முன் காக்க வைத்தார்கள். உள்ளே காக்க வைத்தார்கள். வாசலில் காக்கவைத்தார்கள். வாசலில் வந்தவர்களை, "இங்கேயே இருங்கள். உள்ளே வரச் சொல்லலாமா என்று கேட்டுவருகிறேன்" என்று ஒரு நாள் வாசல் காப்பவன் சொல்லத் தொடங்கினான். வந்த பிக்குகள் அத்தனை பேரும் திரும்பிச் சென்று விட்டார்கள்.

பிரசேனஜித் புத்தரிடம் வேகமாக ஓடி வந்தான்.

"அரண்மனைச் சிப்பந்திகளிடம் எவ்வளவு அறிவை எதிர்பார்க்க முடியும்? பிக்குகள் சற்று இருந்து பிச்சை

ஏற்று வந்திருக்கலாகாதா?" என்று குறை குமையப் பொருமினான்.

"காத்திருக்கலாம். பழக்கமில்லாத இடத்தில் எவ்வளவு நேரம் காத்துச் சிறுமைப்படுவார்கள் அவர்கள்? அவர்கள் அப்படி முற்றிய ஞானிகளும் அல்லவே. இப்பொழுதுதானே அடியெடுத்து வைத்திருக்கிறார்கள்?"

"ஸ்வாமி! சாக்கிய ராஜாக்களின் அரண்மனையில் தங்கள் பிக்குகள் இதையெல்லாம் பாராட்டவில்லையே? சொந்த வீட்டில் போவது போல் போய்ச் சாப்பிட்டு வந்து விடுகிறார்களே".

"நீ சொன்னது சரி. இந்தச் சித்தார்த்தன் சாக்கிய குலத்தில் பிறந்தவன் என்ற ஒரே காரணத்துக்காக இந்தச் சித்தார்த்தனின் பிக்ஷுக்களையும் சாக்கிய அரசர்கள் தங்கள் சுற்றத்தார்களாகவே பாவித்து நடந்து கொள்கிறார்கள். அந்த ஸ்வாதீனம், அன்பு எல்லாம்தான் பிக்குகளுக்குச் சுதந்திரம் அளித்திருக்கின்றன. இஷ்டப்படி அங்கு போகிறார்கள்; வருகிறார்கள்."

தன்னுடைய அசட்டையைப் பூசி மெழுக நினைத்த பிரசேனஜித் அப்போது தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான். "நானும் சாக்கிய ராஜாக்களுக்கு உறவினனாக ஆகிவிட்டால்?" வெளிப்படையாக அதைச் சொல்லவில்லை அவன். அர்ஹதரை வணங்கிவிட்டுத் திரும்பி விட்டான்.

மறுநாள் சாக்கிய குலத்துக்குத் திருமணத்துக்குப் பெண் கேட்டுத் தூதனுப்பினான். மகாநாமர் உறவினர்களைக் கலந்தார். "மகாராஜா! பிரசேனஜித் மன்னர்தான். ஆனால் சுத்தமான மாற்று க்ஷத்திரியனல்ல. அவனுக்குப் பெண்ணைக் கொடுத்து நம் குல உயர்வை எப்படி இறக்கிக் கொள்ள முடியும்?" என்றார்கள் அவர்கள்.

மகாநாமர் குழம்பினார். "இவன் வேண்டுகோளை மறுக்கவும் முடியாது. கோசல நாட்டின் படை பலம் சாதாரணமல்ல. மறுத்தால், சாக்கிய குலத்தையே அழித்துப் போட்டு விடக்கூடிய பலம் அவனிடம் இருக்கிறது. அந்த மாதிரி குணம் உள்ளவன்தான் அவன்."

"ஸ்வாமி! உங்கள் பட்டமகிஷியின் பெண்ணையா கேட்கிறான் அவன்? இல்லையே. உங்கள் பெண்களில் ஒருத்தியைத்தானே மணம் செய்துகொள்ள விரும்புகிறான்? உங்களுக்கு எத்தனையோ மனைவிகள். அவர்களுக்குப் பிறந்த பெண்கள் பலர். வாஸவையின் அறிவையும் அழகையும் கண்டு உங்கள் க்ஷத்திரிய மனைவிகளின் பெண்களெல்லாம் பொறாமைப்படுகிறார்கள். தர்ப்பை நுனியைப் போன்று கூரிய புத்தி, நாணலைப் போன்ற நெடிய, துவளும் அழகு. அவள் சஷத்திரியப் பெண்ணில்லை என்றால் பிரம்மன் கூட அதை நம்பத் தயங்குவான், இந்த இக்கட்டைத் தீர்க்க இந்த வாஸவையைக் கொடுப்பதுதான் வழி. பிரசேனஜித்தின் கோரிக்கை, நம் குல உயர்வு எல்லாம் காப்பாற்றப்பட்டு விடும், பலமான கோசல நாட்டின் நட்பும் உபரியான லாபம்" என்று மகாநாமரின் உறவினன் வழிகாட்டினான்.

அந்த வழியிலேயே நடந்தார் மகாநாமர். அவருடைய அபிமான மங்கை ஒருத்தியின் மகள் வாஸவை என்பதைச் சொல்லாமலேயே பிரசேனஜித்தை மருமகனாக்கிக் கொண்டார்.

"அம்மா! என் சிநேகிதர்கள் எல்லாரும் தாத்தா வீட்டுக்குப் போய் வருகிறார்கள். ஏன் என்னை மட்டும் அனுப்பவில்லை நீ? நானும் கபிலவாஸ்துவுக்குப் போய் வருகிறேனே, ஒரு தடவை" என்று நச்சரித்துக் கொண்டேயிருந்தான் விடூடபன்.

"ஓ! அனுப்புகிறேனே" என்றாள் வாஸவை.

"தாசி மகளுக்குப் பிறந்த பேரனாயிற்றே! உன்னை யார் அங்கே வரவேற்றுச் சீராடக் காத்திருக்கிறார்கள்?" என்று மனத்துக்குள் தேம்பினாள்.

குழந்தை ஏங்கிக் கொண்டேயிருந்தான். புதிது புதிதாக, பதில் தர முடியாத கேள்விகளாகக் கேட்கத் தொடங்கிவிட்டான். கடைசியில் தந்தைக்குக் கடிதம் ஒன்று எழுதினாள் வாஸவை. "உங்கள் பேரனுக்குத் தாத்தாவைப் பார்க்க வேண்டுமாம். மற்ற அரசகுமாரர்களைப் பார்த்து, அவனுக்கும் தாத்தா வீட்டைக் காண வேண்டும் என்ற

ஆசை. ஒரே ஒரு முறையாவது தருவித்துச் சிறிது காலம் வைத்துச் சீக்கிரம் அனுப்பி விடுங்கள். கோசல நாட்டு அரண்மனையில் நான் க்ஷத்திரியப் பெண்ணாக உலவுகிறேன். உங்கள் பேரனும் சுத்த க்ஷத்திரியனாகத்தான் உலவுகிறான். சிறு குழந்தையின் உள்ளத்தை நினைத்து இதைத் தாங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.".

கடிதம் சென்றது. பேரனுக்கு அழைப்பும் வந்துவிட்டது. விடூடபன் ரதமேறிக் கிளம்பினான்.

கபிலவாஸ்துவின் அரண்மனையில் எல்லோரும் அவனை வியப்புடன் பார்த்தார்கள். தாத்தா வந்து கட்டிக் கொண்டார். தன்னைவிட வயதில் பெரியவர்களை யெல்லாம் விழுந்து விழுந்து வணங்கினான் விடூடபன். பிறகு சுற்றிலும் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய், குழந்தாய்?" என்று கேட்டார் மகாநாமர்.

"இங்கு என்னைவிட வயதில் சிறியவர்களே கிடையாதா? நான் எல்லோருக்கும் நமஸ்காரம் செய்கிறேனே ஒழிய, எனக்கு ஒருவரும் செய்யக் காணோமே? கோசலத்தில் என் தம்பிமார்கள் எனக்கு நமஸ்காரம் செய்வதுண்டே. இங்கு என்னைவிடச் சிறியவர்களே இல்லையா?" என்றான் விடூடபன்.

"இருக்கிறார்கள். நீ வரும் சமயத்தில் இல்லை. எல்லாரும் உல்லாசமாக வனபோஜனம் செய்யச் சென்றிருக்கிறார்கள். வசந்த காலம் அல்லவா? உல்லாசமாக வனாந்தரங்களுக்குப்போய் இருக்கிறார்கள். ஒரு மாதத்தில் திரும்பி வந்து விடுவார்கள்."

"நானும் போய் அவர்களைப் பார்க்கிறேனே" என்றான் விடூடபன்.

"போனால் போகிறது. அரண்மனையில் இருக்கிறது. பிறகு அவர்களோடு போய்ச் சேர்ந்து கொள்கிறது."

ஆனால் அது நடக்கவில்லை. அன்றிரவு எல்லாரும் சேர்ந்து உட்கார்ந்து உணவருந்தினார்கள். பையன் பசியாற,

மனதாரச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கூட இருந்தவர்கள் வேடிக்கையும் கேலியுமாகப் பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். மகாநாமரும் வேடிக்கையாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார். அவர்களுக்கெல்லாம் பசியே கிடையாதா? இப்படியே சிரித்து விளையாடிக் கொண்டிருந்தால் எப்போது சாப்பிடுவது, எப்போது முடிப்பது? உணவுப் பண்டங்களைத் தொடுகிறார்கள். கையில் எடுத்து வைத்துக் கொள்கிறார்கள். வாயில் போட்டுக் கொள்வதற்குள் பேச்சு, சிரிப்பு. இப்படியே, சாப்பாடு முடிந்தது. எல்லோரும் சிரித்தே, பேசியே வயிற்றை நிரப்பிக்கொண்டு விட்டார்கள் போலிருக்கிறது. பாத்திரங்களில் உணவு அப்படியே இருந்தது.

சாப்பாடான பிறகு தோட்டத்துக்குப் போனான் விடூடபன். கூட வந்த தாத்தா கோசல ராஜ்யம், அரண்மனையெல்லாம் பற்றி விசாரித்தார். படிப்பு, பயிற்சி பற்றி விசாரித்தார். வில்வித்தை, அஸ்திர சஸ்திரப் பயிற்சிகளைப் பற்றிக் கேட்டார். சோலையும் நட்சத்திரங்களும் இரவின் நிசப்தமும் போதையூட்டின. தாத்தா போன பிறகுகூட அவன் அங்கயே உட்கார்ந்திருந்தான். வேலைக்காரன் ஒருவன் மட்டும் மெய்க்காவலாக நின்று கொண்டிருந்தான்.

திரும்பி உள்ளே வரும்பொழுது, சாப்பிட்ட இடத்தின் வழியே வந்தார்கள். சாப்பிட்ட இடம் எல்லாம் சுத்தி செய்து கருக்காகப் பளபளத்தது. அது என்ன? அந்தப் பலகை மட்டும் அப்படியே இருக்கிறது! அவன் உட்கார்ந்த பலகை மட்டும் அப்படியே இருந்தது. மாயீ மாயீ, என்று கூப்பிட்டான் கூட வந்த காவலன்.

"ஏன்"

"என்ன பண்ணிட்டிருக்கே?"

"பலகையெல்லாம் அலம்பிண்டிருக்கேன், பால் போட்டு."

"இந்தப் பலகையை எடுத்துப் போகவில்லையா?"

"நீதான் அலம்பேன்."

"என்னது!"

"ஆமா. தாசி மகன் உட்கார்ந்த பலகையைக் கூட நான்தான் எடுக்கணுமா? ராஜகுமாரங்க உட்கார்ந்த பலகைகளைத்தான் இந்தக் கை சுத்தி பண்ணும்" என்று உள்ளேயிருந்து பதில் வந்தது. அதைக் கேட்டதும் கேட்காததுமாகச் சரேலென்று உள்ளே பாய்ந்தான் விடூடபன். ஒரு நிசப்தம். ஓர் அசட்டு மௌனம்.

விடூடபனுக்கு உடம்பு எரிந்தது; பரந்தது. எதையோ நொறுக்கி விடுவதுபோல் கையிரண்டையும் இறுக மூடிக் கொண்டான்-விரல் எலும்புகளே நொறுங்கி விடுவது போல. தாத்தாவிடம் சென்றான்

"வா, குழந்தாய்!"

"இன்னும் சாப்பிடவில்லையா, தாத்தா?" என்றான் பையன்.

"உன்னோடுதான் உட்கார்ந்து சாப்பிட்டேனே!"

"அதில்லை, நிஜச் சாப்பாடு?"

"என்ன சொல்கிறாய்?"

"அது பொய்ச் சாப்பாடல்லவா? சாப்பிடுவதுபோல பாவனை செய்தால் பசியாறி விடுமா? அதுதான் நிஜச் சாப்பாடு சாப்பிட்டீங்களா என்று கேட்டேன்" என்றான் விடூடபன்.

"நீ என்ன சொல்கிறாய் என்றே புரியவில்லையே!"

"புரியவில்லையா? சாப்பாட்டறையில் பலகைகளைக் கழுவி வைக்கிற பணிமகளைக் கேட்டால் புரிந்துவிடுமே?" என்றான் விடூடபன். அவன் உதடு நடுங்கிற்று. கன்னச்சதை கோணிற்று. குரல் கம்மி அழுவதுபோல் நடுங்கிற்று, சோக அழுகையல்ல. கோப அழுகை. உடல் பரந்தது. நூறு ஆட்களின் பலம் அவன் உடலில் ஏறுவது போல் அவனைப் பார்த்து திகைத்தார் மகாநாமர்.

"குழந்தாய், சற்று இரு. சாப்பாட்டறையில் நானே போய் விசாரித்து வருகிறேன்" என்று எழுந்தார் அவர்.

"தாத்தா!" என்று பெரிய குரலில் அதட்டினான் விடூடபன். முள் போட்டு இழுத்தது போல் நின்றார் மகாநாமர்.

"என்னைப் பார்த்துப் பேசுங்கள். என் அம்மா வாஸவை உங்கள் புதல்விதானே?"

"ஆம்!" என்ற பாவனையில் தலையாட்டினார் அவர்

"அவள் தாயார் க்ஷத்திரிய மங்கைதானே?"

"..................."

"சொல்லுங்கள்"

"..................."

"அப்படியானால் பலகை கழுவுகிறவள் சொன்னதுதான் உண்மையா? அவள் க்ஷத்திரியப் பெண் இல்லை என்று அவள் சூசனையாகச் சொன்னது உண்மையா?"

"..................."

"சொல்லுங்கள். மகாராஜாக்கள் க்ஷத்திரியரல்லாதவர்களை மணப்பது அநீதியல்ல. வாஸவையின் தாயார் க்ஷத்திரியப் பெண்ணல்லவே!"

அந்த இளம் குரலில் தெறித்த ஆற்றாமையையும் அதிகாரத்தையும் கேட்ட மகாநாமர் ஏதோ மின்னலைத் திடீரென்று பார்த்ததுபோல் செயலோய்ந்து நின்றார்.

"தாத்தா!"

மகாநாமர் 'இல்லை' யென்று தலையசைத்தார்.

விடூடபனுக்குத் தன் தாயின் தயக்கம், சாப்பிடுகிறவர்களின் போலிச் சாப்பாடு, போலிப் பேச்சு, போலி உற்சாகம் எல்லாம் கண்முன் வந்தன.

"அதனால்தான் நீங்கள் பொய்ச் சாப்பாடு சாப்பீட்டீர்கள், இல்லையா?"

"................."

"பதில் வேண்டாம், தாத்தா! நான் இந்த ராஜ்யத்தை விட்டுக் காலையில் போய்விடுவேன். மறுபடியும் எப்பொழுதோ வருவேன். ஆனால் நீங்கள் கூப்பிட்டு வர மாட்டேன். நானாக வருவேன். படையோடு வருவேன். உங்களை முறியடிப்பேன். உங்களைக் கட்டிப்போட்டு அடித்து, என்னோடு உட்கார்ந்து சாப்பிடும்படி செய்யப் போகிறேன்" என்று கத்திவிட்டு விரைந்தான்.

திடீரென்று புன்னகை மறைந்து விடூடபன் முகத்தில் அம்பு பட்ட வேதனை படர்ந்தது. க்ஷத்திரிய மனைவியின் மகளல்ல, தாசி குலம் என்று தெரிந்தவுடன் அம்மாவை என்ன பாடு படுத்தி வைத்தார் அப்பா! அவளுக்கிருந்த கௌரவம், அந்தஸ்து எல்லாவற்றையும் அழித்து, அவள் மனத்தைப் புண்படுத்தி, புழுவாகத் துடிக்க வைத்து...சீ ஊர் குலம் என்று சொல்லி எத்தனை கேவலமான, எத்தனை இருளான பள்ளங்களில் எல்லாம் விழ முடிகிறது மனிதனால்!

விடூடபனின் கையிரண்டும் கோபத்தில் மீண்டும் மூடிக் கொண்டன. தகப்பனாரின் வெறி, மக்களிடையே இருந்த அந்த வெறி எல்லாவற்றையும் நொறுக்குவது போலக் கையிரண்டும் மூடி இறுகின....

அன்றும் அர்ஹதர்தான் காப்பாற்றினார். பிரசேனஜித்தின் அறியாமையைக் கண்டு இரங்கினார். 'இது என்னப்பா காரியம்! வாஸவை க்ஷத்திரியப் பெண் இல்லை என்று என்னால் நம்பமுடியவில்லையே. பட்டமகிஷிக்குப் பிறந்தால் என்ன, வெறும் மகிஷிக்குப் பிறந்தால் என்ன? மகாநாமரின் பெண்தானே அவள்? அவளோடு இவ்வளவு இழைவாக, இப்படி இரண்டறக் கலந்துவிட்டு, திடீரென்று அவள் குலம் நினைத்துக் கோபம் வருவதென்றால், நீ செய்தது அன்பாகத் தோன்றவில்லையே. அன்பில்லாதது மட்டும் இல்லை. எத்தனை அறியாமை! எத்தனை பாபம்! உன்னை நம்பி வந்த ஒரு பெண்ணின் நம்பிக்கையை, மென்மையைக் கூடக் காக்க முடியாத இந்த இயல்பை க்ஷத்திரிய வீரம் என்றா சொல்கிறாய்?" என்று நயமும் உரமுமாகக் கலந்து பிரசேனஜித்தின் கண்ணைத் திறந்தார் சித்தார்த்தர். அம்மாவின் கண்ணீரும் நின்றது.

விடூடபன் உதட்டில் மீண்டும் புன்னகை பிறந்தது. ரத்தக்கறையும் புழுதியுமாக உட்கார்ந்திருந்த தாத்தாவைப் பார்த்தான்.

"தாத்தா! சிரிக்கிறேனே என்று பார்க்கிறீர்களா! என் கண்ணுக்கு முன்னால் ஒரு படம் எழுந்தது. அதைக் கண்டதும் சிரிப்பாக வருகிறது. ஒரு தபஸ்வி உட்கார்ந்திருக்கிறார். அவரைக் காண ஒரு வேடன்

வருகிறான். கனி கொண்டு வருகிறான். "அப்பா! என்னைத் தொடாதே! வாயைத் திறக்கிறேன். அந்தக் கனியை மட்டும் பிளந்து வாயில் போட்டு விடு" என்று வாயைத் திறக்கிறார். அந்த மாதிரி, ஒரு ராஜாவிடம் அழகான ஒரு பெண் வருகிறாள். கணவன் மனைவியாக ஆகிறார்கள் இருவரும். ஆனால் ராஜா மட்டும் இன்னும் அவள் தொட்ட எந்தப் பண்டத்தையும் சாப்பிடமாட்டார்" என்று சொல்லிச் சிரித்தான் விடூடபன்.

"தாத்தா! காசியில் பரம அக்னிஹோத்ரிகளாக விளங்கும் வேதியர்கள் தான் இப்படிக் குலம் பிறவி எல்லாம் பாராட்டுகிறார்கள் என்று நினைத்தேன். க்ஷத்திரியர்கள் அதைவிட ஒருபடி மேலே இருக்கிறார்களே ஒழிய குறையவில்லை. கிரிவிரஜத்தில் நூற்றுக்கணக்காக யாகம் செய்த வேதியர்களை மிஞ்சிவிட்டீர்கள்."

"விடூடபா! நான் தோற்றுப்போய் உன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறேன். ஏன் வீணாக என்னோடு பேசிக் காலத்தை வீணாக்குகிறாய்? என்ன செய்வதாக உத்தேசம்?"

"உங்களைத் தண்டிக்கப் போகிறேன்."

"தண்டி. சீக்கிரம் செய்."

"சீக்கிரம் செய்து விடுகிறேன். எனக்கும் பசியாகத்தான் இருக்கிறது.....யாரங்கே! தாத்தாவுக்கும் எனக்கும் சாப்பாடு கொண்டு வைக்கச் சொல்லுங்கள். தாத்தா என்னோடு சேர்ந்து சாப்பிடப்போகிறார். இப்பொழுது.....தாத்தா, இந்தத் தண்டனைதான் உங்களுக்கு.. உங்கள் பேரனோடு இன்று சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட வேண்டும். நீங்கள், சம்மதம்தானே?"

"அதற்கென்ன!.... ஆனால் இப்படியேவா உன் தாத்தாவைச் சாப்பாட்டுக்கு அழைக்கிறாய்? இந்த ரத்தக் கறைப் புழுதியோடா! போர்க்களத்திலிருந்து நேராக போஜனகளமா? குளித்துவிட்டு, உடம்பை நன்கு சுத்தம் செய்து கொண்டு சாப்பிடுவோம்."

"அதை வேண்டாம் என்று சொல்லவில்லை வாருங்கள். நானும் ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன்."

எல்லோரும் நகரில் புகுந்து அரண்மனைக்குச் சென்றார்கள். விடூடபன் குளித்துவிட்டு, பிரார்த்தனைகள் செய்தான். புத்தாடை உடுத்திச் சாப்பாட்டுக்குத் தயாரானான்.

"தாத்தாவை அழைத்து வாருங்கள்!"

"தாத்தா திரும்பி வரமாட்டார் போலிருக்கிறது" என்றார் அமைச்சர்.

"என்னது!"

"ஆமாம், அரண்மனைக் குளத்தில் குளிக்கப் போனார். தாடி நீளம் அவருக்கு. தாடியாலேயே முழங்காலையும் முகத்தையும் சேர்த்துப் பிணைத்துக்கொண்டாராம். இறுக முடிந்து குளத்தில் உருண்டு விட்டாராம். விழுந்தவர் இன்னும் நீர்மட்டத்துக்கு வரவில்லை."

"ஹும்" என்று எழுந்தான் விடூடபன்.

தடாகக்கரைக்கு விரைந்தனர் எல்லோரும். மகாராஜாவை விழுங்கின தடாகம் வயிறு புடைக்கத் தின்றவன் போல உறங்கிக் கொண்டிருந்தது.

"எல்லோரும் மரணத்துக்குப் பயப்படுவார்கள். தாத்தா சாப்பாட்டுக்கே பயந்து விட்டார். அவர் சுத்தமான க்ஷத்திரியர். சுத்த க்ஷத்திரியர்கள் தோற்றுப்போகலாம். தற்கொலை செய்து கொள்ளலாம். எந்தப் பெண்களையும் தீண்டிச் சுவைக்கலாம். அவர்கள் தொட்டதை மாத்திரம் சாப்பிடக் கூடாது. என்ன அழகான தர்மம்! அவரது மகிமைகளைப் பற்றி அர்ஹதரிடம் சொல்ல வேண்டும்" என்று கூறிக்கொண்டே நகர்ந்தான் விடூடபன்.

# புண்ணிய பாங்க்

ராயப்பேட்டை ஆஸ்பத்திரி வாசலில் ஒரு புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான் சிதம்பரம். தன் முகமே அழகாகத் தெரிந்தது அவனுக்கு. அவன் சிரிக்கிறது அழகாக இருக்கும்; புன்சிரிப்பும் அழகாக இருக்கும். கண்ணாடியில் பார்க்கும்போது அதை நன்றாகப் பார்த்திருக்கிறான். சிவகாமு வேறு அடிக்கடி சொல்லுவாள். "நீங்க எப்பவும் சிரிச்சுண்டே இருங்கோ, நான் பார்த்துண்டே இருக்கேன். கஷ்டமெல்லாம் மறந்து போயிடறது அப்ப." இன்னொரு தடவை என்ன சொன்னாள்? "நீங்க கறுப்புத்தான். தலையும் நன்னா நரை கண்டுடுத்து. உங்க மூஞ்சியும் சாதாரண மூஞ்சிதான். லக்ஷணம் இல்லை. ஆனா நீங்க சிரிச்சா என்ன அழகாயிருக்கு தெரியுமா? அதுவும் அப்ப கண்ணுக்கிட்ட கன்னச் சதை நெருங்கிக்கிறதே-அப்ப எங்கிருந்தோ ஒரு களை வந்துடறது." ரசம் போன கண்ணாடியக் கையில் வைத்துக் கொண்டு அவள் சொன்னது சரிதானா என்று பார்த்திருக்கிறான் சிதம்பரம். ரொம்ப சரி! எத்தனை கருக்காகச் சொல்லுகிறாள்! என் மூஞ்சி சாதாரணம்தான், கறுப்புதான். ஆனால் சிரிக்கிறபோது அவள் சொல்லுகிறாற்போல எங்கிருந்தோ இந்த அழகு, இந்தக் களை வந்துதான் விடுகிறது. இது யாருடைய அழகு? சிரிப்பின் அழகா? அந்தச் சிரிப்புக் கூட நான் சிரிக்கிறதுதானே? எப்படி இந்த அழகு வந்தது அதற்கு? என்று குழம்புவான். இப்போது ஆஸ்பத்திரி வாசலில் நிற்கும் போது கண்ணாடி முன் பார்க்கிறாற் போல்தானிருந்தது அவனுக்கு.

திடீர் என்று நெருக்கின பன்றி ஊளையிடுவது போல் ஒரு சத்தம். சட்டென்று திரும்பிப் பார்த்தான். இன்னும் பல போக்கு வரத்துக்களும் திரும்பிப் பார்த்தன. ஒரு டாக்ஸி 'பிரேக்' போட்டு நின்றது. ஒரு பயல் அரைபடாமல் தப்பிவிட்டான். முகத்தில் கோபம்.

"ஏன்யா ஓசைப்படாம வந்து ஏத்தப் பாத்தியே. இந்த ஹார்னை எதற்காக வச்சிருக்கே? அளகு பார்க்கவா?"

"ஏ முண்டம்! இது ஆஸ்பத்திரி. இங்கே ஹார்ன் அடிக்கப்படாதுன்னு தெரியாது? ஒரு மயிரிழை தப்பியிருந்தா இப்ப உன் உடம்பை அளகு பாத்திட்டிருப்பாங்க எல்லாரும். தெரியுமா?"

அசடு வழிய நடந்தான் பிழைத்தவன். டாக்ஸி போயிற்று.

சிதம்பரத்துக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது. "யாரு என்ன சொல்ல முடியும்! ஒரு இம்மி-பகவானும் யமனுக்கு ஒரு பிரேக் போட்டான். அவனுக்கா தெரியாது?" என்று சொல்லிக் கொண்டே நடந்தான். பைகிராப்ட்ஸ் சாலையைக் கடக்கும் போது சீதாராமண்ணா வந்து கொண்டிருந்தார்.

"அண்ணா, நமஸ்காரம்!" என்று கத்தினான் சிதம்பரம்.

"சிதம்பரமா?"

"ஆமாண்ணா-எங்கே இப்படி? மார்க்கெட்டுக்குப் போய்ட்டு வராப்பல இருக்கு."

"ஆமா-எங்கே இப்ப கார்த்தாலே கிளம்பினே?"

"பொண்ணுக்கு டிப்தீரியாண்ணா. ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலே 'அட்மிட்' பண்ணியிருக்கிறேன்."

"டிப்தீரியாவா?" மனிதன் மண்டையில் அடித்தாற் போல் நின்றார்.

"ஆமாண்ணா."

"இப்ப எப்படி இருக்கு?"

"சரியாயிடும்கறார் டாக்டர்."

"இப்ப எங்கே போறே?"

"சென்ட்ரலுக்குப் போறேண்ணா. அரக்கோணத்திலேந்து எங்க அக்கா வரா. அழைச்சிண்டு வரணும், வரட்டுமாண்ணா?"

"சரிப்பா!"

செலவுக்கு ஏதாவது வேண்டுமோ என்று இன்னொருவராக இருந்தால் கேட்பார்கள். சீதாராமண்ணா கேட்கவில்லை. திருப்பதிக்கு முடியிறக்கப் போகிறே

னென்று மூன்றாம் வருடம் எதையோ சொல்லி அவரிடம் வாங்கின ஏழு ரூபாயைத் திருப்பித் தரவில்லை. அவர் கேட்டாரா? "நீங்க பேசாமப் போறது தப்பில்லைண்ணா" என்று நினைத்துக் கொண்டே நடந்தான் சிதம்பரம்.

சட்டென்று நெஞ்சில் சிலாம்பு குத்திற்று. என்ன சொன்னோம்? அரக்கோணத்திலிருந்து அக்கா வருகிறாள் என்றா? தங்கை வருகிறாள் என்று சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதோ? போயும் போயும் பொழுது விடிந்ததும் விடியாததுமாக அக்காளையா கூப்பிடவேண்டும்? கடைசியில் ஒன்றும் உண்மை இல்லை. அக்காளும் வரவில்லை, தங்கையும் வரவில்லை. சென்ட்ரலுக்கு அவன் போகிறதே வேறு காரியத்துக்காக.

"டிப்தீரியா, உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ" என்று டாக்டர் முந்தாநாள் சொன்னார். உடனே கொண்டு போய்ச் சேர்த்தாகி விட்டது. டாக்ஸி, வீட்டில் உள்ள குழந்தைகளுக்குப் பகோடா, காரா பூந்தி, மாமூல்கள்-என்று பத்து நாள் செலவுக்கு வைத்திருந்த பணம் ஒரு போதில் கரைந்து விட்டது. அவளானால் ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். காலையில் குழந்தைகளுக்குப் பழையது போட்டு டீ போட்டுக் கொடுத்துவிடலாம். மத்தியானச் சாப்பாட்டுக்கு அரிசி?

முழங்காலைக் கட்டிக் கொண்டு, இருட்டில் குழந்தைகளின் சிறு குறட்டைகளுக்கு நடுவில் உட்கார்ந்து கிடந்தான். மூன்றாவது பெண் சற்றைக்கொரு தரம் தூக்கத்தில் காலைத் தூக்கித் தூக்கி அவன் மீது போட்டது. குதிரை எலும்பைத் தூக்கிப் பட்பட்டென்று போட்டால் வலி எடுக்காமல் என்ன செய்யும்? சற்று நகர்ந்தாற்போல உட்கார்ந்தான். இனிமேல் நகர இடமில்லை. கண்டான் முண்டான் போடும் மரப்பெட்டி. அதன் அடியில் இடைவெளி. அந்த இடைவெளியிலிருந்த கொசுக்கள் அவன் நெருங்கி உட்கார்ந்ததும் என்னமோ பாதாம் ஹல்வா, போண்டாவெல்லாம் வீடுதேடி வந்தாற் போல மொய்த்துப் பாடத் தொடங்கி விட்டன.

வெகு நேரம் வரையில் அந்த இருட்டில் சினிமாப் பார்த்தான் சிதம்பரம். நிஜ சினிமா இல்லை. அது மாதிரி.

னக்கண் முன் நண்பர்கள் எல்லாம் வந்துவிட்டுப் போனார்கள். தூரத்து நண்பர்கள், உறவுகள், நெருங்கினவர்கள், பழைய முதலாளிகள், இலேசாகப் பழகினவர்கள் எல்லோரும் நடமாடிவிட்டுப் போனார்கள். ம்! ஒருத்தர் மிச்சமில்லை. எல்லாரிடமும் அவன் வாங்கி விட்டான். அரை ஒன்று, ஐந்து...அவன் பேச்சைக் கேட்டு ஐம்பது ரூபாய் கொடுத்தவர்கள் கூட இருக்கிறார்கள். இப்போது கூடக் கேட்டால் கொடுப்பார்கள். ஆனால் பழையதை மறக்கும் வழக்கம் இல்லையே இவர்களுக்கு. ஏதாவது தாட்டியாகப் பேச ஆரம்பித்தால்?

சிதம்பரத்துக்கு ஒரு கெட்ட பழக்கம், முன் கோபம். கொஞ்சம் ஏடாகோடமாகச் சொன்னால், "சும்மா இரு. பல்லை உடைச்சுப்பிடுவேன்" என்றுதான் சொல்லுவான். பலபேர் பின் வாங்கியுமிருக்கிறார்கள். பலபேர் அதைக் கேட்டுப் பயந்தே போயிருக்கிறார்கள். அந்த மாதிரி ஏதாவது நாளைக்கு வாயில் வந்துவிட்டால்!

திவசம், முடியிறக்குவது, பூணூல் கலியாணம், அக்ஷராப்யாசம், மனைவிக்குக் குறைப் பிரசவம், பெரிய பிள்ளைக்குச் சம்பளம்-இப்படி மரபு பிறழாத பல காரணங்கள் சொல்லி எத்தனையோ ஐந்தும் பத்தும் வாங்கியாகி விட்டது. சைக்கிள் பஞ்சராகிவிட்டது. நடுத் தெருவில் நிற்கிறது. பர்ஸை அடிச்சிண்டு போயிட்டாண்ணா-ரண்டு ரூவா மருந்துக்குன்னு வச்சிருந்தேன். இப்படி மரபு பிறழ்ந்த பொய்களையும் சொல்லி இரண்டு, மூன்று என்று எல்லாம் வாங்கிவிட்டான்.

இனிமேல் சொல்ல ஒன்றும் இல்லை. சொல்லிக் கேட்கிற ஆளும் இல்லை. நடுநிசியில் பார்த்த இந்தச் சினிமாவில் ஒரு முகம்கூட அவனை ஆதரிக்கிற முகமாக இல்லை.

மாசச் சம்பளம் என்று எங்காவது அமர்ந்திருந்தால் இந்தக் கவலை எல்லாம் இராதுதான். ஆனால் மாசச் சம்பள வேலை அவனுக்கு ஒத்து வருவதில்லை. இருந்துதான் பார்த்தான். ஐந்தாவது மட்டும்தான் படிப்பு, அதனால் ஆள்கார வேலைதான் கிடைத்தது. பாங்குக்குப் போய்ப் பணம் கட்டி வருகிறது; குழந்தைகளைப்

பள்ளிக்கூடம் கொண்டு விடுகிறது; லாரியில் ஏற்றின சாமான்களைச் சேருமிடத்தில் சேர்த்து விட்டுக் கையொப்பம் வாங்கிக் கொண்டு திரும்புகிறது. இந்த மாதிரி எத்தனையோ பார்த்தாகிவிட்டது. மாசச் சம்பளம் கொடுக்கிறவர்களுக்கு என்னமோ ஆளையே விலைக்கு வாங்கி விட்டதாக பாத்தியம். இவனுடைய இருபத்து நான்கு மணி நேரமும் தம்கையில் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக ஒரு பேயாசை. வேறு காரணங்களும் இருக்கலாம். பொதுவாக ஒத்துவரவில்லை.

அதனால்தான் எடுப்பாளாகப் போனது. வேலை செய்தால் கூலி. வேண்டாம் என்றால் இல்லை. எங்காவது விருந்து நடந்தால் தண்ணீர் நிரப்புகிறது-எடுத்து சப்ளை செய்கிறது. எது வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் போய் வாங்கித் தருகிறது. ஒரு தடவை காசிக்குப் போகிற ஒரு கிழவிக்கும் கிழவருக்கும் ஒத்தாசையாகப் போனான். நாசிக் என்ன, ஹரித்வாரம் என்ன, ரிஷிகேசம் என்ன, காசி என்ன, பிரயாகை என்ன, கயை என்ன-இப்படி மூன்று மாசம் நிம்மதியாகப் போயிற்று. புண்ணியம், பாவம், உபகாரம் செய்த திருப்தி, நாலு ஊர் பார்த்த அனுபவம்-இப்படி அந்த யாத்திரையில் கிடைத்த லாபம் சொல்லித் தரமில்லை. ஒரு சினிமாவில் ஆள் வேண்டும் என்றார்கள். ஒரு ஹோட்டலில் கொடுத்த தோசையைப் பார்த்து ஒருவன், "வரட்டியா தோசையா?- பெரட்டிப் போட்டு மறந்து போயி பயணம் போன வயணத்தாலே ரொட்டி வேஷம் கட்டிச்சா, தொரட்டி போட்டுத் தூக்கும்படி முரட்டுக்குணம் வந்ததேன்? இதுக்கு வரட்டுத் தோலு வந்ததேன்?" என்று பாடுகிறான். அதைப்பார்த்து எல்லாரும் சிரிக்கிறார்கள். ஒரு ஓரத்தில் உட்கார்ந்து சிதம்பரமும் வாய் வலிக்கச் சிரித்தான். படம் பிடித்து முடிந்ததும் நாலு ரூபாய் கொடுத்தார்கள். இதே மாதிரி நாடகங்களில் நோயாளியாகவும், சபையோராகவும், துவாரபாலகனாகவும் அவன் நடித்ததுண்டு. ஆனால் எதிலும் ஒட்டிக் கொள்வதில்லை. குணம் அதற்கு இடம் கொடுத்ததில்லை. பல்லை உடைப்பதாகக் கூறிவிட்டு வெளியேறிய இடம் எத்தனையோ? போன மாசம் ஒரு நண்பனைத் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் ஏற்றிவிடப்

போனபோது வண்டியில் அவ்வளவு கூட்டமில்லை. ஆடி மாதத் தளர்ச்சி. சும்மா ஒரு துண்டை எதிர்த்த மேலடுக்கில் போட்டு விரித்து வைத்தான். அரைமணி கழித்து "சார்! சார்! டில்லியிலேயிருந்து வர்றேன், சார். ரண்டு நாளாகத் தூக்கமில்லே, கொஞ்சம் நீட்டிப்படுத்தால் தேவலை போலிருக்கு" என்று ஒரு பைஜாமா ஓடிவந்து காலில் விழாத தோஷமாகக் கெஞ்சினார். துண்டை எடுப்பதற்கு ஒரு ரூபாய் சன்மானம் கிடைத்தது. இப்படி எதிர்பார்க்காமல் வலிய வந்து அவனைச் சீதேவி அணையவில்லையா என்ன? அதனால் எடுப்பாளாக இருப்பது அப்படி மோசமான வேலையில்லை. ஆண்டவன் தீனபந்து, கருணாமூர்த்தி என்கிறார்களே, அதை ஒவ்வொரு நிமிஷமும் உரைத்துப் பார்த்து, மாற்றுச் சொல்ல எடுப்பாள் வேலையைவிட ஒரு சோதனை இருக்க முடியுமா, என்ன? ஆனால் தான் அர்த்தம், தெய்வம் என்று மலையாளி சொல்கிறது போல நாமும் முயற்சி செய்தால் தெய்வமும் கைகொடுக்கும். அந்த முயற்சி என்ன என்று காணத்தான் இருள் எல்லாம் விழித்துக் கிடந்தான். உண்மையாகவே இரவு முழுவதும் இருட்டாகவே போய்விட்டது.

விடியற்காலையில் எழுந்து, டீ போட்டுப் பழையதைப் பிசைந்து குழந்தைகளுக்குப் போட்டுவிட்டு அவளுக்கும் கொஞ்சம் டீயை எடுத்து சின்னக் கூஜாவில் எடுத்துக் கொண்டு கிளம்பும்போது டாக்ஸிக்காரன் ஒருவன் வழியோடு போகிறவன், நிறுத்தி, "வண்டி வேணுமா சார்?" என்று கேட்டான்.

"அடெடெ! எனக்கெதுக்கப்பா... எனாமா வாணா ஏத்திக்கிட்டுப் போ. ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போகணும்".

"நான் எக்மோர் போறேன் சாமி."

போய்விட்டான் அவன். அவன் போன பிறகு சடாரென்று ஒரு மின்னல் அடித்தது, நாமும் எழும்பூர் போனாலென்ன? போய்?...... போர்ட்டருக்குப் போட்டியாக முடியாது. நீலச்சட்டை, வளையம் எல்லாம் வேணும். அப்புறம்! பேஷ்! பேஷ்!'

வழி பிறந்துவிட்டது. 'எத்தனை பேர் புதிது! ஊர் சுற்றிக் காண்பிக்கலாமே! டாக்ஸி பிடித்துக் கொடுக்கலாமே! ஆகா!'

டீயைக் குடித்துவிட்டு ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்தான் சிதம்பரம். எழும்பூர் போக முடியாது. எழும்பூரில் வந்து இறங்குபவர்களில் பாதிப்பேர் நம்ம ஊர்க்காரன்கள். சென்ட்ரலுக்குத்தான் அதிர்ஷ்டம் அடித்தது.

பையில் இருக்கும் ஏழு பைசாவைப் பஸ்ஸுக்குச் செலவழித்து விட்டால் பசிக்கு? ரவுண்ட்டாணாவில் வெற்றிலை பாக்கு வாங்கி, மென்று, புகையிலையை அதக்கி மீதியைப் பைக்குள் வைத்துக் கொண்டு நடந்தான்.

பசிக்கு வெற்றிலையைப் போன்ற பரிகாரம் உலகத்தில் வேறு எங்கே இருக்கிறது? கொஞ்சம் புகையிலையையும் போட்டுவிட்டால் சோறு எதற்கு? பசிக்கிறபோது கொஞ்சம் புகையிலை. இன்னும் ஒரு மணிநேரத்துக்குக் கவலையில்லை, சென்ட்ரல் வந்து விட்டது.

எந்த வண்டி வந்ததோ, கீழண்டை வாசலில் சாரி சாரியாக வந்தது ஜனவெள்ளம். பார்த்துக்கொண்டே நின்றான். பஸ்ஸும் காரும் போக விட்டுச் சாலையைக் கடந்தார்கள். எதிர்ச்சாரிக்குப் போனார்கள். அதையும் பார்த்தான். சிலையாக நின்ற டாக்டர் ரங்காச்சாரியைப் பார்த்தான்.

மனசு ஒரு துள்ளுத் துள்ளிற்று. பலகையில் கண்ட சிவப்பு எழுத்துக்கள் அவனை அபயம் தந்து "வா வா" என்று சைகை செய்தபோது மயிர்க்காம்பெல்லாம் பரபரத்தது.

"பகவானே, வழி காட்டினியே! எனக்காக இது தோணலே. நீதான் இங்கே கொண்டுவிட்டே என்னை" என்று மனசுக்குள்ளேயே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து சாலையைக் கடந்தான். ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான்.

"ஏன்யா! ரத்தம் எடுத்துக்கறாங்களாமே... எப்படிப் போறது அதுக்கு?"

"என்னா சாமி-ரத்தம் குடுக்கப் போறியா? இஞ்சவா. நான் அளச்சிட்டுப் போறேன். கும்பல்ல போய் நின்னா ரொம்ப நேரமாகும்..."

"நான் பார்த்துக்கறேன்பா. எங்கேன்னு சொல்லு"

"பரவால்லே சாமி.. ரத்தம். குடுக்கப் போறே.. உளச்சுச் சம் பாரிச்ச ரத்தம். நான் இதுகூடச் செய்யக் கூடாதா? வா, சாமி!"

பெயரைப் பதிவு செய்து கொண்டார்கள். அங்கே நிற்கச் சொன்னார்கள். இங்கே நிற்கச் சொன்னார்கள்.

"ரொம்ப எடுத்திடுவாங்களாய்யா ரத்தத்தை?"

"அதெல்லாம் இல்லே சாமி, கொஞ்சம்தான். எகிறிப் போனா அஞ்சு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ்-பயப்படாதே சாமி."

ரத்தம் கொடுக்க ஒரு வரிசை நின்றுகொண்டிருந்தது.

மணி எட்டு, ஒன்பது, ஒன்பதரை!

அப்பாடா! ஒருபாடாக வந்து சேர்ந்தார்கள் ஊசியை வைத்தார்கள்.

"திரும்பிக்க அய்யா அப்பாலே."

"ம்....ஜமாய்ங்க-எத்தினி வேணும்னாலும் எடுத்துக்குங்க" சிரித்தான் சிதம்பரம்.

ஊசி குத்திற்று.

கண்ணை மூடி அப்பால் திரும்பிக் கொண்டான். எத்தனை நேரமாயிற்றோ? எந்த உயிர் பிழைக்கப் போகிறதோ, இதைக் குடித்துவிட்டு பகவானே! இந்தப் புண்ணியமாவது சம்பாதித்துக் கொடுத்தியே! வெறும் புண்ணியம் இல்லை. பணம் பெற்றுச் சம்பாதித்துக்கிற புண்ணியம். ரத்தத்தை ரொம்ப எடுத்திடமாட்டானே...

என்னமோ ஒரு யுகம் மாதிரி இருந்தது. எத்தனை நேரம், உடம்பையே காலி செய்து விடுவானோ?

என்னமோ இழுத்த மாதிரி இருந்தது.

"கையை மடக்கி இப்படி உட்காரு அய்யா!"

சற்றுக் கழித்து, "எல்லோரும் இந்த ரூம்லே வந்து உட்காருங்க!" என்று ஓர் உத்தரவு பிறந்தது. இன்னும் ஏழு எட்டுப் பேர் இருந்தார்கள். சிதம்பரம் உட்கார்ந்து விட்டான். அப்படி ஒன்றும் களைப்பாக இல்லை. கிறு கிறுப்பு, மயக்கம் என்று என்னென்னவெல்லாமோ நினைத்தோமே, ஒன்றுமேயில்லை.

திடீர் என்று பூட்ஸ் ஒலிகள் கேட்டன. ஆஸ்பத்திரியில் பூட்ஸ் ஒலிக்குப் பஞ்சமில்லை. ஆனால் இவர்கள் டாக்டர்களைப் போல இல்லை. கையில் ஆளுக்கொரு நோட்டுப் புத்தகம் எடுத்து வந்தார்கள். எல்லோரும் இங்கிலீஷிலேயே பேசிக் கொண்டார்கள். ஒரு வெள்ளைக்காரன் கூட வந்திருந்தான்.

கண்ணாடி போட்ட ஆசாமி ஒருவர் அருகில் வந்தார். சிதம்பரத்துக்குப் பக்கத்தில் இருக்கிறவனைப் பார்த்துக் கேட்டார்; "நீ எதுக்கு ரத்தம் கொடுத்தே?"

"எதுக்குன்னா? ஏழு ரூபா கொடுக்கிறாங்க சாமி... இன்னும் நாலு நாள் போது கவலையில்லாமல் ஓடுமே"

"நீ அடிக்கடி ரத்தம் கொடுக்கிறியா?"

"ஓ! இத்தோட ஒன்பது தடவை!"

இன்னும் மூன்று பேரிடம் இதே கேள்வியைக் கேட்டனர் வேறு இருவர்.

"நான் ஹார்பர்லே வேலை செய்றேனுங்க. தள்ளு வண்டி வச்சிருக்கேன். நாலு மாசத்துக்கொரு தடவை ரத்தம் குடுப்பேன். அப்புறம் ரண்டு நாள் ஓய்வெடுத்துக் கிட்டுத்தான் வண்டியைத் தொடுவேன்."

"நான் பூ விக்கிறேனுங்க. இந்த மாதிரி வந்து ரத்தம் கொடுத்தா, குடக்கூலிக்குக் கிடைச்சுப் போகும்க."

"இந்த ரத்தத்தினாலே என்ன பிரயோசனம் தெரியுமா? இது யாருக்குப் போறது, தெரியுமா?

"தெரியுங்களே. பிரசவப் பொம்பளைங்களுக்குக் கொடுப்பாங்க. குடல் ஆபரேஷன், வயித்து ஆபரேஷன் இதுங்கள்ள ரத்தம் சேதமாகும்ல- அதுக்குக் கொடுப்பாங்களாம். காரிலே கீரிலே அடிபட்டு ஆளு வந்திச்சின்னா அவங்களுக்கும் கொடுப்பாங்க."

"ரொம்ப சரி."

"அது மாத்திரம் இல்லை!" என்று இன்னொரு சட்டைக்காரர் சொன்னார். "இப்ப சீனாக்காரன் நம்பதேசத்து மேலே படையெடுத்திருக்கான்ல?"

"ஆமாங்க. நான் கூடச் சேரப் போனேன். பார்வை ரொம்பப் பளுதாருக்குன்னு ஒதுக்கிப்பிட்டாங்க."

"போனாப் போகுது. நீ இங்கே இருந்தேதான் சண்டை போட்டிருக்கியே. அங்க போய் ரத்தம் சிந்தறதுக்குப் பர்த்தியா இங்கேயே அதைக் கொடுத்துப்பிட்டே. இந்த ரத்தம்லாம் நம்ப சிப்பாய்ங்க சீனாக்காரனை எதிர்த்துப் போராடறாங்கள்ள, அவங்களுக்குக் காயம் பட்டாக் கொடுப்பாங்கய்யா."

"அப்படிங்களா!"

எல்லோரும் வேகமாக நோட்டு புத்தகங்களில் எழுதிக் கொண்டிருந்தார்கள். வெள்ளைக்காரப் பையன் கூட எழுதிக் கொண்டிருந்தான். கடைசியில் ஒருவன் மின்னல் போட்டோ எடுத்துக் கண்ணைக் கூச அடித்தான். வெள்ளைக்காரன் எல்லோரிடமும் வந்து கை குலுக்கினான். நமஸ்தே என்று கையைக் கூப்பிவிட்டுப் போனான். பூட்ஸ் எல்லாம் டொக் டொக்கென்று வெளியே நடந்து போய்க் காதை விட்டு மறைந்தன.

அப்புறம் இந்தச் சீட்டை அங்கே கொண்டுபோகச் சொன்னார்கள். ஒவ்வொரு இடத்திலும் ஒரு கியூ வரிசை. கடைசியில் பணம் வாங்கும்போது மணி ஒன்றாகிவிட்டது. ஏழரை மணிக்குப் போட்ட வெற்றிலைதான். அப்புறம் 'என்னமோ சிரார்த்தத்துக்குக் கிடக்கிறாப் போலப் பட்டினி, பசியைப் பற்றிக் கவலை இல்லை. அதைப் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் புகையிலை போடாமல் ஈறெல்லாம் கடுத்து நமைச்சல் எடுத்து விட்டது. ரத்தம் கசிகிறாற் போல ஓர் அசட்டு இளிப்பு. அக்கு, அக்கு என்று மேல் கடையையும் கீழ்க்கடையையும் அடித்துக் கொண்டான். வெளியே வந்தான்.

"என்னா சார்-புறப்பட்டாச்சா?" என்றான் உதவிக்கு வந்த ஆசாமி.

"ம்."

"போட்டுக் குடு சார்."

தூக்கி வாரிப் போட்டது சிதம்பரத்துக்கு. எதைப் போட்டுக் கொடுக்கிறது?

“என்னத்துக்கப்பா?”

“நான்தானே சார் தள்ளிவிட்டேன் உன்னை? இல்லாட்டி நீ இப்போ கிளம்பி வர முடியுமா?”

அவன் என்ன செய்தான்? ஒவ்வொரு க்யூவிலும் அவனுக்குப் பக்கத்தில் வந்து நிற்பான். முதல் ஆள் நகர்ந்து, இவன் வேறு எங்காவது கவனமாக இருந்தால் “போ சார், போ...அப்புறம் பின்னாலே இருக்கிறவங்க வந்து நிப்பாங்க. இடம் போயிடும். மறுபடியும் கடைசியிலே நிக்கணும். போ, சார்” என்று சொல்லிக்கொண்டே யிருப்பான். சீட்டைக் குமாஸ்தா கொடுக்கும் போது “வாங்கிக்க சார்” என்பான். பிறகு, “இப்படி வா” என்பான்.

“நீ என்னய்யா செய்தே! கூடக் கூட வந்து நின்னியே. அதுக்காகவா- மணி ஒண்ணரை ஆகப் போவுது வந்தவுடனே பணத்தை வாங்கிக் கொடுத்துப் பத்து நிமிஷத்துலே அனுப்பிக்கப் போறாப்பல பேசினியே?”

“சார்! நான் என்ன செஞ்சிருக்கேன்னு உனக்குத் தெரியாது. இந்தக் கண்ணாலே அத்தினி வேலை செஞ்சிருக்கேன் தெரியுமா, சார்! இல்லாட்டி நீ அஞ்சு மணிக்குத்தான் வெளியே போயிருப்பே.”

பேசாமல் நடந்தான் சிதம்பரம்.

“சார், நான் வேற யாருக்காவது செஞ்சிருந்தா ரெண்டு ரூபாயைக் கொடுத்து அப்பவே அனுப்பிச்சிருப்பாங்க சார்.”

அவன் வயிறு எக்கிக்கொண்டு நின்றது. பார்த்தான் சிதம்பரம். ஒரு ரூபாயை “இன்னமே தெய்வத்துக்கு அடுக்கிற காரியமாப் பண்ணுய்யா. இந்த நாய்ப் பொளப்பு பொளைக்காதே” என்று வீசிவிட்டு அவசரம் அவசரமாக நடந்தான். சென்ட்ரல் ஸ்டேஷனில் நுழைந்து ஒரு சாம்பார் தயிர்சாதம் சாப்பிட்டுவிட்டு, அதே மாதிரி நாலு ஜதைப் பொட்டலங்களை வாங்கி, வெளியே வந்து வெற்றிலை பாக்கைப் போட்டு, ஓர் ஆட்டோவைப் பிடித்து ஏறினான்

ஆஸ்பத்திரிக்கு வந்து அவளிடம் ஒரு ஜதைப் பொட்டலத்தை நீட்டினான்.

"இன்னிக்கிச் சமைக்கலே" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு மீதிப் பொட்டலங்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"ஏன்யா! குழந்தைகளைப் பட்டினியாப் போட்டுட்டு எங்கேய்யா போயீட்டீர்?" என்றாள் அவல் விற்கிற அகிலாப் பாட்டி.

மூன்றாவது பெண் அவனைப் பார்த்ததும் 'ஏக்.ஏக்'கென்று விசித்து விசித்து அழத் தொடங்கிற்று.

ஏண்டா கண்ணா அழறே! அழப்படாது. அழப்படாது. சாப்பிட்டுட்டு அழலாம். வா. வா....வாங்கடா சந்துரு. பேபி. பட்டு."

எல்லாம் ஓடிவந்தன.

"நான் இப்பத்தான் மோருஞ்சாதமாவது பிசைஞ்சு போடலாம்னு நெனைச்சிண்டேயிருந்தேன். எங்கேய்யா போயிட்டீர்?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் பாட்டி.

"என்ன பண்றது பாட்டி? நம்ம குழந்தைகளே பெரிசுன்னு நெனைச்சிண்டிருந்தா முடியுமோ? தேசத்துக்கே இப்ப ஆபத்து வந்திருக்கு. சீனாக்காரன் இமயமலையை முழுங்கிக்கிண்டு வரான். இந்த மலைமுழுங்கி மகாதேவன்களைப் பார்த்துக் கைலாசத்து மகாதேவன் மூணாவது கண்ணைத் திறந்தான்னாப் போதும். எல்லாரும் பஸ்மம் ஆயிடுவான். ஆனா செய்ய மாட்டேங்கறானே. நம்ம சிப்பாயெல்லாம் அங்கே போய்க் குளிரிலேயும், பனியிலேயும் சண்டைபோட்டுக் காயம்படறாங்க, ஒரு குண்டு பட்டுதுன்னா ஒரு படி ரத்தம் போயிடும். அதுக்காக இங்கேருந்து நம்மையெல்லாம் ரத்தம் கொடுக்கச் சொல்லிக் கேக்கறா. நாம் என்ன செய்ய முடியும்? காசு எங்கிருக்கு நம்மகிட்டே? இந்தாடாய்யா இதையாவது எடுத்துக்கோன்னு ரத்தம் கொடுத்துட்டு வந்தேன்.

நாழியாயிடுத்து. குழந்தை, குழந்தைன்னா அவாளும் நம்ம குழந்தைகள்தானே?" என்று மறையாத சிரிப்பைச் சிரித்தான் சிதம்பரம்.

"ரத்தம் கொடுத்தீரா? ரத்த பாங்காமே, அதிலேயா?"

"ஏன், கொடுத்தா என்ன? ரத்த பாங்கா? புண்ணிய பாங்குன்னா அது?" என்று குழந்தைகளைச் சாப்பிடச் சொல்லி மூன்றாவது குழந்தைக்குச் சாதத்தை ஊட்டினான் அவன். கையலம்பி விட்ட பிறகு இலேசாகக் கை கால் உதறுவது போலிருந்தது. "அப்பாடா" என்று நீட்டிப் படுத்து இளைப்பாற ஆரம்பித்தான்.

# அதிர்வு

பள்ளிகொண்ட ரங்கநாதனை யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை. கோவிலுக்கு வந்த அத்தனை பேரும் தூணோரமாக அமர்ந்திருந்த மனிதனை மொய்த்துக் கொண்டிருந்தார்கள். நெடுஞ்சாண்கிடையாக அவன் முன் விழுந்து எழுந்தார்கள். எழுந்து அங்கேயே நின்றார்கள்.

காலம் காலமாக நீட்டின கிடையாகக் கிடக்கும் ரங்கநாதனா எழுந்து பேசப்போகிறான்? நாளைக்குப் பார்த்துக்கொண்டால் போகிறது. இந்த மனித அதிசயத்தை அப்படிச் சொல்வதற்கில்லை. திடீரென்று மறைந்தாலும் மறைந்துவிடும். இன்று ஓர் இடம், நாளை ஓர் இடமாகத் திரிகிற அதிசயம் இது; போனால் வராது என்று தான் அலை அலையாக வந்த ஜனக்கூட்டம் நினைத்திருக்க வேண்டும்.

ஜனக் கூட்டம் நினைத்ததோ, என்னவோ, அது நினைத்ததாக நினைத்தாள் செங்கமலம். ஏதாவது ஒரு கணமாவது கடவுளையும் மிஞ்சி நிற்கிற இந்த மனிதப் புகழைக் கண்டு அவளுக்கு இலேசாகச் சிரிப்பு வந்தது. பொழுது போக்கத் தெரியாத மனித உள்ளம் சிறிது நேரம் தன்னையும் மறந்து சிறுபிள்ளைத்தனமான எக்களிப்பில் பாமர ஆட்டமும் பாட்டும் பாடியாடிக் குதிக்கிறது போலிருந்தது அவளுக்கு.

உண்மையில் கோபம் தான் இந்தப் பரிகாசச் சிரிப்பாக அவள் மனத்தில் சிரித்தது. அவளுக்கும் ஆசை, இந்த அதிசயத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று. ஆனால் கூட்டம் நகருகிற வழியாக இல்லை. இரண்டு பேர்கள் கலைந்தால் நாலு பேர்கள் அடைத்துக்கொண்டார்கள்.

விலகுமோ என்று கூட்டத்தின் வெளி வட்டத்தின் அருகே சற்று நின்றாள். அவளைத் திரும்பிப் பார்த்தவர்கள்

கூட, ஏதோ கல்லை மண்ணைப் பார்ப்பதுபோல் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டார்கள். செங்கமலத்துக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது. அவளைப் பார்த்து எந்தக் கண் இரண்டாம் தடவை அவளைத் திரும்பிப் பார்க்காமல் இருந்தது?

ஒரு நாழிகை, இரண்டு நாழிகையாகிவிட்டது. நிமிர்ந்து நிமிர்ந்து கால்விரல் கடுத்தது. ஆனால் கண் கும்பலின் தலைகளையும் வேர்வை முத்திட்ட முதுகுகளையும் கடந்து செல்ல முடியவில்லை.

"வாங்கம்மா, போவோம்" என்றாள் வேலைக்காரி.

"நீங்க போங்கம்மா. உங்களுக்கு என்னத்துக்கு இந்த வம்பெல்லாம்?" என்று ஓரமாக முண்டிக்கொண்டிருந்த ஒருத்தி சொன்னாள். அதில் வீசிய கேலியைக் கேட்டு ஒரு கணம் உடல் குன்றியது செங்கமலத்துக்கு.

வேலைக்காரிக்குக்கூட அது புரிந்துவிட்டது. "ஏன், அவ்வளவு புண்யாத்மாவா இருக்கிறவங்க வேறு ஒரு தூணோரமா உக்காந்து சித்து விளையாடறது. இங்கு வந்து அலைமோது வானேன்?" என்று கடாவெட்டுகிறது போல் மாற்றுக் கொடுத்தாள் அவள்.

இது சண்டையாக வலுக்கவேண்டிய வார்த்தை. ஆனால் அவள் பதிலுக்குச் சொன்னதைத் திடீரென்று எழுந்த கண்டாமணியரவம் விழுங்கிவிட்டது. மண்டபத்தில் அடிக்கிற மணியோடு காப்பக்கிருகத்துக் கைமணியும் ஒலித்தது. கூட்டமும் முன்னே நகர்ந்தது.

"சித்து ஏந்துக்கிட்டது. தீவாராதனை பார்க்க வருது" என்றது ஒரு குரல். காலை மிதித்த அது முன்னேறுகிற கூட்டத்திலிருந்து வேகமாகப் பாய்ந்து ஒதுங்கித் தூணோரமாக நின்று கொண்டாள் செங்கமலம். ஜனத்திரள் நகர்ந்து நகர்ந்து வந்தது. உற்றுப்பார்த்தாள் அவள். கூட்டத்துக்கு நடுவே ஒரு வெற்று வட்டம். அதில் நகர்ந்து கொண்டு வந்தது அந்த மனித உருவம்.

மெதுவாக நடந்து வந்தது. அது சாதாரண உருவம் தான். நடுத்தர உயரம், சாதாரணக் கை, கால்.

"இதுக்குத்தானா இந்தக் கை மிதி கால் மிதி எல்லாம்" என்று உள்ளுக்குள்ளே நகைத்தாள் செங்கமலம். ஆனால் அந்தக் கேள்வி மலையில் கேட்கும் எதிரொலியாக நாலைந்து தடவைகள் கேட்டுவிட்டு மடிந்து விட்டன.

மாநிறம்போல் இருந்த அந்த உடல் வெறும் மானிட நிறமாக இல்லை. பளிச்சென்று உடனே கண்ணைப் பறிக்கவில்லை. ஆனால் பசும் பொன்னின் தீர்மானமான ஒளியுடன் அடக்கமாக, அழுத்தமாக ஒளிர்ந்தது. கண்ணை ஊடுருவி, நெஞ்சைக் கடந்து உள்ளே பாய்கிற எதிர்க்க முடியாத ஒளியாக ஒளிர்ந்தது. உடலில் ஒரு கட்டு. ஆனால் மனித உடலில் தோன்றுகிற சாதாரண இளமையின் கட்டாக இல்லை. அவ்வளவு இளைய வயதில்லை இந்த உடம்புக்கு, என்று கூட்டத்தில் கேட்ட செய்தியெல்லாம் ஞாபகம் வந்தது அவளுக்கு. எழுபது, எண்பது, நூறு, நூற்றிருபது என்றெல்லாம் சித்தரின் வயதைப் பற்றி மனம் போனபடி கூட்டத்தில் நடந்த ஊகம் எல்லாம் அவள் காதில் மீண்டும் ஒலித்தது.

இருபது முப்பதாக இருந்தாலும், இந்த உடற்கட்டை மனித உடலில் காண முடியாது எனத் தோன்றியது அவளுக்கு. பெண்மையின் மென்மையும் ஆண்மையின் வைரமும் மட்டுமில்லை. அவற்றையும் கடந்த ஒரு சத்து. ஒரு பொலிவு. பொலிவு என்றால் போதுமா?

முகத்தைப் பார்த்தாள். பாமரக் கூட்டத்துக்கும் புத்தியுண்டு என்றுதான் பட்டது. அது முனகினாற்போல் இந்த முகத்தின் வயதை ஒரு திட்டமாகச் சொல்ல முடியவில்லை. இருபது வயதா, முப்பதா, முந்நூறா? மூவாயிரம் கூடச் சொல்லலாம். மூன்று நாட்கள் மூன்று கணம் என்றும் சொல்லலாம், செங்கமலத்தின் அறிவு திணறியது. ஒன்றும் முடிவாகச் சொல்ல முடியாமல் தவிக்க அடிக்கும் இது என்ன, என்ன, என்ன என்று கேட்டுக்கொண்டே அவள் நின்றாள்.

பையனைப் போலவும் முதிர்ந்த நெடுங்காலக் கிழவனைப் போலவும் நின்ற அந்த உருவத்தின் கதையெல்லாம் கேள்வி கேள்வியாக அவள் கண்முன் வந்தது. இவனா, சித்தன்? எட்டுத் திக்கும் வென்று வந்த

ராஜராஜ சோழன் இவன் காலடியிலா விழுந்தான்? அந்த ராஜராஜன் கட்டிய மாபெரும் பெருவுடையான் கோவில், இவன் சென்றா கோவில் என்ற சொல்லுக்கு உரித்தாயிற்று? மந்திரத் திறம் தந்திரத்திறம் ஜன்ம ஜன்மமாகச் சித்திகொண்ட ஆசார சீலர்களுக்கெல்லாம் கைவராத அஷ்ட பந்தனம் இவன் கை பட்டா உறுதிப் பட்டது? ராஜோபசாரம் செய்து இவனையா அழைத்துப் போய் இளகி இளகி மன்னன் நெஞ்சைக் கலக்கிய அஷ்ட பந்தனத்தை இறுக்கினார்கள்? பொதிகை மலையில் இருந்து கொண்டு 'நெல்லையப்பா' என்று மூன்று முறைகள் அழைத்தும் விடை வராததால் கோவிலையே சபித்துவிட்ட கோபியா இவன்? பிறகு நெல்லையப்பனே காட்சி தந்து சினந் தணித்தானே, அந்தக் கருவூரானா இவன்? கருவூராரா-இவரா கருவூரார்? இவரா கருவூர்த்தேவன்?

தொலைவில் கேட்பது போல் கோயில் மணி கேட்டது. தொலைவில் மினுக்குவது போல் மினுங்குகிறது தீபாராதனை ஒளி. அந்த ஒளி கருவூராரின் உடலில் பட்டுத் தகதகவென்று மின்னுவது தான் செங்கமலத்தின் கண்களுக்குத் தெரிந்தது. அவள் ரங்கநாதனையோ, அவனை ஏத்தின ஏழடுக்கு ஒளியையோ பார்க்கவில்லை.

மனிதக் கூட்டம் மறுபடியும் வளைத்துக் கொண்டது. சித்தனை என்னென்னவோ கேட்டது. நோயில்லாத உடல், நொடியில்லாத நடை, பசியில்லாத வயிறு, முடையில்லாத கிடை.

"அப்படியா? அப்படியா...?" என்று இலேசாகச் சிரித்துக் கொண்டிருந்தான் கருவூரான்.

"வயித்து வலி"

"அதோ படுத்திருக்கிறானே, அவனைக் கேளு... உனக்கு...?"

"எனக்கு வீட்டில் நிம்மதி வேணும்"

"அதோ அவனையே கேளு...உனக்கு?"

"குழந்தைக்கு வலிப்பு...உசிரை வைச்சுக்கிட்டே செத்துக்கிட்டிருக்கு."

"இதெல்லாம் கவனிக்கத்தான் அவன் இருக்கிறானே" என்று தலையைப் பள்ளிகொண்டான் பக்கமாக அசைத்தான் கருவூரான்.

கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து விட்டது.

அந்த உடலையே, வயதில்லாத அந்த உடலையே, ஆண்மையையும் பெண்மையையும் சேர்த்து உண்டு கண்ணை அள்ளின அந்தக் கட்டைப் பார்த்துக்கொண்டு நின்றாள் செங்கமலம்.

முகத்தாலேயே "உனக்கென்னவோ?" என்று வார்த்தையில்லாத கேள்வியைக் கேட்டான் அவன். அந்தப் பையன், இல்லை அந்தக் கிழவன், இல்லை-அந்தச் சித்தன் தான்!

தரையை இரு கைகளாலும் தொட்டு வகிடுபட வணங்கினாள் செங்கமலம். எழுந்து நின்று பார்த்தாள்.

நிமிர்ந்து பார்த்தார் தேவர்.

"என்ன வேண்டும்?"

"சித்தின் கால் பட வேணும் என்னுடைய குடியில்."

"ம்! அப்படியா?" என்று ஆச்சரியப்படுவது போல் கேட்டார் தேவர். "அப்புறம்..?"

"....."அந்தப் புன்னகையால் சித்தை மயக்க முடியாது என்று தெரியும் அவளுக்கு. இருந்தாலும் பெண்மை பழக்கம் போகாமல் அதைப் பூத்து வைத்தது.

"ஓகோ... நாளை இரவு அங்கு வரலாமல்லவா?"

விடை சொல்ல முடியாமல் புல்லரித்தது அவளுக்கு. தலையை மட்டும் அவள் அசைத்தாள்.

"சரி, போகலாம்!"

விடை வந்ததும், வேலைக்காரியுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் அவள். தேவரின் உடல் பொலிவையும் கட்டையும் உள்ளத்தில் பதித்துக்கொண்டு அந்தச் சுமை தாங்க முடியாமல் நடந்தாள்.

வீட்டுக்குப் போய்ச் சோறு தின்னும்போது கை இலையில் வைத்தபடியே இருந்தது.

அரைத்து அரைத்துத் தேய்ந்த சந்தனக் கட்டையின் பொலிவைப்போல் முன் நின்றது அவர் நிறம். முந்தானையால் துடைத்த முத்துப் போலிருந்தது. சுட்டுச் சுட்டு ஒளிரும் பசும் பொன்னாக மலர்ந்தது. இல்லை, இதெல்லாம் அந்தப் பொலிவுக்கு உவமை இல்லை. இது மனிதர்களுக்குக் கிட்டாத காந்தி. மனித நிலையை உதைத்து மேலே சித்து நிலையில் ஏறிய ஆத்மாவின் சாயல் இது. அந்தச் சித்தன் நாளை இரவு-

"ஏம்மா எழுந்திட்டீங்க...இரண்டு கைகூட நீங்க சாப்பிடலையே" என்றாள் சமையல்காரி.

"அட!" என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "....த்ஸ....போதும் போ!" என்று கை கழுவப் போனாள்.

கண்ணாடிக்குள் நின்ற பிம்பம் அவள் அழகைக் கண்டு வியந்தது. அவளுடைய அழகைக் கண்டு மோகித்தது.

ம்ஹூம். அந்தப் பொலிவு இல்லை. ஆனால் அந்தப் பொலிவோடு ஒன்றும் கணம் நாளைக்கு வந்து விடும்.

நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அவளை இப்பாலும் அப்பாலும் தள்ளிக்கொண்டேயிருந்தன.

இவர் எப்படி வருவேன் என்று இசைந்தார்? உண்மையாக அந்தச் சொல்லை நான் கேட்டேனா? இல்லை, ஆசை இப்படி ஒரு பொய்யொலியை எழுப்பி விட்டதா? அவர் யார்? நான் யார்? அந்தப் பொன்னொளி எங்கே? இந்த இறைச்சியின் பித்தளையொளி எங்கே!

"ரங்கீ!" என்று வேலைக்காரியை அழைத்தாள் அவள்.

"ஏம்மா?"

"அவர் என்ன சொன்னார்?"

"சித்தா?"

"ம்!"

"நாளை வரேன்னு சொன்னாரம்மா?"

"அவர் சொன்னதை நீ கேட்டியோ?"

செங்கமலத்துக்கு வேலைக்காரி கேட்டதாகச் சொல்வது கூட ஒரு பிரமையோ என்று தோன்றியது. ஆனால் அவர் வருகிறேன் என்ற நம்ப முடியாத செய்திதான் இப்படி

அவளை ஆட்டி வைத்தது. இந்த ஊசலிலும் அந்தத் தேகப் பொலிவின் நினைவிலும் இரவின் இருள் வெகு வேகமாக ஓடி விட்டது. பொழுது புலர்ந்தது. உச்சிக்கு ஏறியது. சாய்ந்தும் விட்டது.

நிலைகொள்ளாமல் தடுமாறிக் கொண்டிருந்தாள் செங்கமலம். முன்னே செய்வதைப் பின்னே செய்வதும், செய்ததை அழிப்பதும், பூட்டின நகையை எடுப்பதும் மாற்றி வேறு பூணுவதுமாக உள்ளம் இடறி இடறி விழுந்து எழுந்து கொண்டிருந்தது.

"அம்மா!" என்று பரபரப்புடன் வந்தாள் வேலைக்காரி. தலையையும் கையையும் காட்டி, வரக் கூடாத வரவை அவள் அறிவித்தாள்.

இடைகழியில் வந்து நின்றாள் செங்கமலம். ஆமாம், வந்தேவிட்டார். அவர்தான்...அவர்தான். வாசற்படி ஏறுகிறவர் கருவூர்த் தேவர்தான். பேரரசன் ராஜராஜன் தலை தொட்டு வணங்கிய அதே பாதம் இந்தப் படியில் ஏறுகிறது.

நினைவையும் உடலையும் உருக்கியது அந்த உடற்கட்டும் பொலிவும் அவளுடைய இதயத்தை இறுக்கி அணைப்பது போலிருந்தன. அவளும் விழுந்து வணங்கினாள்.

கூடத்துக்கு வந்தவர் சிறிது நேரம் நின்று சுற்று முற்றும் பார்த்தார். அந்தப் புன்னகையில் வந்த கேள்விக்கு விடையாக அந்த அறையைக் காட்டினார்.

அறைக்குள் அவர் செல்ல அவளும் தொடர்ந்தாள்.

மஞ்சத்தின்மீது உட்கார்ந்தவர், பட்டு விரிப்பின் வழ வழப்பைக் கையால் தடவினார். இறைந்து கிடந்த மல்லிகை இதழ்களைப் பார்த்தார். பம்மித் தொங்கிய விதானத்துச் சித்திரத்தைப் பார்த்தார்.

எல்லாம் புதுவிதப் பார்வையாக இருந்தன. உண்மையாகவே அவர் பார்த்தாரா என்று புரியவில்லை. நெட்டுக் குத்தலாக விழுந்த பார்வை ஒவ்வொரு பொருளின் மேல் கோசத்தைச் கடந்து உள்ளே ஊடுருவுவது போலிருந்தது. ஒரு நாழிகை கழித்துத்தான்

அவள் கண்மீது விழுந்தது அந்தப் பார்வை. அப்போதும் அதே பார்வைதான். புறத்தைக் கடந்து, சொல்லச் சொல்லக் கேளாமல் ஊடுருவுகிற பார்வை.

எண்ணத்தின் மதுவில் மயங்கிக் கிடந்த அவளுக்குப் பொறுமை நழுவிக் கொண்டேயிருந்தது.

கேலியாகப் புன்னகை செய்தாள்.

அவர் உள்ளத்தில் சுருக்கென்று அது தைத்திருக்க வேண்டும். அருகே வருமாறு சைகை காட்டினார் அவர்.

'அப்பாடா!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே அவர் கரத்தைப் பற்றினாள். என்ன இது!

கரத்தைச் சற்று அழுத்திப் பற்றிப் பார்த்தாள்.

பிருபிருவென்று அந்தக் கரம் வேகமாக அதிர்ந்து கொண்டிருந்தது. கண்ணால் உற்றுப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. சாதாரணமாக இருந்தது. ஆனால் உள்ளுக்குள்ளே அதே அதிர்வு. புஜத்தைத் தொட்டாள். ஆமாம்! கணுக்காலைத் தொட்டாள். பிடரியைத் தொட்டாள். முதுகைத் தொட்டாள். தொட்ட இடமெல்லாம் படபடவென்று அதிர்ந்து கொண்டேயிருந்தது. நான்கைந்து விநாடிகளுக்கு மேல் பொறுக்க முடியாமல் கை தானாகத் தொட்ட இடத்தினின்று மீண்டது. ஆனால் மீண்டும் தொடும் ஆசை உந்தியது. கரத்தைப் பற்றினாள். பகபகவென்று அதிர்ந்த அதிர்வு, அவள் கையில் மட்டும் இல்லை, காதில் ஒலியாகக் கேட்டது. உடல் முழுவதும் ஊடுருவி உதற அடித்தது. கையைவிட மனமில்லாமல் பிடித்துக் கொண்டேயிருந்தாள். கண் மூடியது. உள்ளேயும் பாய்ந்த அந்த அதிர்வு பெரும் அரவமாகக் கேட்டது. எங்கு போகிறோம் என்று தெரியவில்லை. ஒரே வெற்று வெளியாக இருந்தது.

இருள் இல்லை. ஒளியில்லை. வெள்ளை இல்லை. கறுப்பு இல்லை, வேறு வர்ணமும் இல்லை. வேலியும் வரம்பும் மேலும் கீழும் இல்லாத வெறும் வெளியொன்றில் நிற்பது போலிருந்தது. அவளுடைய உடலில் பகபகவென்று பரந்து கொண்டிருந்த அதிர்வு மட்டும் நிற்கவில்லை. பற்றியிருந்த விரல் வழியாகப் பாய்ந்து அவள் உடல் முழுதையும் நடுக்கி அதிர வைத்து விட்டது.

அவள் கண் திறந்தது. திறந்தபோது அவர் கைப்பிடியிலிருந்து விடுபட்டிருந்ததைக் கண்டாள்.

தூங்கி எழுந்தாற் போன்ற ஓர் அமைதி, ஒரு குளிர்ச்சி. விடியற்காலையில் கண் விழித்து, கொல்லையில் கரையும் கரிச்சானைக் கேட்பது போலிருந்தது. விடியற்காலையின் சீதளக் காற்று மேலே தவழ்வது போன்ற ஒரு குளிர்ச்சி உடலை ஸ்பரிசித்தது. உடலை மட்டுமில்லை, உள்ளத்தையும் தீண்டிக் கொண்டிருந்தது.

கருவூர்த்தேவர் அவளைப் பார்த்தார்.

"என்ன இது?" என்றாள் அவள்.

"கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய் விட்டது."

ஏதோ புரிவது போலிருந்தது செங்கமலத்துக்கு.

"மின்னல் ,விளக்கின் ஒளியை விழுங்கிவிட்டது." என்றார் அவர்.

"நீங்கள் இதுவரையில் வாயைத் திறந்து பேசவே இல்லை, இப்போது பேசுவது புரியவில்லை."

"பேசித் தெரிவது ஒன்றுமில்லை. இந்நேரம் தெரியாதது இனிமேல் தெரியாது. நேற்றிரவு எதற்காக வரச் சொன்னாய்?"

அந்தக் கேள்வியைக் கேட்டு விடை தேடுவதற்காக முதல் நாளிரவை ஞாபகப்படுத்திப் பார்த்தாள் அவள். உடல் கூசிக் குன்றியது.

"வேண்டாம்" என்றாள்.

"என்ன வேண்டாம்?"

"நேற்றிரவை, இன்று காலையை, இன்று மாலையை நான் நினைக்கக்கூட முடியவில்லை. அஜீரணக்காரன் இனிப்பை எப்படி அமைதியுடன் காண முடியும்?"

"அஜீரணக்காரன் இல்லை, அமிர்தம் உண்டவன் என்று சொல்ல வேண்டும்."

"அ....! அமிர்தமா அமிர்தமா உண்டேன் நான்?"

"ஆமாம், அமிர்தத்தின் ஒரு துளி. துளியிலும் துளி. அதன் இனிப்பில் மற்றதெல்லாம் கசந்துவிட்டது."

"என் உடலையும் உயிரையும் தொட்ட மாத்திரத்தில் உலுக்கின அந்த அதிர்வு?"

"ரத்த ஓட்டமில்லை, எல்லையில்லாத வடிவத்தின் ஒரு சிறிய புள்ளியைக் கண்ட அதிர்ச்சி."

அந்தக் கட்டுடலைப் பார்த்தாள் அவள். அந்தப் பசும் பொன்னைப் பார்த்தாள்.

கருவூரார் எழுந்துவிட்டார்.

"நான் வருகிறேன்" என்றார். அவர் அதிர்ந்து போனாள். பிரிவு தாங்க முடியாமல் விசும்பி, விசும்பி அழுதாள்.

"உள்ளம் பொசுங்கி விட்டதே என்று சற்று அழ வேண்டியதுதான். இத்தனை நாட்களாக உறவாடிக் கொண்டிருந்த உறவுக்கு இந்த மரியாதை கூடக் காட்டாமல் இருக்க முடியாதுதான்."

"இல்லையே! இந்தத் திருவடி என் வீட்டை விட்டு நீங்கப் போகிறதே என்றுதான்."

"நீ வேண்டும்போது நான் வருவேன். கள்ளும் இறைச்சியும், கோவிலும் குச்சும், தேனும் நஞ்சும் ஒன்றாகவே நினைந்து விழுந்து புரள்கிற கட்டையைத் தூக்கிக் கொண்டு வருகிறேன்... ஒன்றே ஒன்று. மனிதர்களின் ஆசையைக் கெடுக்க வேண்டாம். நான் செங்கமலத்தின் மஞ்சத்துக்கு ஆசைப்பட்டு வந்ததாகவே அவர்கள் நினைத்து ஆறுதல் அடையட்டும். உனக்கும் தொல்லையில்லாமல் இருக்கும். இந்தக் கடவுள் வியாதியை எல்லாரும் தாங்க மாட்டார்கள். ஒண்டிக்கட்டையான செங்கமலம் தாங்கலாம். கருவூர்ப்பித்தும் சற்றுத் தாங்க முடியும்" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தார் அவர்.

வாசல் கதவைச் சாத்தாமல் அவர் சென்ற வழியைப் பார்த்துக் கொண்டே மேனி அதிர நின்றாள் செங்கமலம்.

ஜ௦௨

# ஒரு விசாரணை

விசாரணைதான். ஆனால் கோர்ட்டில் இல்லை, வீட்டில். வக்கீல் கிடையாது. நீதிபதி கிடையாது. சாட்சி கிடையாது. கூண்டு கிடையாது. வாதி பிரதிவாதி உண்டு. ஆனால் விசாரிக்கிறவர் வாதி கட்சிக்காகவே பேசுகிறார்.

எல்லோரும் மாடியில் ஒரு பெரிய அறையில்-ஹால் என்பார்கள்-அத்தகைய பெரிய அறையில், ஒரு ஜமக்காளத்தின் மீது உட்கார்ந்திருக்கிறார்கள்.

வாதிகள்: லோகசுந்தரி அம்மாள், அவளுடைய பெரிய மகன் வீராச்சாமி, சின்னமகன் குருமணி, பெரிய மகள் பாலாம்பாள், இரண்டாவது மகள் வேல்நாயகி, மூன்றாவது மகள் தேவயானை.

பிரதிவாதி: நாலாவது மகள் லீலா என்கிற சங்கமேச்வரி.

இவர்களைத் தவிர, விசாரிக்கிற கண்ணப்ப முதலியாரும் அவருடைய சகோதரர் பலராம முதலியாரும் அங்கு காணப்படுகிறார்கள். விசாரணைக்குள்ளாயிருப்பது லீலா. சங்கமேச்வரி என்ற பெயரே அவளுக்கு மறந்துவிட்டது. இந்த நாடகக் குழுவில் ஒரு நடிகையாக வாய்ப்பளிக்கப்பட்ட நாள் முதல், லீலா என்று அவள் தன் பெயரை மாற்றிக் கொண்டாள். நாலு வருடமாக அந்தப் பெயர்தான். சங்கமேச்வரி என்ற ஒரு பெயர் அவளுக்கு இருப்பதாகவே சக நடிகர்களுக்கோ, நாடகக் கம்பெனி முதலாளியான கண்ணப்ப முதலியாருக்கோ தெரியாது. லீலா என்ற அதிர்ஷ்டப் பெயரைத்தான் அவளுக்குக் கணக்கிட்டுச் சூட்டியதாகவும் அதன் பின்னரே, அவளுக்கு இந்த நாடகக் குழுவில் சேர்ந்து நாடக உலகில் இவ்வளவு பெரிய புகழ் இவ்வளவு சிறிய வயதில் கிட்டியது என்றும் நம்பர் ஜோஸ்யரான புரொபசர் சேஷன் சொல்லுகிறார்.

கண்ணப்ப முதலியார்: எனக்கு இந்த மாதிரி கேஸ் விசாரிக்கிறதே மணியமாப் போயிரிச்சு. நான் நாப்பது அம்பது பேரைக் கூட்டி நாடகம் நடத்தறதா? யானை, பூனை, சிங்கம், புலியைக்கூட்டி மேக்கிறாப்பலே இந்த நடிகங்களோடு மல்லடிக்கிறதா? முணுக்குன்னா கோச்சுக்கிட்டுப் போறாரே நாடக ஆசிரியரு, அவருக்கு வேப்பிலை அடிக்கிறதா? சீன் எளுதற பெய்ண்டரைக் கட்டிக்கிட்டு மாரடிப்பேனா? கண்ட்ராக்டர்களோட மல்லுக்கு நிக்கறதா! இந்தக் காதல் கேஸ் விசாரிக்கிறதா? இதோட ஆறு கேஸ் ஆயிடிச்சு. இது ஏளாவது!

"ஏம்மா லீலா! நாடகம் நடிக்கிறோம், சரி. கொடுத்த பாடத்தை மனப்பாடம் பண்றது, ஒத்திகைக்கு ஒளுங்கா வர்றது, சப்பையில்லாம நடிக்கிறது, இதோட நம்ப வேலை சரியாப் போச்சு. கணவனா நடிக்கிறவன், காதலனா நடிக்கிறவன் இவங்களையெல்லாம் நெசம்மாவே காதலிக்கிறது, கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறது- இப்படி மாறிட்டா... அப்பறம் நாடகம் எதுக்காக நடத்தணும்? நாடகம் ஒரு தனி உலகம், அதிலே வர்ற உணர்ச்சிங்களெல்லாம் மேடையிலே வரவேண்டியதுதான். வேஷத்தைக் கலைக்கிற வரைக்கும்தான். அப்பறம் நீ லீலா, அவன் ராமதாஸு, நான் கண்ணப்ப முதலி. நாலு வருஷமாகியும் நீ இன்னும் இதைப் புரிஞ்சுக்கல்லே. ஹூம்!...என்னம்மா, ஒரு ஓரமா ஒரு புன்சிரிப்பு சிரிக்கிறியே. கிண்டலா இருக்கா உனக்கு? இந்த மாதிரி நப்பாசைங்களுக்கு இடம் கொடுத்திருந்தா, நான் இப்படி இருவத்தஞ்சு வருசமாப் பேர் சொல்லிட்டு வந்திருக்க முடியாது-தெரிஞ்சுக்க. இந்த ஆசைக்கெல்லாம் இடங்குடுத்தா நாலு வருசமா பாடுபட்டு நீ அடஞ்சிருக்கிற பேரு, புகழு எல்லாம் பஞ்சாப் பறந்துடும் ஒரு நொடியிலே. அப்புறம் நாடகம், நடிப்பு-எல்லாத்துக்கும் மூட்டை கட்டி வைக்க வேண்டியதுதான்.

லீலா (குறுக்கிட்டு):-நான் மூட்டை கட்டிக்கத் தயார் அண்ணா, நான் இனிமே நடிக்கப்போறதில்லே. குடியும் குடித்தனமுமா அவரோடதான் வாழ்க்கை நடத்தப் போறேன்.

கண்ண (திடுக்கிட்டு):- குடியும் குடித்தனமுமாவா? வாழ்க்கை நடத்தவா? யாரோட? அந்த ராமதாஸோடவா?

லீலா:- ஆமாண்ணா!

கண்ண:- குடியும் குடித்தனமும் காத்திலே நடக்கும்னு நெனச்சிக்கிட்டிருக்கியா? காசில்லே வேணும் குடித்தனம் நடத்த? ராமதாஸுக்கு ஒரு நாடகத்துக்கு பன்னிரண்டு ரூவா சம்பளம். மாசம் மூணு நாடகம் நடத்தறதே குதிரைக் கொம்பாயிருக்கு. நாப்பது ரூவா டீ குடிக்கிறதுக்குக் காணுமா உங்களுக்கு?

லீலா;- என்ன பட்டினி கிடக்க நேர்ந்தாலும் சரிண்ணா. கஞ்சியோ, கூழோ குடிச்சிக்கிட்டு அவரோட கிடக்கிறதுன்னு முடிவுக்கு வந்திட்டேன்.

கண்ண:- அப்படியா? நீ நாடகத்தைவிட்டு விலகப் போறே. அவன் சம்பாரிக்கிறது அவன் கஞ்சி கூளுக்கே காணாது. உனக்காவது இரண்டு அண்ணங்க இருக்குறாங்க. உங்க தாயாரையும் மத்தவங்களையும் அவங்க காப்பாத்தறாங்க, நீ சம்பாரிச்சுத்தான் அவங்களுக்கு ஆகணும்கறதில்லே. ராமதாஸுக்கு தாயாரு, தங்கச்சி எல்லாரும் இருக்காங்களே. அந்த மூணுபேர் குடிக்கிற கூளுக்கு நாலாவது நீ ஒருத்தி போகப் போறியா!

லீலா:- .................

கண்ண:- கஞ்சி கூழு கிடக்கட்டும். ராமதாஸைக் கலியாணம் கட்டிக்கிட்ட பிறகில்லே அதைப்பத்தி யோசிக்கணும்? அவன் தாயாரு அதுக்குச் சம்மதிக்கலியே. உங்க தாயாரு, உங்க அண்ணங்க எப்படி சம்மதிக்கல்லையோ, அதே மாதிரி அவங்களும் சம்மதிக்கலியே?

லீலா:- எங்களுக்குக் கல்யாணம் ஆயிரிச்சு. அண்ணா.

கண்ண:- ஆ!

லோகசுந்தரி:-ஆ!

வீராச்சாமி:-ஆ!

குருமணி:-ஆ!

பாலாம்பாள்
வேல்நாயகி } திகைக்கிறார்கள்
தேவயானை

கண்ண: என்னது!

லீலா:- போனமாசம் ஏளாம்தேதி பதிவுத் திருமணம் பண்ணிக்கிட்டோம், இரண்டு பேரும்.

லோக: அடிப்பாவி!

வீரா: என்ன சொன்னே! கல்யாணம் ஆயிரிச்சா? (லீலாவின் கழுத்தை நெரிக்கப் போகிறான்.)

லீலா: என்னை யாரும் தொட வேண்டாம்.

வீரா:- (கையைப் பின்னுக்கிழுத்து, குரல் நடுங்க):- தொட வாண்டாமா? உன்னைத் தூக்கி இடுப்பிலே வச்சிக்கிட்டு வளத்த கையி இது. தொட வாண்டாமா! இவ நெஞ்சுரப்பை பாருங்கண்ணா?

பாலாம்பா, வேல், தேவ:-(அழுகிறார்கள்)

கண்ண:- எனக்கு ஒண்ணும் புரியல்லையே? போனமாசம் ஏழாந்தேதி கல்யாணம் பண்ணிக்கிட்டியா?

லீலா :-ஆமாண்ணா. நம்ம ராசப்பண்ணன்தான் சாட்சி.

கண்ண: யாரு? ராசப்பனா! நம்ம கம்பெனி ராசப்பனா?

லீலா :-ஆமாண்ணா.

கண்ண :-அவன் பரம சாதுவாச்சே. ரொம்ப 'ஸாப்' பான ஆளாச்சே! நாடகத்திலே கூட எரஞ்சு பேச மாட்டானே!

லீலா :-அவருதான் சாட்சி போட்டாரு. நீங்களே கேளுங்களேன்.

கண்ண :- அடப்பாவி! ரொம்ப மரியாதை-ஒரு வம்புக்கும் போகாதவன்னு நெனைச்சேன். நாடகத்திலே நல்லவனா இருக்கிறவன், வாழ்க்கையிலே வில்லனாக மாறிட்டானே!

லீலா :-அவரு ரொம்ப நல்லவர் அண்ணா. அவரைப் பத்தியெல்லாம் சொல்ல வேண்டாம். கூடப் பொறந்த அண்ணன் மாதிரி அவர்தான் இருந்து நடத்தி வெச்சாரு.

வீரா (குரல் தழுதழுக்க) :- கல்லு மாதிரி ரண்டு அண்ணங்க நாங்க இருக்கோம்டி இதோ!

லீலா:- என்ன பிரயோசனம்!

வீரா:- என்ன சொன்னே? என்ன சொன்னே?

கண்ண:- சித்தே சும்மா இருங்க தம்பி...லீலா, ராமதாஸு உங்க சாதிசனம் கூட இல்லியே?

லீலா:- ஜாதி எல்லாம் பத்தி இப்ப எதுக்குண்ணா பேச்சு வருது?

கண்ண:-இதென்ன கலியாணமா? டிபன் சாப்பிடறதா? ஒரு கட்டுப்பாடு, ஒரு ஒழுங்கு ஒண்ணும் இல்லாம இஷ்டத்துக்குச் செய்ய...

லீலா:- நாம இப்ப போட்டுக்கிட்டு வர புது நாடகமே 'கலப்பு மணத்தை'த் தானேண்ணா ஐடியாவாக் கொண்டிருக்கு?

லோகசுந்தரி:- பாருங்க. பாருங்க! அவ ஏதாவது பெரியவங்களாச்சேனு மட்டுமரியாதி வச்சிப் பேசறாளா பாத்தீங்களா!

லீலா:- நான் மரியாதைக் குறைவா பேசலியே.

வீரா: பின்னே, இது, என்னவாம்?

லீலா:- நான் கலியாணம் பண்ணிக்கிட்டாச்சு! இப்ப என்னத்துக்கு எதையெல்லாமோ கிளறிக்கிட்டிருக்கணும்?

கண்ண:- உன் பதிவுத் திருமணம் செல்லாது, தெரியுமா?

லீலா:- செல்லும் அண்ணா. ஆகஸ்ட் மாதம் பதினைஞ்சாம் தேதி நான் மேஜராயிட்டேன். அதுக்கப்புறம் தான் பதிவு ஆபிசுக்கு போனோம், யாருக்காவது ஆட்சேபணை இருக்கான்னு நோட்டீஸ் கொடுத்து கொஞ்சகாலம் காத்திருக்கணும்னாங்க. அதையும் செஞ்சோம்.

கண்ண:- ஆகஸ்ட் மாசம் 15ம் தேதிதான் நீ பொறந்தியா? அதான் இப்படித் தான்தோணியாத் திரியறே!

லீலா:- இல்லேண்ணா, நான் எங்கியுமே போறது கிடையாது. வீட்டை விட்டா, இங்க ஒத்திகைக்கு வருவேன்;

இங்கே விட்டா வீட்டுக்குப் போவேன். நடுவிலே எங்கியும் போறது கிடையாது.

கண்ண:- கிடையாதா, கிடையாதா, உன்னையும் ராமதாஸையும் அடிக்கடி பீச்லே பார்த்ததாக சின்னப்பா சொன்னாரே!

லீலா:- அவரோட கூடப் போகக் கூடாதாண்ணா! அதுவும் கலியாணம் செஞ்சுக்கிட்டதுக்கு அப்பறம்தானே சேர்ந்து போனோம்?

வீரா- இதெல்லாம் கேக்கறப்ப எங்க மானமே போவுதடீ!

லீலா: மானம் போகிற காரியமாக நான் என்ன செஞ்சுப்பிட்டேன்? உங்களுக்குப் புடிச்சவருக்குப் பதிலா எனக்குப் பிடிச்சவராத் தேர்ந்து எடுத்துக்கிட்டேன். மானபங்கம் எப்படி வரும்?

வீரா:- யம்மா, அவளுக்கு அப்பவே நான் டான்ஸ் சொல்லிக் குடுக்காதேன்னு சொன்னேன். நாடகக் கம்பெனியிலே சேர்க்காதேன்னு சொன்னேன். நீ சேர்த்தே. நம்ம மூஞ்சியிலே கரியைப் பூசிட்டா.

லீலா:-என் கழுத்திலே மஞ்சக் கயித்தைக் கட்டிக் கிட்டது. இவங்க மூஞ்சியிலே கரியைப் பூசிடிச்சாம்? பார்த்தீங்களாண்ணா கூடப் பொறந்த பொறப்பு பேசறதை!

கண்ண:- ஏம்மா! இப்ப உன்னை 'டயலாக்' பேசவா கூப்பிட்டேன்?

லீலா,-எனக்கு ஒரு சூதும் தெரியாது அண்ணா. இப்படி யெல்லாம் பேசறீங்களே!

வீரா: இவ நடிக்கிறாளா, நெசமாப் பேசறாளான்னே கண்டுபிடிக்க முடியல்லியே. அப்படின்னா தேறியிருக்கா!

லீலா: அண்ணா, நான் எது பேசினாலும் நடிக்கறாப்பல ஆயிட்டுது. நெசமாப் பேசறதையே நம்ப மாட்டேங்கறாங்க

லோக:- நீ நடிச்சுக்கிட்டே இருடீ போதும். இந்த ரிஜிஸ்டர் கல்யாணமும் நடிப்புன்னு சொல்லிப்பிடுடீ. என் வயித்திலே பால் வார்த்தாப்பல இருக்கும்.

லீலா:- பார்த்தீங்களாண்ணா. பெத்த தாயாருங்க செய்யற உபதேசத்தைப் பாருங்க. இவங்களுக்காக நான் கலியாணத்தையே நடிப்புன்னு மாத்தறதா? நீங்க கேட்டுக்கிட்டே இருக்கீங்களே!

கண்ண:- அவங்களுக்கு வயிறு எரியுது. சொல்றாங்க. பெத்து வளத்தவங்களுக்குத் தானே அருமை தெரியும்? உன்னை நல்ல இடத்திலே கலியாணம் பண்ணிக்கொடுத்து நல்லபடியாப் பார்க்கணும்னு எத்தினி நாள் ஆசைப்பட்டாங்களோ!

லீலா:- அப்பிடீன்னா நான் நடிக்கணும்னு சொன்னப்பவே என் வாயிலே ஓங்கி நாலு போட்டு, சடசடன்னு ஒரு கலியாணத்தைப் பண்ணி வச்சிருக்கணும். என் இஷ்டப்படி விட்டுட்டு, நான் மேஜர் ஆனப்பறம் என் காலிலெ கொக்கி மாட்டி இழுத்தா, குப்புறத் தள்ளிவிடறதாகத் தானே அர்த்தம்?

வீரா:- இப்பவாவது சொல்லுடீ! இந்தக் கலியாணத்தை ரத்து பண்ணிடலாம். இத்தினி பேரு வந்து மன்னாடறோம். உன்கூடப் பொறந்த இத்தினி பேருக்கும் கலியாணம் ஆகணும். நீ தறிகெட்டு எவனையோ கலியாணம் பண்ணிக்கிட்டேன்னு பேச்சு பரவிச்சின்னா இதுகள்ளாம் கலியாணம் ஆகாமத் தவிக்கும். அந்தப் பாவம் உனக்கு வாண்டாம்?

லீலா:- அதுக்காக நான் என் புருஷனை விட்டுட்டு வரணுமா? அண்ணா, இவங்க என் அம்மா, இவங்கள்ளாம் என் கூடப் பொறந்த பிறப்புதான். இருந்தாலும் இவங்க பேசறது ஒரு நாகரீகத்திலியும் சேர்ந்ததாகப் படலே. ரத்து பண்ணறதாம், வந்துடறதாம்! என்னண்ணா அக்ரமம்?

கண்ண:- அப்ப நீ அவனோடதான் சேர்ந்து பட்டினி கிடக்கப் போறே!

லீலா:- அவரோட இருக்கிறப்போ பட்டினியா பெரிசாத் தெரியும்?

கண்ண:- ஆகாகா! என்ன காதல்! என்ன முனைப்பு!

லீலா:- இப்ப யாரு 'டயலாக்' பேசறாங்கண்ணா?

கண்ண:- அம்மா... நீ எப்படி வேணாலும் வச்சுக்க. உங்களாலே கம்பெனி பேரே கெட்டுப் போயிடும் போலிருக்கு. உம் மாதிரியே சீதா, சின்னி, வள்ளி, சாருகேசி- இப்படி ஆறு பேர் இப்படித்தான் நாடகத்தை வாழ்க்கைன்னு நெனச்சுக்கிட்டு ஓடினாங்க. இப்ப கட்டத் துணிக்கு வழியில்லே. காலையிலே எழுந்திருச்சா இடியாப்பம், இட்லிக்குக் கூட பறப்பு. நீயும் அதே திக்கிலே போக வாண்டாம்னு நெனைச்சேன். கலியாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடியே அவங்களை விசாரிச்சு வெரட்டினேன். இப்ப நீ திடீர்னு கலியாணமே ஆயிட்டதாகச் சொல்றே. இப்ப உங்க ரண்டு பேரையும் கம்பெனியை விட்டு விலக்கிட்டா?

லீலா:- நான்தான் நிக்கப்போறேனேண்ணா! அவரையும் நீங்க விலக்கிட்டா என்னதான் செய்ய முடியும்? ஆண்டவன் இருக்கவே இருக்காரு.

கண்ண:- லீலா, கம்பெனியிலே இருக்கிற பையனுங்க, பொண்ணுங்க எல்லாம் உன்னைப் பத்திப் பேசி நகையாடுவது தெரியுமா? காறிஉமிழாதது ஒண்ணுதான் குறைச்சல்.

லீலா:- அது உலக சுபாவம், தனக்குக் கிடைக்கல்லியே என்கிற ஆத்தாமையும் பொறாமையும்தான் இப்படிக் கோவமா வருது. நான் நல்லாருக்கணும்கிற ஆசையாலெ இல்லெ...சரி நான் வரேண்ணா.

(பலராம முதலியார் லேசாகச் சிரித்துச் கொள்கிறார்.)

கண்ண:-இப்ப எங்கே போறே?

லீலா:- வீட்டுக்கு?

கண்ண:- எந்த வீட்டுக்கு?

லீலா:- எங்க வீட்டுக்குத்தான்.

கண்ண:- உங்க வீடுன்னா?

லீலா:- அவர் வீடுதானேண்ணா-எங்க வீடு!

கண்ண:- அப்ப, இனிமே இங்கே வேலையில்லை உங்க ரண்டு பேருக்கும். நாளைக்குக் காலமே வந்து கணக்குத் தீர்த்து சம்பளத்தை வாங்கிக்கிட்டுப் போவலாம்.

லீலா:- சரிண்ணா, காலமே அவங்களை வரச் சொல்றேன். ம்...

லீலா இதைச் சொல்லிவிட்டு வேகமாக வெளியே போய்விட்டாள். பலராம முதலியாருக்கு "நல்ல பிடிவாதக்காரப் பொண்ணு, பிழைச்சுக்கும்" என்று சொல்ல நாக்குத் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அண்ணன் கண்ணப்ப முதலியார் இருந்த நிலையைக் கண்டு, நாக்கையும் சிரிப்பையும் அடக்கிக் கொண்டார். "சரி, விட்டுப் பிடிப்போம்" என்று கண்ணப்ப முதலியார் ஆறுதல் சொல்லிவிட்டு அந்தக் குடும்பத்திற்கு விடை கொடுத்தார். குடும்பம் அழுது கொண்டு வெளியே போயிற்று.

பெரிய வீதிக்கு வந்த பொழுது பஸ் ஸ்டாப்பில் மகள் லீலா நிற்பதைப் பார்த்து, லோகசுந்தரி அம்மாள் அழுதாள். "நீங்கள்ளாம் போங்க, நானாவது கடைசியா ஒருதடவை மன்னாடிப் பார்க்கறேன்" என்று பஸ் ஸ்டாப்புக்கு வந்தாள்.

"எங்கம்மா வந்தே?" லீலா கேட்டாள்.

"பெத்த வயிறு கேக்க மாட்டேங்குதேடி, நாளைக்கு விநாயக சதுர்த்தியாச்சே, வீட்டுக்கு வந்து நாலு கொளக் கட்டேயாச்சும் தின்னுட்டுப் போடி."

"நான் வர முடியாது! எங்க வீட்டிலே பிள்ளையார் இல்லியா?"

"ம்....நானாவது கொண்டு வரலாமா?"

"கொண்டா. ஆனா மாமியாரு, நாத்தனாரு, எல்லாருக்குமா சேத்துக் கொண்டா. அப்பதான் அவங்க கோபமும் கொஞ்சம் தணியும்" என்று சொல்லும்போதே பஸ் வந்து விட்டது. லீலா சட்டென ஏறிக் கொண்டாள், லோகசுந்தரி அம்மாள் திரும்பி நடந்தாள்.

# பஸ்ஸூம் நாய்களும்

பஸ்ஸிலிருந்து இரண்டு பிராணிகள் பிதுங்கி விழுந்தன. அதாவது இறங்கின. ஒன்று சாம்பன், இன்னொன்று ஒரு சீக்கியர். சீக்கியர் சிரித்துக்கொண்டே சட்டையை இரண்டு விரல்களாலும் உதறிவிட்டார். சாம்பன் சிடு சிடுத்துக்கொண்டே தன் சட்டையை உதறினான்.

"உங்களுக்கு எப்படிச் சிரிக்க முடிகிறது?" என்றான் சாம்பன்.

"அழுதால் மட்டும் நிமிஷத்துக்கு நாலு பஸ் ஓடத் தொடங்கி விடுமா?" என்று தாடிக்குள் மீண்டும் புன்சிரிப்பு. களையான முகம், கலங்காத, சோராத முகம்.

"நான் அழச்சொல்லவில்லை. கோபம் தெறிக்க வேணும். ராஜ்யம் ராஜ்யமாகச் சுற்றி ரிடையரான நொண்டி, முட பஸ்ஸூகளையெல்லாம் வாங்கி வந்து சிம்பு கட்டி, இப்படி மணிக்கு ஒரு வண்டியாக விடுகிற வித்தையைக் கல்கத்தாவில் காட்டட்டும். பம்பாயில் காட்டட்டும். என்ன ஆகியிருக்கும் தெரியுமா? 'நான் சர்க்காருக்கு ஊழியம் செய்கிற பூச்சி. எப்படி அவமானப் படுத்தினாலும் தாங்கிப்பேன்' என்று சலாம் பண்ண டில்லி ஜனங்களுக்குத்தான் முடியும்" என்றான் சாம்பன்.

ஆனால் "பூச்சிகளில் பலவகை உண்டு. நாலாயிரம் இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்கி அதிகாரம் செய்கிற பெரிய பூச்சிகள் சொந்தக் கார் வைத்துக் கொள்கின்றன. நடுத்தரப் பூச்சிகள் ஸ்கூட்டர் வாங்குகின்றன. நீங்களும் நானும் சின்னப் பூச்சிகள். யோகாப்பியாசம், குருகுல வாசம், கர்ப்பவாசம் எல்லாம் கலந்து தவயோகம் செய்வது அந்தச் சின்னப் பூச்சிகளின் தனி உரிமை". சீக்கியர் இதைச் சொல்லும்போது சாம்பன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் என்ன அமைதி? என்ன களை! அழுத்தம்!

"நீங்கள் டில்லிக்குப் புதிதா?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம், மாற்றலாகி வந்து ஆறு மாதமாயிற்று" என்றான் சாம்பன்.

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"என்ன!"

"இன்னுமா உங்களுக்கு கோபம், வீரம் எல்லாம் மிஞ்சியிருக்கிறது! ஆறு மாசத்திற்குப் பிறகுமா? புது டில்லிக்கு வந்து ஒரு மாசத்திற்கெல்லாம் முதுகில் கூனல், பணிவு, அடக்கம் எல்லாம் வந்துவிடுமே! உங்களுக்கு அடுத்த மேலதிகாரி ஒரு கிண்டலால், ஒரு புன்னகையால் உங்கள் முதுகெலும்பைப் பஞ்சுபோல் மிருதுவாக்கியிருப்பாரே! நீங்கள் எந்த ஆபீசில் வேலை செய்கிறீர்கள்?"

"ஆபீஸ் இல்லை. கம்பெனியில் வேலை செய்கிறேன். கரோல்பாக்கிற்கு அருகில்."

"ஜாகை?"

"கரோல்பாக்கில் தான்."

"பஸ்ஸில் போவதில்லையா வேலைக்கு?"

"நடந்து போகிறேன், வீட்டிலிருந்து இரண்டு பர்லாங்தான்."

"அதுதான் கோபம் வருகிறது! நீங்களும் எப்பொழுதாவது டில்லி பஸ்களில் போயிருப்பீர்கள். இருந்தாலும் சொல்லி வைக்கிறேன். டில்லி பஸ்களில் எந்த நம்பர் பஸ் என்று கையெட்டு தூரம் வந்தால்தான் சொல்ல முடியும். அப்படிக் கிட்டே வந்தாலும் அந்த நம்பருக்கு வெளிச்சம் இருக்காது, கேட்டுக் கொண்டுதான் ஏற வேண்டும். இறங்குவதற்குத்தான் பஸ்ஸை நிறுத்துவார்கள். இறங்கின உடனே மணி அடிக்கும். பஸ் நகர்ந்துவிடும். கீழே காத்திருப்பவர்கள் கையில் அகப்பட்டதை, கம்பியையோ, வேறு பிரயாணியின் கையையோ, சட்டையையோ தொற்றிக் கொண்டு ஓடிப் பாயவேண்டும். சட்டை கசங்கும், கிழியும். ஆனால் டிக்கெட் வாங்காமல் இறங்கினாலும் பாதகமில்லை. ஒன்றும் சொல்ல

மாட்டார்கள். நீங்கள் எப்படியாவது ஒழிந்தால் போதும். இது கர்ப்பவாசம். உள்ளே போகவும் வெளியே வரவும் ஒரேவழிதான். இதையெல்லாம் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்."

"ஆகக்கூடி, இது ஒரு 'ட்ரைபல்' நகரம் என்று சொல்லுகிறீர்களா?" என்றான் சாம்பன்.

"நான் அப்படிச் சொல்லுவேனா? காட்டுமிராண்டிகளில் ஏழை, பணக்காரன் கிடையாது. பெரிய உத்தியோகம், சின்ன உத்தியோகம் கிடையாது. 'எனக்கு அடுத்த கீழ் அதிகாரியோடுதான் பேசுவேன். அதற்கும் அடுத்த கீழ் அதிகாரிகளை முகாலோபனம் கூடப் பண்ணமாட்டேன்' என்று காட்டுமிராண்டி சொல்லமாட்டான். தன்னை ஒத்த சில பேர்தான் சுகத்திற்கும் காருக்கும் பிறந்தவர்கள், மற்றவர்கள் சாகவும் பஸ்ஸில் போகவும் பிறந்தவர்கள் என்று நினைக்கமாட்டான். தான் கையாலாகாதவன் என்று தெரிந்தும் முப்பது லட்சம் ஜனங்களுக்கு இப்படி ஒரு லொடலொட்டை பஸ் போக்குவரத்து நடத்தமாட்டான். பத்துப் பதினைந்து மைலுக்கப்பால் பள்ளிக்கூடமும் காலேஜும் கட்டி வைத்து, தங்கைகளையும், பெண்களையும் 'இந்த பஸ்ஸில் வாருங்கள்' என்று சொல்லி துச்சாதனர்களிடம் காட்டிக்கொடுக்க மாட்டான், காட்டுமிராண்டி."

சாம்பனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"உங்களுக்கும் காலேஜில் படிக்கிற தங்கை இருக்கிறாளா?" என்று திகைத்துப்போய்க் கேட்டார் அவர்.

"இல்லை, பெண் காலேஜில் படிக்கிறாள். காலேஜ் பத்து மைல். தினமும் பஸ்ஸுக்குக் காலையில் ஒன்றரை மணி நேரம், மாலையில் ஒன்றரை மணி நேரம் ஸ்டாப்பில் நிற்கிறாள். வாரத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு கிழிசலாவது சட்டையில் இல்லாமல் பஸ்ஸிலிருந்து இறங்குவதில்லை. ஹாஸ்டலில் சேர்க்கலாம் என்றால் உள்ளூர்க்காரர்களுக்கு ஹாஸ்டல் கிடையாதாம். அதனால் வீட்டுக்கு வந்ததும் தலைவலி, தூக்கம், அல்லது தூக்கம் பிடிக்காத மண்டைவலி. புராணக் கதைகள் நிஜமாக இருந்தால் தினம் அவள் கொடுக்கிற சாபத்திற்கு டில்லி ஒரு சாம்பல் காடாக ஆகி இருக்க வேண்டும்."

"புராணக் கதை நிஜமோ என்னவோ? கடவுள் நிஜம் தான்."

"என்ன திடீரென்று அவர் ஞாபகம்?"

"நான் ஏறின பஸ்ஸிலேயே உங்களையும் ஏற்றி, ஒரே இடத்தில் இறக்கி, நான் சாய்ந்து புலம்ப உங்கள் தோளைக் கொடுத்தாரே, அது கடவுள் இல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்?"

"உங்கள் தங்கைக்கும் இதே கதியா?"

"எனக்குத் தங்கை இருக்கிறாள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சற்று முன்னால் சொன்னீர்களே!"

"நானா!"

"பாவம், டில்லி பஸ்ஸில் சிறிது நேரம் போவதற்குள்ளா உங்கள் சித்தம் இப்படிக் குழம்பிவிட்டது? உங்கள் தங்கையும் காலேஜுக்குப் பஸ்ஸில்தான் போகிறாளா?"

"ஆமாம்; அவளுக்குச் சட்டை மட்டும் கிழியவில்லை. மனதும் கிழிகிறது. உட்கார்ந்து போனாலும், நின்று கொண்டு போனாலும், யாராவது ஒரு மாணவன் அவள் தலையைத் தடவுகிறானாம், கோதி விடுகிறானாம். 'பாவம், கூட்டத்தில் உன் அழகான மயிர் கலைந்து விட்டது' என்று குழைகிறானாம். அவள் முகத்தைச் சிணுங்கினால் எல்லாப் பையன்களும் சிரிக்கிறார்களாம். இல்லாவிட்டால், 'நோவும்படியாகக் கோதாதே, மெதுவாகக் கோதிவிடு. இந்தாண்டை வா, உன் கையில் 'ஃபீலிங்' இல்லை, நான் தடவி விடுகிறேன்' என்கிறானாம். மற்ற வயதான பிரயாணிகள், கண்டக்டர்-இவர்களெல்லாம் முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டு கவனிக்காததுபோல் இருக்கிறார்களாம். ஒரு வாரமாக இதே தகராறு வீட்டில். 'என்னை மெட்ராஸில் கொண்டு விட்டுவிடு. அத்தை வீட்டில் இருந்துகொண்டு படிக்கிறேன். இல்லாவிட்டால் கலியாணம் பண்ணிக்கொடுத்துவிடு. சமைத்துப்போட்டுக் கொண்டு அக்கடா என்று வீட்டில் கிடக்கிறேன்' என்கிறாள். இன்றுகூட மத்தியானம் சாப்பிட்ட பிறகு, "என்ன அண்ணா செய்யப்போகிறாய்?" என்று ஆரம்பித்து விட்டாள்.

ஒன்றும் ஓடவில்லை எங்காவது தொலையலாம் என்று தான் கிளம்பி வந்தேன்."

"எங்கே போகிறீர்கள்?"

"லோடித் தோட்டத்திற்கு."

"அச்சா! நல்ல இடம். அமைதியாக இருக்கும். எல்லாவற்றையும் மறந்துவிட்டு காற்று வாங்குங்கள். நான் அதோ அந்தத் திருப்பத்திலேயே திரும்பியிருக்க வேண்டும், பேச்சுப் பராக்கில் வந்துவிட்டேன். கவலைப் படாதீர்கள். உங்களுக்கு என்ன வயது?"

"இருபத்தாறு."

"நீங்கள் என்னைப் போலக் கிழவன் இல்லை. நல்ல இளைஞர். இது இளைஞர் காலம். நீங்கள் எல்லாம் எங்கு பார்த்தாலும் வெகுண்டு எழுந்திருக்கிறீர்கள். நாளைக்கே சுவர்க்க லோகத்தைக் கொண்டு வரப்போகிறீர்கள். கொண்டுவாருங்கள். நான் வருகிறேன்" என்று கையைத் தூக்கி விடை பெற்றுக்கொண்டு வழி பிரிந்தார் அவர். அவரைச் சற்று நின்று பார்த்துவிட்டு, திரும்பி நடந்தான் சாம்பன்.

லோடித் தோட்ட வாசல் வந்தது. காற்றில் மரத்தின் இலைகள் பெருமூச்சு விட்டன. 'இங்கே வா! என் கீழே உட்கார்ந்து பெருமூச்சு விடு' என்று சலசலத்தன. சரி என்று உள்ளே நுழைந்தான் சாம்பன். ஒரு சின்ன சீட்டாட்டக் கும்பல். இரண்டு மூன்று காதல் இணைகள். ஒரு நாயை முகர்ந்து கொண்டே நின்றும் நடந்தும் ஜமாவாக நடந்தது நான்கு நாய்கள்-எல்லாவற்றையும் கடந்து நடந்தான். ஒரு மரத்தடியை சுற்றிப் போட்டிருந்த பெஞ்சுமீது உட்கார்ந்தான்.

குனிந்து சட்டையை ஒரு தடவை பார்த்தான் அவன். நாற்பது நிமிஷங்களுக்கு முன்பாகப் போட்டுக் கொண்ட சட்டை, பிர் என்று கஞ்சி ஒட்டலை உரித்துப் போட்டுக் கொண்ட சட்டை, பஸ்ஸில் பிதுங்கி ஏறி, பிடி அகப்படாமல் உள்ளங்கையால் மேல் கூரையை அமுக்கி, இடிந்து, உராய்ந்து, வேர்வைகளை முகந்து, படாத இடம்

எல்லாம் பட்டுக் கூசி, குன்றி, நசுங்கி, மீண்டும் பிதுங்கி வெளியே விழுந்து இருபது சொச்ச நிமிஷத்திற்குள், இந்த வண்ணான் மடி விறைப்பு, அகங்காரம் எல்லாம் அடங்கி, தூளித் துணியாகத் துவண்டு விட்டது. முக்கோண, ஐங்கோண, பல கோணக் கசங்கல்களும், எப்படி வந்தது என்று தெரியாத ஒரு மஞ்சள் கறையுமாகச் சட்டை சாவித்திரியைப் போலக் குறை சொல்லிற்று. சீக்கியரைப் போலச் சிரித்தது.

எதிரே கோயில் போன்ற கல்லறை. கால் மறைய அருகம்புல். நிறைய மரம், நிழல் மேகம். ஆளைக் காணவில்லை. சமாதிக் கல்லறையின் மேல்தளத்தில், கூரை கும்பத்தின் இடுக்கில் இரண்டு இளைஞர்கள் ஏதோ பாட்டிலை மாற்றி மாற்றி வாயில் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். கல்லறை மூச்சு விடவில்லை. மரத்தின் இலைகள் மட்டும் மூச்சு விட்டன, சிரித்தன.

லோடித் தோட்டத்தை யார் அமைத்தார்கள், அந்தப் பெரிய சமாதி யாருடையது என்றெல்லாம் சாம்பன் இன்னும் விசாரிக்கவில்லை. டில்லியில் இடறி விழுந்தால் கல்லறை. இதுவும் ஒன்று. ஆனால் தனக்காக மரங்களாவது பெருமூச்சு விடட்டும் என்று சமாதியைச் சுற்றிச் சில அரசர்கள் தோட்டம் போட்டுக் கொண்டார்களோ என்னவோ!

மரத்துப் போய் சாம்பன் கல்லறை, வானம், புல் என்று பார்த்துக் கொண்டிருந்தான். பிரம்மாண்டமான அந்தத் தோட்டமும் மரத்துக்கிடந்தது. ஆளில்லை, சத்தம் இல்லை. கல்லறையும் வெயிலில் கிழவன் போல மரத்து உட்கார்ந்திருந்தது.

திடீரென்று எங்கோ தூரத்தில் ஒரு மூலையிலிருந்து இரண்டு மந்த உருவங்கள் வேகமாக வருவது தெரிந்தது. ஒன்று ஆண், இன்னொன்று பெண். ஆண் ஒன்றையும் பார்க்காமல், கையில் தடியுடன் கனவேகமாக நடந்து வந்தது. அந்த நடைவேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் பெண் பொதுக்கு பொதுக்கென்று சிறு ஓட்டமாக ஓடி வந்து கொண்டிருந்தது.

இப்பொழுது முகம் நன்றாகத் தெரிகிறது ஆணின் முகம் ரொம்ப வயதான முகம் இல்லை. நாற்பத்தைந்து சொல்லலாம். நல்ல உயரம். செதுக்கிவிட்ட முகம். பெரிய இடத்து முகம். அதிகாரி முகம் மாதிரிகூட இருந்தது. ஒரு கடுகடுப்பு இல்லை. வெடுவெடுப்பு-அதுவும் இல்லை. ஓர் அலட்சியம்-அதுவும் இல்லை. 'நான்தான் ராஜா, நான் எதற்காகச் சுற்றி இருப்பதை எல்லாம் பார்க்கவேண்டும்?' என்கிற முகம். 'இவளுக்காக நான் ஏன் நின்று நின்றோ, மெதுவாகவோ நடந்து வரவேண்டும்' என்கிற முகம். தடியைப் பூமியில் படாமல் அனாயாசமாக நடுவில் பற்றி வீசி வரும் கை.

கிட்டவே வந்துவிட்டார்கள். ஆண் நல்ல அழகு. வெள்ளை நிறம். உட்கார்ந்திருந்த சாம்பனைத் தற்செயலாகக் கூடப் பார்க்கவில்லை. கடைக்கண்ணால் பார்த்திருக்கும். 'எந்தப் பட்சியும் உன்னைப் பார்க்கவில்லை என்று நினைக்காதே. நீ பார்ப்பதற்கு முன்னால் அது உன்னைப் பார்த்திருக்கும்' என்று ஓர் இயற்கை நிபுணர் எழுதியிருப்பது ஞாபகம் வந்தது சாம்பனுக்கு. அப்படி கன அலட்சியமான மிடுக்குடன் நடந்தது அந்த முகம். ஏதோ ரொம்பப் பெரிய அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும்.

அடுத்த கணம் சாம்பனுக்கு ஓர் இரக்கமும் வந்தது. குண்டு குண்டு என்று கூடவே சிறு ஓட்டம் பழகி வந்த மனைவிப் பெண் உண்மையாகவே குண்டு-பொதுக்கு. முகத்திலும் களை இல்லை. அறிவு கூட இல்லை, வயதும் ஐம்பத்தைந்து காட்டிற்று. என்ன என்னத்தையோ கட்டி ஆண்டும், அழகாகவும் இருக்கிற இந்த ஆணுக்கு இப்படி ஒரு மனைவியா வாய்க்க வேண்டும் என்று சாம்பனுக்குள்ளே ஒரு 'ஐயோ பாவம்' முணுமுணுத்தது. சின்ன வயசில் இவ்வளவு பெரிய அதிகாரியாகி விட்டானே என்று அந்தக் காலத்தில் பெண்ணின் அப்பன் இந்த ஆணைப் பெரிய விலை கொடுத்து மடக்கிப் போட்டு மாப்பிள்ளையாக ஆக்கிக் கொண்டானோ என்னவோ! 'சரி, நடந்ததுதான் நடந்து விட்டது. ஏன், இப்படி இந்தப் பொதுக்கையும் இழுத்துக் கொண்டு வெளியே அலைகிறாய்! மனைவியோடு உலாவப் போவதுதான்

மனிதத் தன்மை-இல்லை, அந்தஸ்துக்கு அழகு என்று நீ படித்த மேல் நாட்டில் கற்றாயோ? இப்படி மொந்தும் பொதுக்குமாக எனக்கு ஒரு மனைவி இருந்தால் நான் இப்படி வெளியே கூட்டிப் போவேனா?' என்று பிரம்மசாரி சாம்பன் தனக்கு ஒரு கேள்வி போட்டுக் கொண்டான்.

சட்டென்று ஆணும் பெண்ணும் நின்றன. எதிரே பருமனாக ஓர் ஆண் வந்தது. ஆணும் பெண்ணும் போல அதுவும் உலாவ வந்த ஒரு அதிகாரிதான். அதற்கு ஐம்பத்தைந்து வயதிருக்கும். கழுத்தைக் காணவில்லை. மார்பின் மீது தலையை அமுக்கி வைத்திருந்தது. மூன்றும் பேசிக் கொண்டன. அதாவது ஆணும் ஆணும் பேச, பெண்ணும் புன்னகையோடு இரண்டையும் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆங்கிலத்தில்தான் பேச்சு. வெயில், உலாவப் போதல், பம்பாய், பெரிய பிள்ளை-என்று என்னென்னவோ வார்த்தைகள் மட்டும் உதிரியாகக் கேட்டன.

சட்டென்று நான்காவது பிராணி ஒன்று பெண்ணின் காலருகே நின்றது. ஒரு நாய். பழுப்பு நாய். சரியான குண்டு. எதிரே பேசுகிற ஆணைப் போல் இதற்கும் கழுத்தே இல்லை. சாம்பனுக்கு ஞாபகம் வந்தது. ஆணும் பெண்ணும் தூரத்தில் வரும்பொழுதே அந்த நாயையும் பார்த்த ஞாபகம் வந்தது. ஆனால் அது வருகிற தோரணையைப் பார்த்தால் தம்பதியின் நாயென்று தோன்றவில்லை. அப்படி ஒரு விட்டேற்றி. மற்ற நாய்களைப் போலன்றி, இது ஒரு மாதிரியாக இருந்தது. எல்லா நாய்களும் எஜமானர்களின் முகத்தை முகத்தைப் பார்க்கும், அப்படி ஓடும், இப்படி ஓடும், மீண்டும் ஓடி வந்து சேர்ந்து கொள்ளும். ஆனால் இந்த நாய் அப்படியெல்லாம் செய்யவில்லை. அது பாட்டுக்குப் பூமியைப் பார்த்துக் கொண்டே வந்தது. வேறு எதையும் பார்க்கவில்லை. எஜமானனைப் பார்க்கவில்லை. எஜமானியையும் பார்க்கவில்லை.

இப்பொழுது கூட அது பாட்டுக்குத் தரையை முகர்ந்து கொண்டே நின்றது. பேசுகிற எஜமானர்களையோ, நண்பரையோ பார்க்கவில்லை. நிமிரவில்லை. ஒரு சமயம்

நிமிர முடியவில்லையோ என்னவோ? பெரும் உடம்பு! டில்லி நாயெல்லாமே கன்றுக்குட்டி அளவு இருக்கும். இது அதிகாரி வீட்டு நாயா-கொழுத்த கன்றாக மதர்த்துக் கிடந்தது.

பேச்சு முடிந்து ஆணும் பெண்ணும் நகர்வது தெரிந்தது. எதிரே வந்த கழுத்தில்லாத ஆண் மெதுவாக பொம்மை மாதிரி நடந்து போயிற்று. ஆனால் சாம்பனுக்கு இதைப் பார்க்கத் தோன்றவில்லை. அந்த ஆணையும் பெண்ணையும் நாயையும்தான் பார்க்கத் தோன்றிற்று. மீண்டும் அதே வேக நடை. பொதுக்கு பொதுக்கென்று அந்தக் கிழப் பெண்ணும் கிழக்குமரனோடு சிறு ஓட்டம் பழகிற்று. நாயும் லொங்கு லொங்கென்று குலுங்கி சிறு ஓட்டம் ஓடிற்று.

இத்தனை அழகனுக்கு இப்படி ஒரு மனைவியா? பாவம்!

திடீரென்று, "நன்றாக வேணும் உனக்கு" என்று கருவிக் கொண்டான் சாம்பன்.

"சாவித்திரி, நீ பஸ்ஸிலே இடிபட்டுக்கொண்டு, புடவை பார்டர் மிதிந்து கிழிய, டில்லி மாணவர்கள் தலையைக் கோதிக் கொஞ்ச, காலேஜுக்குப் போய் வந்து குமுறுகிறாயே. அந்த மாதிரி பஸ்களை விடுகிறவன் இந்த ராட்சசன் தான்" என்று முனகிக் கொண்டான். இவன் என்றால், இவனைப் போன்ற ஓர் ஆள்தான். உலாவப் போகிறேன் என்று காரில் வந்துவிட்டு, இங்கு பொட்டைச் சாரை மாதிரி நடந்துவிட்டு, மறுபடியும் காரில் போகிறவன்தான்.

"ஏய்! நீ ஒரு நாளைக்கு பஸ்ஸில் போயிருக்கிறாயா? உன் பெண் பிள்ளைகளை ஒரு நாள் இந்த பஸ்ஸில் படிக்க அனுப்பியிருக்கிறாயா? ஒரு நாள் அனுப்பி, அவள் தலையை யாராவது கோதியிருந்தால், மூவாயிரம் பஸ்ஸை இறக்குமதியாவது செய்து நிமிஷத்திற்கு நாலு பஸ் விட்டிருப்பாயே! நீ விடமாட்டாய்! உன் பெண் பிள்ளைகள் பஸ்ஸில் போகக்கூடாது. அது அகௌரவம். அவர்கள் பஸ்ஸில் போனால், பஸ்ஸில் போகிற புத்தி, பஸ்ஸில் போகிற உத்தியோகம் எல்லாம் வந்துவிடும் என்று

உனக்குக் கிலி. நீ பரம்பரை பரம்பரையாக அதிகாரம் பண்ணவே பிறந்திருப்பதாக உனக்கு எண்ணம். நீ அவர்களை பஸ்ஸில் அனுப்பவே மாட்டாய் எனக்குத் தெரியும்., பஸ்ஸெல்லாம் சாவித்திரிகளுக்குத்தான். உன் வீடு கூட ஆபிசுக்குப் பக்கத்தில்தான் இருக்கும். அதற்கே உனக்குக் கார் வேணும்! உன் ஆபீஸ் பியூன்கள், குமாஸ்தாக்கள் எல்லாம் ஏழெட்டு மைல் பஸ்ஸிலும், நடந்தும் வர வேண்டும் உனக்கு நன்றாக வேணும். உனக்கு இந்த பொதுக்கு மனைவிதான் சரி, அவளை வீட்டில் விட்டு வரவும் உனக்குத் தைரியம் இல்லை. சாம்பனின் மார்புக்குள் ஒரே சிரிப்பாகக் கொப்பளித்தது.

மறுபடியும் அதே ஆணும் பெண்ணும் வந்தார்கள். பொட்டைச்சாரை நடை, பொதுக்கு ஓட்டம். நாயும் அவர்களைப் பார்க்காமல் குலுங்கிக்கொண்டு வருகிறது.

“கான்ஸ்டிட்யூஷனல்” என்று சிரித்துக்கொண்டான் சாம்பன். உடம்பை நெத்து மாதிரி காப்பாற்றுகிற நடை இது.

அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான் சாம்பன். நாயின் நடைதான் சுவாரஸ்யமாக இருந்தது. எஜமானர்களின் முகத்தை ஒரு முறையாவது பார்க்காதா? அவர்கள் காலைக்கூடப் பாராமல், மோப்பமே வழி காட்டியாக நடந்து கொண்டிருந்தது. எஜமானிக்கு எஜமானின் நடையில் நாட்டம். எஜமானுக்குத் தன் நடையே நாட்டம். இரண்டையும் சட்டை செய்யாமல், தலையும் மோப்பமும் நாட்டமான பிராணி.

‘சாவித்திரி, நீ வந்து ஒரு நாளைக்கு இதைப் பார்க்க வேணும். பஸ்ஸில் தலையைக் கோதுகிற தடியன் எத்தனையோ தேவலை என்று சொல்லிவிடுவாய்’ என்று நெடியாகச் சிரித்துக்கொண்டான் சாம்பன்.

மீண்டும் ஆணும் பெண்ணும் திரும்பி வருகிறார்கள். குண்டு நாயும் கூடவருகிறது.

திடீரென்று நாலைந்து மோட்டா நாய்கள் கறுப்பும் சிவப்புமாக ஓடி வந்தன. சாம்பன் வரும்போது தோட்டத்து முனையில் காதலுக்கு அலைந்த நாய்கள் இப்போது

போருக்கு வெறி கொண்டு வந்தன. இந்தப் பழுப்பு நாயைப் பார்த்து உறுமின. மேலே விழுந்து பிடுங்கின, குதறின. ஆண் கைத்தடியை ஓங்கினார். கிழவியும் குதித்தாள்-அவருக்குப் பின்னால் நின்றுகொண்டு. ஆனால் நாய்களின் கால் கலப்பு நிற்கவில்லை பற்கள் மின்னின. உதடுகள் பின்னால் சுருங்கின.

சாம்பனுக்கு கை பரந்தது. பெஞ்சின்மீது நின்று எம்பி மரத்திலிருந்து ஒரு குச்சியை ஒடித்தான், ஓடினான் ஓங்கினான். பயனில்லை. புல் பத்தை ஓரமாக இருந்த அரைச் செங்கல்லை எடுத்து வீசினான். சரசரவென்று மூலைக்கொன்றாக நாய்கள் ஓடிக் கலைந்தன. மீண்டும் அமைதி. பழுப்பு நாய் வளைந்து வளைந்து தன் காலை நக்கிக் கொண்டது. பிறகு தரையை முகர்ந்தது.

"வாடா, ஆண்டனி!" என்று கூப்பிட்டார் ஆண்.

பழுப்பு நாய் அருகே வந்தது. மூன்று நான்கு இடங்களில் கடி.

"இவனும் விடவில்லையே! ஹை! பொல்லாத போக்கிரி! ம்! கேவ் இட் பாக்! ம்! ஆனால் ஒன்று, இவனை இனிமேல் இங்கே அழைத்துவரக்கூடாது. லோடி கார்டனில் இப்ப கண்ட கண்ட நாயெல்லாம் வரத் தொடங்கி விட்டது. தெரு நாயெல்லாம் இப்படி அனுமதிக்கலாய் விட்டதே! குல்தீப்கிட்ட சொல்லணும்! வாடா, ஆண்டனி! மேலே காயம் கீயம் பட்டிருக்கோ என்னவோ? போகிறபோது 'வெட்'டு கிட்டக் காண்பித்து விட்டுதான் போகணும். ஒரே தெரு நாய்த் தோட்டமாகப் போய் விட்டதே இது!" என்று நாயை முன்னால் விரட்டிக் கொண்டே நடந்தார் ஆண். கிழவி பொதுக்குப் பொதுக்கென்று சிறு ஓட்டம் பழகினாள்.

கரோல்பாக்கில் புல்பத்தைகள் தோட்டம் ஏதும் இல்லாத ஒரு 'தெரு வீட்டை' நினைத்துக் கொண்டே மீண்டும் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டான் சாம்பன்.

# நேத்திக்கு

நேத்திக்குக் காலமே ஜோஸ்யர் மாமா வந்தார். அப்ப தாத்தா குளிச்சுட்டு முழங்கால் மட்டும் ஈரத்துண்டை கட்டிண்டு, கூடத்திலே சாச்சு மாட்டியிருக்குமே பெரிய லக்ஷ்மி படம், அதுக்கு முன்னாலே நின்னுண்டு அந்தச் சின்ன பச்சை புஸ்தகத்தைப் பார்த்துப் படிச்சுண்டிருந்தா. படிச்சுட்டு அதைப் படத்துக்குப் பின்னாலேயே வச்சுடுவா. எப்பவும் தாத்தா குளிச்சவுடனே சட்டை, பாண்ட், டை எல்லாம் போட்டிண்டுடுவா. உடனே சாப்பிட்டுட்டு, காரிலே ஏறிண்டு *பாக்டரிக்குப் போயிடுவா. ஆனா ஒரு மாசமா, இப்பல்லாம், குளிச்சவுடனே இந்தப் புஸ்தகத்தை வாசிச்சுட்டு, கன்னத்திலே படபடன்னு போட்டுண்டு லக்ஷ்மீ, பரதேவதேன்னு பெரிசா மூச்சு விட்டுட்டு, அப்பறம்தான் சட்டை, டை எல்லாம் கட்டிக்கறா.

“தாத்தா, ஜோஸ்யர் மாமா வந்திருக்கா”ன்னு நான் சொன்னேன்.

தாத்தா பதில் பேசாம கையினாலேயே ஜாடை காட்டினா, அவரை உள்ளே அழச்சு உக்காத்தச் சொல்லி. ஜோஸ்யர் மாமா வந்து ஆபீஸ் ரூம்லே உக்காந்துண்டார்.

தாத்தா புஸ்தகத்தை வாசிச்சு, படத்துக்குப் பின்னாலே சொருகி, அப்புறம் கண்ணை மூடிண்டு நின்னா, அப்பறம் ஒரு ஜரிகை வேட்டியை பீரோவிலிருந்து எடுத்துக் கட்டிண்டா. ஒரு துண்டையும் மேலே போட்டுண்டா. ஆபீஸ் ரூமுக்குப் போனா. நேத்திக்கி ஞாயித்துக்கிழமை. பாக்டரி கிடையாது.

“எப்படிய்யா இருக்கு இன்னிக்கி?”ன்னு கேட்டா தாத்தா.

“ரொம்ப டாப்பா இருக்கு”ன்னார் ஜோஸ்யர்.

"என்னத்தை டாப்பா இருக்கு! வாங்கி மூணு வருஷம் ஆச்சு இந்த சனியனை. எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போறார்னு மூணே மூணு தடவைதான் ஜயிச்சிருக்கு அதுவும் பொட்டைக் குதிரைகளோட ஓடி! சரி, இங்கதான் சரியா இல்லேன்னு பங்களூருக்கு அனுப்பிச்சா, அங்க சமத்தியா அடி. கல்கத்தாவுக்கு அனுப்பிச்சா, அங்க ஒரு நாள் விடாம கல்தா. நீரானா இன்னிக்கு இதுதான் ஜயிக்கப் போறதுன்னு சொல்லாத நாள் கிடையாது. செட்டியார் சொல்றாப்போல நீர் பசுமாட்டுப் பார்ப்பானோ!"

"என்ன! என்ன!"ன்னு ஜோஸ்யர் மாமா ஆச்சரியமா சிரிச்சா.

"செட்டியார்லாம் காலமே யாராவது பிராமணன் யாசகத்துக்கு வந்து நின்னா, நீர் பசுமாட்டுப் பார்ப்பானா, எருமை மாட்டுப் பார்ப்பானான்னு கேப்பாளாம். பசுமாட்டுப் பார்ப்பான்னு சொன்னா ஒண்ணும் கிடைக்காது. எருமை மாட்டுப் பார்ப்பான்னு சொல்லணும். எருமை மாடுதான் விடிய காலமே குளிக்கும்"ன்னு சொன்னா தாத்தா.

ஜோஸ்யர் மாமா விழுந்து விழுந்து சிரிச்சார். தாத்தாவும் தொப்பையைக் குலுக்கிண்டு சிரிச்சா.

"அப்படின்னா நான் ஆசாரங்கெட்ட அதமப் பிராமணன்னு சொல்றேளாக்கும்"-ன்னு சிரிச்சார் ஜோஸ்யர் மாமா.

"பின்னே நீர் சொல்றது ஏன் ஒரு நாள் கூட பலிக்கலெ? ஏன் இந்தச் சனியன் தோத்துகிண்டே இருக்கு? இது குதிரையா கோவேரி கழுதையான்னே இப்பல்லாம் சந்தேகமா இருக்குங்காணும்."

"நல்ல லக்ஷ்மியைப் போய் ஏன் சனியன் சனியன்னு சொல்றேள்?... ஆனா ஒண்ணு. சனியன் சனியன்னு நீங்க சொல்றதும் சரிதான். இன்னிக்கு சனிதான் அசாத்ய பலமாக இருக்கான். அவன் தான் இன்னிக்கு ஜயகாரகன், தனகாரகன் இன்னிக்கு சனிதான் லக்ஷ்மிதேவியை முதல்லெ கொண்டு நிறுத்தப் போறான். லக்ஷ்மி லக்ஷ்மியாக் கொட்டப் போறான்னேன் நியூமராலஜி, தாரை, சந்திரன் ஹோரை எல்லாம் அப்படியே தங்கமா சொட்றது."

"நெசமாவா?"

"இன்னும் பதினஞ்சு நிமிஷம் கொடுக்கறேளா? கணக்குப் போட்டுக் காமிக்கிறேன்."

"பத்து நிமிஷத்திலே சொல்லும். ஜாக்கி எட்டரை மணிக்கு வரேன்னிருக்கான். அவனோட ஸ்டேபிளுக்குப் போகப் போறேன். ஜிங்கிலி! நீ போய் வேற பாவாடை சொக்கா யெல்லாம் போட்டுக்கோ, சொல்றேன். உன்னையும் அழச்சிண்டு போப்போறேன்"னா தாத்தா.

உடனே உள்ளே ஓடினேன். பாட்டிகிட்ட சொன்னேன். பாட்டி ஜரிகைப் பாவாடையை எடுத்துக் கொடுத்தா. புதுச் சட்டை போட்டு விட்டா. பவுடர் போட்டு, மை இட்டா. பூ வச்சா. ஜோஸ்யர் மாமா கணக்குப் போட்டுச் சொல்லிண்டி ருந்தா.

அப்ப அந்த பச்சைப் புஸ்தகம் தொப்புனு படத்துக்குப் பின்னாலேர்ந்து விழுந்தது. சரியா சொருகலே, நான் எடுத்துப் பிரிச்சுப் பார்த்தேன். ஆதிசங்கராசாரியாள் அருளிய கனகதாராஸ்தவம், விலை பத்து காசுன்னு எழுதியிருந்தது. அப்புறம் தமிழ் எழுத்திலே பாட்டு பாட்டா எழுதியிருந்தது. ஆனா ஒண்ணும் புரியலே. பாட்டியைக் கேட்டேன். சொன்னா. ஆதி சங்கராச்சாரியார் சின்னப் பையனாக இருக்கிறபோது பிட்சை வாங்கி சாப்பிடுவாராம். ஒரு நாள் ஒரு வீட்டுலே போய்க் கேட்டபோது, அப்ப அந்த வீட்டு மாமா வெளியிலே போய் இருந்தாராம். மாமி மட்டும் இருந்தாளாம். வீட்டிலே அரிசி, பருப்பு ஒண்ணுமே இல்லே. மாமி தேடித் தேடிப் பார்த்துட்டு, ஒரு பழைய நெல்லிக்காய் காஞ்சு கிடந்துதாம், அதை எடுத்துண்டு வந்து, "வேற ஒண்ணுமே இல்லேடா குழந்தே"ன்னு சொல்லிண்டே பையனோட பாத்திரத்திலே போட்டாளாம். சங்கராசாரியாருக்குத் தொண்டையை அடச்சுண்டு வந்துதாம். இத்தனை நல்ல மாமியை இத்தனை ஏழையா வச்சிருக்குயேன்னு, மகாலக்ஷ்மி மேலே கிடுகிடுன்னு பாட்டு மாதிரி சொன்னாராம். அவர் முடிச்ச உடனே கலகலகலகலன்னு அந்த வீட்டுக்குள்ளே ஒரே தங்கக் காசா, மழை கொட்டறாப்போல கொட்டித்தாம். அந்தப் பாட்டு தானாம் இது. நான் சங்கராச்சாரி பையனையே நினைச்சுண்டு நின்னேன். திடீர்னு வாசல்லே

கார் ஹார்ன் கேட்டுது. ஜாக்கி கார்தான். தாத்தா ஒரு அரைக்கைச் சட்டையை மாத்திரம் போட்டுண்டு புறப்பட்டா. ஜாக்கி ராண்டால் என்னைப் பார்த்ததும் "வநாக்கம், எப்பாடி இரிகீறிர்கல்?"னு சிரிச்சார். சௌக்யம்னேன். ஓ-நல்லதுன்னு சிரிச்சார் ராண்டால். தாத்தா காரை கராஜிலேர்ந்து எடுக்கச் சொன்னா. ராண்டால் தன்னோட காரை ஓரமா நிறுத்திட்டு, தாத்தா கார்லே ஏறிண்டார். ஜோஸ்யர் மாமாவும் கூட வந்தார். கார் கிளம்பித்து.

"இவர் எங்க ப்ரண்டு, சங்கர் தீட்சித்"ன்னு ஜாக்கி கிட்ட சொன்னா தாத்தா.

"வநாக்கம் சௌக்யமா?"ன்னார் ராண்டால்.

"சௌக்யம். ஏது! தமிழ் தெரியும் போலிருக்கே!"

"கொஞ்சாம். பதினெட்டு வருசங்கலாக மதராஸிலே இரீகிறேனலவா?" ன்னார் ராண்டால்.

"பேஷ் பேஷ்"னார் ஜோஸ்யர் மாமா. அப்புறம் அவர் நட்சத்திரம் என்னன்னு கேட்டுச் சொல்லுங்கோன்னார். தாத்தா கேட்டதுக்கு "தெரியாது, ஆனா பொறந்த தேதியும் நேரமும் தெரியும்"னு சொன்னார் ஜாக்கி. உடனே ஜோஸ்யர் மாமா பையைத் திறந்து ஒரு அட்டை கிழிஞ்ச புஸ்தகத்தைப் பெரட்டி பார்த்து கணக்குப் போட ஆரம்பிச்சுட்டார்.

நான் ஓரத்திலே உட்கார்ந்திருந்தேன். காத்து குளு குளுன்னு வீசித்து. பிலுபிலுன்னு மானம் எல்லாம் பஞ்சு மிட்டாயா இருந்தது. அந்தாண்டை கொளகொளன்னு தயிர் கட்டி மாதிரி இருந்தது-உடஞ்சு போனாப்பல. தாத்தா மத்தவா குதிரையெல்லாம் எப்படி இருக்குன்னு கேட்டுண்டே வந்தா. ராண்டால் ஒரே நம்பர் நம்பராவே பதில் சொல்லிண்டு வந்தார்.

"நம்ம ஜாக்கிக்கும் பிரமாத யோகமான்னா இருக்கு "இன்னிக்கு"ன்னார் ஜோஸ்யர் மாமா திடீர்னு.

தாத்தா அதை ஜாக்கிகிட்ட சொன்னார். "ஓ தாங்க்யூ.. ஆனா நான் இதெல்லாம் நம்பறது கிடையாது. குதிரை என்னைக் குப்பறத் தள்ளி மிதிச்சாலும் நான் இதையெல்லாம் நம்பமாட்டேன்"னார் ஜாக்கி.

"அது சரி. ஆனா கண்ணாடி மாதிரி உங்க ஜாதகம் சொல்றதே உங்க அதிர்ஷ்டத்தை. நீங்க நம்பலேன்னா. அதிர்ஷ்டம் வராம இருந்துடுமா? இவருக்கும் சனிதான்னே ஜயகாரகன். எல்லாம் ஒரேயடியா சேர்ந்திண்டிருக்கு."

"என்ன எல்லாம் ஒரே சனியனா இருக்கு இன்னிக்கு!"ன்னார் தாத்தா.

"சனி மனசு வச்சான்னா எது நடக்காது? அவன் பெருமையை இன்னிக்கு சாயங்காலம் மூணேகால் மணிக்கு பார்க்கப்போறேனே, இன்னிக்கு மாத்திரம் லக்ஷ்மிதேவி முதல்லே வரலெ என் தலையை அடகுவைக்கத் தயார்."

"உம்ம தலையை அடகு வச்சா நவகிரகங்களும் அப்படியே நின்னுடும்னு நெனச்சீரோ?"

"இன்னிக்கு நான் சொல்றது நடக்கலேன்னா நவகிரகங்களும் நிக்கத்தான் வேணும்னேன்."

"இப்படியேதான் எல்லா ஜோஸ்யனும் சொல்றான். ப்ஸ!"

"நீங்க மூச்சுக்கொட்டறேள், மூணேகால் மணிக்கு என்னைத் திரும்பிப் பார்ப்பேளா! எல்லாரும் உங்களை போட்டோ புடிச்சிண்டிருப்பா. லக்ஷ்மிதேவியோட அப்ப என் ஞாபகம்தான் வரப்போறதோ?"

"அதுதான் நீரும் வாரும்கறேன் ரேஸ்கோர்சுக்கு. நீர் சொல்றது நடக்காட்டா, சைதாப்பேட்டை நவக்கிரகத்துக்காவது உம்மைப் பலி கொடுக்கலாம். நீர் அந்த மாதிரி ஏதாவது நடந்துடப் போறதோன்னு பயந்திண்டுதானே டில்லி மந்திரி டயம் கொடுத்துட்டார்னு கதைக்கிறீர்?"

"கதையா? நீங்களே வந்துபாருங்கோ. டில்லி மந்திரி பங்களூர்லேர்ந்து விமானத்திலே வரார். நாலுமணி நேரம் தான் தங்கப்போறார். அதுக்குள்ள எப்படியாவது என்னைப் பார்த்துடணும்னு சொல்லியிருக்கார். நீங்க வாணா ஒரு ஆளை அனுப்பிச்சுப் பாருங்களேன். நான் மூணு மணிக்கு அவரோட பேசிண்டு இருக்கேனா இல்லையான்னு."

ஜோஸ்யர் மாமா நந்தனம் காலனிகிட்ட இறங்கிண்டார். நாங்க நேரே போனோம்.

லக்ஷ்மிதேவி என்னைப் பார்த்ததும் சிரிச்சுது. தாத்தா தட்டிக்கொடுத்தா. தடவிக்கொடுத்தா. நானும் பயந்துண்டே தடவிக்கொடுத்தேன். லக்ஷ்மிதேவி காப்பிப் பொடிக்கலர்.

ஜோஸ்யர் மாமா பார்த்தா, "சனியும் கறுப்புக் கலர்னா. நீங்க சொல்லவே இல்லியே லக்ஷ்மியும் கறுப்புக்கலர்னு"ன்னு சிரிச்சிருப்பார். தாத்தா லக்ஷ்மிதேவியைச் சுத்திச்சுத்திப் பார்த்தா, அப்பறம் மூஞ்சிகிட்ட போனா. "இன்னிக்கி மாத்திரம் நீ தோத்தே, உனக்கு மூதேவின்னு பேர் வச்சு ஜட்காக்காரன் கிட்டவித்துடப்போறேன். அப்புறம் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு முன்னாலெ சாக்கடை புல்லெல்லாம் கடிச்சிண்டு சாவுக் கிராக்கியைத்தான் தூக்கிண்டு போகணும்"ன்னு அதோட கன்னத்தை லேசா குத்தினா. "ஏன் தாத்தா இப்படியெல்லாம் சொல்றேள்? தோத்தாக்க, நம்மாத்திலே வச்சுக்கப்படாதா? நான் ஸ்கூலுக்குக் குதிரை வண்டியிலே போகமாட்டேனா"ன்னு கேட்டேன்.

தாத்தா என்னை கொஞ்ச நாழி பார்த்தா.

"இனிமே அப்படி எல்லாம் சொல்லாதீங்கோ தாத்தா. சாவுக்கிராக்கின்னு டாக்சிக்காரன் மாதிரி பேசரேளே"ன்னேன்.

தாத்தா மறுபடியும் என்னைப் பார்த்தா. "இனிமே சொல்லலேடா கண்ணு"ன்னு என்னையும் தடவிக் கொடுத்தா.

"நீங்க ராத்திரி ராத்திரி ராமாயணம்லாம் கேக்கப் போறேள். பாட்டுக் கச்சேரில்லாம் கேக்கறேள். டாமிட் ஹெல்லுன்னெல்லாம் அண்ணா நான் எல்லாம் சொல்லப்படாதுன்னேளே"

"இனிமே சொல்லலே-இனிமே சொல்லலே"ன்னா தாத்தா.

அப்புறம் வெளியிலே வந்தோம்.

மத்தியான்னம் சாப்பிட்டு அரைமணி தூங்கினா தாத்தா. அப்பறம் பட்டு சட்டை, கோட்டு, டை யெல்லாம் கட்டிண்டா. ஆபீஸ் கதவைச் சாத்திண்டா. பீரோ திறக்கற சத்தம் கேட்டுது. க்ளாஸை எடுத்து வக்கிற ஓசை கேட்டுது-பிஸ்ஸுன்னு சோடா மூடி திறக்கற சத்தம் கேட்டுது. ஜிங்கிலி, மூஞ்சி யெல்லாம் அலம்பிண்டு தயாராயிருன்னு குரல் வந்தது. நான் சமையல் உள்பக்கம் போனேன், தாத்தா கதவைச் சாத்திண்டா, அந்த உள்ளே எட்டிக்கூடப் பாக்கப்படாதுன்னு பாட்டி சொல்லியிருக்கா. ஆனா தாத்தா ஒரோரு தடவையும் இப்படித்தான் எங்கிட்ட சொல்லுவா.

மறுபடியும் வேற பாவாடை, வேற சட்டை, வேற பூ பாட்டிதான் வச்சு விட்டா. நெத்திக்கு இட்டுக்கோ. நானும் வேற புடவை கட்டிக்கறேன்னா பாட்டி. கண்ணாடியிலே பார்த்தேன். நெத்திக்கு இட்டுண்டேன். அப்படியே நின்னுண்டிருந்தேன். ராயப்பேட்டை ஆஸ்பத்திரிகிட்ட ஜட்கா ஸ்டாண்டு. ஒரே குதிரை நெடி. லக்ஷ்மிதேவி புல்லு திங்கறது. யாரோ ரண்டு பேர் அழுதுண்டே என்னமோ கேக் கறா, வண்டிக்காரனை. “சாவு கிராக்கியா-எங்கே?”

“இங்கதான்பா. தேனாம்பேட்டை”

“இருவது ரூவா”

“அட சொல்லுப்பா. ஆளைப்பாத்தா தெரியலியா? கோடீச்வரங்கன்னு நெனச்சியா?”

“நான் மாத்திரம் கோடீச்வரனா? டாக்சிக்காரங்களைக் கேளு நாப்பது ரூவாக்கு தம்பிடிகாசு குறைக்கிறாங்களான்னு பாரேன்”.

போனவருஷம் பாக்டரி வாட்ச்மன் பச்சையப்பன் பொண்டாட்டி ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலே செத்துப் போயிட்டா. குதிரை வண்டிக்கு இருபது ரூவா கொடுத்து, தேனாம்பேட்டைக்குத் தூக்கிண்டு போனானாம் வீட்டுக்கு.

தாத்தா ராமாயணம் கேக்கறபோது ஒண்ணு மில்லாததுக்கெல்லாம் சிரிப்பா. சபாவிலே பாட்டுக்கச்சேரி நடக்கற போது தொப்பு தொப்புன்னு தப்பு தப்பாத் தாளம் போடுவா-

“ஜிங்கிலி நெத்திக்கு இட்டுண்டாச்சா”ன்னு பாட்டி கேட்டுண்டே கிட்டக்க வந்தா. மூக்கைத் தொளைச்சது செண்ட்டு.

“யாரங்கே? நீயும் கிளம்பப் போறியா? மரணக் கொழுந்து செண்டு வாசனை அடிக்கிறதே”ன்னு கதவைத் திறந்துண்டு நிலைப்படியிலே நின்னா தாத்தா.

“உங்களுக்குப் பிடிக்கலேன்னா, மூக்கைப் பிடிச்சுண்டு இருக்கறதுதானே. அதுக்காக தத்துக்கா பித்துக்கான்னு சொல்லாத வார்த்தையெல்லாம் சொல்றதா? ரொம்ப அழகா இருக்கு பேசறது”ன்னா பாட்டி.

“கோச்சுக்காதே பாரிஸ், கனோசிலேர்ந்தெல்லாம் அப்சரஸு போட்டுக்கற செண்டெல்லாம் வாங்கி

வச்சிருக்கேனடி, இந்த மருக்கொழுந்து செண்டைப் போட்டுண்டு நாட்டுக்கட்டை மாதிரி நடமாடறியேன்னு சொன்னேண்டீ. வேற ஒன்றும் இல்லே"ன்னு இஹி இஹி இஹின்னு தோள், வயிறெல்லாம் குலுங்கச் சிரிச்சா தாத்தா. அப்பறம் உள்ளங்கையாலே உதட்டைத் துடைச்சிண்டா.

ரேஸ்கோர்ஸிலே நேத்திக்கிக் கூட்டம் தாங்க முடியலெ.

தாத்தா எங்களை மேலே உக்காத்தி வச்சுட்டு கீழே அங்கியும் இங்கியுமா பேசிண்டு நடந்திண்டிருந்தா. முதல் ரேஸ் முடிஞ்சுது. நான் கீழே இறங்கிப் போய், தாத்தா விரலைப் புடிச்சிண்டேன். புக்கி ஸ்டாண்டுக்குப் போனா தாத்தா. ஒரோரு ஸ்டாலா நின்னு பாத்தா தாத்தா. ஒன்பது குதிரை ஓடப்போறது. மத்ததுக்கு ஒண்ணுக்கு ரண்டு, நாலு, மூணுன்னு போட்டிருந்தது.

லக்ஷ்மிதேவிக்கு மாத்திரம் ஒண்ணுக்கு முப்பதுன்னு போட்டிருந்தது, ஒரு போர்டிலே இன்னொண்ணிலே இருபதுன்னு போட்டிருந்தது. அவன் தாத்தாவைப் பாத்துட்டு ஒண்ணுக்கு அம்பதுன்னு திருத்தினான்.

"இன்னாப்பா, ஒண்ணுக்கு அம்பது போட்டிருக்கேன் உன் குதிரைக்கு, எங்கிட்ட கட்டேன்."

தாத்தா சிரிச்சா. "எங் குதிரைன்னா அமிஞ்சிக்கரை ஜட்காக் குதிரைன்னா நெனச்சினுட்டே, இல்லையா?"ன்னு சிரிச்சா.

"அப்படி சொல்லாதேப்பா. நீ தான் நம்மை சட்டையே பண்றதில்லை. அதுக்குத்தான் உன்னைப் பார்த்தப்பறம் 50ன்னு போட்டேன்."

"ஒண்ணுக்கு நூறு கொடுப்பியா?"

"எடுத்துக்க. இதோ உனக்கு முன்னாலேயே போடறேன்"ன்னு சாக்கட்டியாலே லக்ஷ்மி தேவிக்கு முன்னாடி இருந்த 50ஐ 100ன்னு திருத்தினான் அவன்.

"ஜாக்ரதை. ஒரு ஆயிரம் கட்டி, நம் அனிமல் ஜயிச்சிதுன்னா, நீ லக்ஷ ரூபா கழட்டணும். ரண்டாயிரம் கட்டினேன்னா ரண்டு லட்சம் கயண்டு போயிடும்"

"எடுத்துக்க. நான் உனக்கு லட்சம் கொடுத்து போண்டியானா, மோதிரக்குட்டு. அப்பறம் உன் கால்லியே உளுந்தா, நீ உன் பாக்டரி ஒண்ணிலே நூறு ரூபா சம்பளத்துக்கு வேலை போட்டுத் தரமாட்டியா? ஏம்பா, என்னா ஸத்தாய்க்கிறே?"

"இப்ப நீ ஸத்தாய்க்கிறியா? நான் ஸத்தாய்க்கிறேனா?"

"அட கட்டுப்பா. சும்மா டயம் போயிகினே இருக்கு."

"சரி-ஒரு ஆயிரம் போட்டுக்க"ன்னு தாத்தா உள் பாக்கெட்டிலேர்ந்து ஒரு கத்தை நோட்டை எடுத்துக் கொடுத்தா. அவன் வாங்கிண்டான். சீட்டு எழுதிக் கொடுத்தான்.

எல்லா புக்கியும் என்னைப் பார்த்து சிரிச்சிண்டிருந்தா.

"எனக்குக் கிடையாதாப்பா?"ன்னான் இன்னொரு புக்கி.

"நீ பதினஞ்சுதானே போட்டிருக்கே"ன்னா தாத்தா.

"நான் அவன் மாதிரியா? அன்னாடங்காச்சியாச்சே."

"அப்படின்னா ஒரு நூறு போட்டுக்கோ"ன்னா தாத்தா, சீட்டு வாங்கிண்டா.

இன்னும் ரண்டுபேர் கூப்பிட்டா.

"அடுத்த ப்ளேட்டுக்கு"ன்னு தாத்தா அவசர அவசரமாக வந்துட்டா. எல்லோரும் தாத்தாவைப் பாத்து சிரிச்சுண்டேயிருந்தா.

ரேஸ் ஆரம்பிக்கப் போறது. நான் படியிலே ஏறி பாட்டிக்கிட்டபோய் உட்கார்ந்துண்டேன். பாட்டி பைனா குலர்ஸிலே பாத்துண்டிருந்தா.

சிட்டுக் குருவி கத்தறபோதெல்லாம் வாலை வாலைத் தூக்குமே, அந்த மாதிரி கீழே எல்லாரும் கையைக் கையை ஆட்டிக் கத்திண்டிருந்தா.

"தாரா ராணி தாரா ராணி-கம் ஆன், கம் ஆன்"ன்னு ஒரு மாமா ஆவேசம் வந்து கத்தினா.

"டஸ்ட் பின், டஸ்ட் பின்-கீப் அப், கீப் அப்"னு ஒரு துல்லா, பஞ்ச கச்சம் போட்ட மாமா கத்தினா.

"லக்ஷ்மிதேவி எங்க பாட்டி வரது?"

"இருடீ-ஒரு எழவும் புரியலே"ன்னா பாட்டி.

"நான் பாக்கறேன் பாட்டி."

கீழே தாத்தா "லக்ஷ்மிதேவி, அப் அப்"னு கத்திண்டிருந்தா. "எஸ் எஸ்-லங்க்டாதேவி அப் அப்,னு பக்கத்திலே ஒரு மாமா கத்தினா, தாத்தா சிரிச்சிண்டே அவரை முதுகிலே குத்தினா.

"நான் பாக்கறேன் பாட்டி."

"சரி-ஒண்ணும் புரியலெ. மூக்குக் கண்ணாடியைப் போட்டுண்டு பாத்தா கருக்கா தெரியலே. கண்ணாடியை எடுத்தா துணி கட்டினாப்பல இருக்கு"ன்னு எங்கிட்ட கொடுத்தா பாட்டி.

நான் பார்த்தேன்-பைனாவை வாங்கி.

லக்ஷ்மிதேவி கடைசியிலே வந்துண்டிருந்தது. ராண்டால் மஞ்ச சட்டை போட்டுண்டிருக்கார். அதாத்தான் இருக்கணும்-கடைசியா வரது.

"லங்டா தேவின்னா என்ன பாட்டி?"ன்னேன். பாட்டிக்குத் தெரியலே.

பக்கத்தில குப்தா பொண்ணு இருந்தது. அது வந்து "லேம் கேள்"னுது. லங்க்டா தேவின்னா நொண்டிப் பெண்ணா?

இல்லே-இல்லே. லக்ஷ்மிதேவி-எட்டாவது குதிரையை, இல்லை-ஏழாவது குதிரையைத் தாண்டிடுத்து.

"பாட்டி, லக்ஷ்மிதேவி முந்திண்டு வரது."

"எங்கிட்ட கொடுடீ, பாக்கறேன். சரியா வச்சுக் குடு" பாட்டிகிட்ட கொடுத்தேன்.

"எனக்கு ஒன்றும் தெரியலியேடி ஜிங்கிலி".

"சட்டுனு பார்த்துட்டு கொடு பாட்டி."

"லக்ஷ்மி-கம்மான் ஆன், கம்மான் ஆன்" என்று தாத்தா கீழே எம்பி எம்பிக் குதிச்சா.

பைனாவை வெடுக்குனு பாட்டி கையிலேர்ந்து பிடுங்கிண்டு பார்த்தேன்.

"ராண்டால், மஞ்ச சட்டை மூணாவதாக வந்திண்டிருக்கு, ரண்டாவது குதிரையை இடிக்கறாப்பல வந்துண்டிருந்தது லக்ஷ்மி. இப்ப ரண்டாவது மூணாவதா போயிடுத்து. பாட்டி, பாட்டி, லக்ஷ்மி ஸகிண்டா வரதுண்னேன்."

"இப்படி கொடேண்டி அதை."

"இரு இரு."

"கொடுறீன்னா."

"மாட்டேன்."

வடக்குப் போஸ்டுக் கிட்ட விழுந்தடிச்சிண்டு ஓடி வந்தது எல்லாம். ஆனா ரெண்டு ரொம்ப முன்னாலெ வந்துடுத்து. லக்ஷ்மியும் அந்த சாம்பல் குதிரையும் ஒட்டிண்டு வரது...விறுக்குனு பாஞ்சுது லக்ஷ்மி. குடு குடுன்னு கொட்டப்பாக்கு மாதிரி ஓடிவரது. சாம்பக் குதிரை பின்னாடி போயிடுத்து.

"பாட்டி லக்ஷ்மி வந்துடுத்து. பஸ்டு, பஸ்டு. பாரு.... பைனா வாண்டாம். இதோ வரது பார். இதோ வந்துடுத்து பார்."

தாத்தா கிடந்து கிழே குதிக்கிறா.

ஒரே கூச்சல். தாத்தாவை எல்லாரும் வந்து மொச்சுனூட்டா. தாத்தா இருக்கிற இடமே தெரியலெ.

இரைச்சல். லக்ஷ்மி தேவி முதல். சாம்பக் குதிரைக்குப் பேரு க்ரேமாட்டர். அது ஸகிண்ட். மூணாவது தாரா ராணியாம். கடலிரைச்சல். நான் கீழே இறங்கி விழுந்தடிச்சி ஓடினேன்.

"இங்கியே இருடி ஜிங்கிலீ. கூட்டத்திலே மிதிபட்டுப் போயிடுவே"ன்னு கத்தினா பாட்டி.

"நான் தாத்தாவைப் பார்க்கப்போறேன். அப்பறம் லக்ஷ்மியைப் பார்க்கப்போறேன்"னு ஓடினேன்.

தாத்தா கிட்ட போக முடியலெ. நான் இடுக்கிலே பார்த்தேன் முடியலெ.

தாத்தா கிட்ட போக முடியலெ.

"லக்ஷ்மி விழுந்துடுத்து."ன்னு ஒருத்தன் கத்தினான். மறுபடியும் சத்தமும்...கலாட்டா....

ஆமா. லக்ஷ்மி விழுந்துடுத்து. ஜெயிச்சு, கம்பத்தைத் தாண்டி அம்பதடி போனப்பறம் ரண்டு காலையும் மடக்கிண்டு பொத்துன்னு விழுந்துடுத்தாம். தாத்தா குடு குடுன்னு ஓடிவந்தா. லக்ஷ்மியைப் பார்க்க ஓடினோம். நான் தாத்தாவோட சேந்துண்டேன். கூட்டத்தை விலக்கிண்டு கிட்டக்கப் போனோம். லக்ஷ்மி ஒருக்களிச்சுப் படுத்துக் கிடந்தது. ராண்டால் அப்பதான் எழுந்து, நொண்டி நொண்டிண்டு வந்தான். அதை தடவிக் கொடுத்தான். லக்ஷ்மி வாயிலே நுரைச்சு நுரைச்சு வழிஞ்சுது. தாத்தாவைப் பார்த்துது அது என்னைப் பார்த்துது, ராண்டாலை பார்த்துது. ஒரு தடவை கனைச்சுது. நான் சட்டுனு பின்னாலே நகர்ந்துண்டேன். எல்லாரும் முணுமுணுன்னு பேசிண்டிருந்தா.

தாத்தா லக்ஷ்மி மூஞ்சியைப் பார்த்துண்டே நின்னா.

குதிரை டாக்டர் வந்து லக்ஷ்மி காலைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தார். தாத்தாவைப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கினார்.

தாத்தா கண்ணு பளபளன்னு மிதந்தது நிச்சயமாவான்னு கேட்டா தாத்தா.

வேற என்ன பண்றது-ன்னார் குதிரை டாக்டர்.

ஜிங்கிலி-நீ பாட்டி கிட்ட போ....

நான் தாத்தாவைக் கெஞ்சிண்டே பார்த்தேன்.

"போன்னா போகணும்.."

தாத்தா மூஞ்சியைப் பார்த்தா எனக்குப் பயமா இருந்தது, கஷ்டமாகவும் இருந்தது.

"போன்னா போ."

நான் மெதுவா பாட்டிகிட்ட நடந்து வந்தேன். பாட்டி இறங்கி நடந்து வந்தா.

"என்னடீ?"

"லக்ஷ்மி கால் ரண்டும் ஒடிஞ்சு போச்சு." தாத்தா திரும்பி வந்தா.

பாட்டியைப் பார்த்த உடனே கைகுட்டையாலே கண்ணைத் துடைச்சிண்டா. உதட்டை இறுக்கி அமுத்திண்டா.

டசார் டசார்னு ரண்டு சத்தம். என்னது?

"நீ வேணும்னா லக்ஷ்மியைப் பார்த்துட்டு வா"ன்னா தாத்தா.

பாட்டி போனா. நானும் நடந்தேன்.

"ஜிங்கிலி நீ இங்கேயே இரு."

அந்த புக்கி ஓடி வந்தான்.

"ரொம்ப சாரிப்பா-மௌலி. இன்னா சொல்றது நான்? உசிரைக் கொடுத்து கெலிச்சாம்பாங்க. அப்படியே ஆயிருக்கு. ஷுட் ஆர்டர் கொடுத்துட்டியா!"

"இப்பதான் சத்தம் கேட்டுதே!"

"ரொம்ப வெசனமா இருக்கப்பா. என்ன டிஸ்டன்ஸ் காமிச்சுக்கிட்டு வந்தது! என்னா டிஸ்டன்ஸ்! என்னா டிஸ்டன்ஸ்!"

"எல்லார் கண்ணும் பட்டுடுத்து. என் கண்ணே பட்டிருக்கும். நான் இன்னிக்கின்னு வந்தேனே பாவி. அதுக்கு ஏத்தாப்பல தத்துப் பித்துன்னு ஏதோசொல்லி மருக்கொழுந்து சென்ட்டைக் கரிச்சுக் கொட்டினேள்!"ன்னா பாட்டி.

"கோச்சுக்காதெ மௌலி. நான் சொன்ன பேச்சு தவறமாட்டேன். அறுபதாயிரம் ரொக்கமாகக் கொடுத்திடறேன். மீதிக்கு நோட்டு எழுதிக் கொடுத்திடறேன். இத பாரு. நீ வர்றப்பவே சிரிச்சுக்கினே இருந்தேன். திரௌபதி சிரிச்ச கணக்கா ஆயிரிச்சு. ஆளையே போண்டி பண்ணிட்டியேப்பா."

"இந்த நான்சென்செல்லாம் அப்பறம் பேசேன்"னு வள்ளுனு விழுந்தா தாத்தா.

மறுபடியும் தாத்தாவைச் சுத்திக் கூட்டம் மொச்சுண்டுது. தாத்தா எங்கேயோ போயிட்டா.

அடுத்த ரேஸ் நடந்திண்டுருந்தது. ஆனா ட்ரைவர் வந்து தாத்தா கூப்பிடறான்னு எங்களை அழச்சிண்டு போனான்.

காரிலே ஏறிண்டோம்.

வழி எல்லாம் தாத்தா-"ஒண்ணு ஒண்ணே கால் அது ஒரு முப்பத்தஞ்சு-மொத்தம் ரண்டே காலுக்கு மேலேன்னேன்"ன்னு பாட்டியைப் பார்த்து லேசாச் சிரிச்சா

"இப்படி வாரி வாரிக் கொடுத்துட்டு என் கையாலே ஒரு பாட்டில் ரம் சாப்பிடப்படாதா? அப்படியே யமலோகத்துக்கு ஓடிப்போயிட்டாளே!"

"ஓடிப் போயிட்டாளா-சுட்டுன்னா அனுப்பிச்சேள்?"

"அந்தக் காலோட உசிரை வச்சிண்டிருந்தா நாலு எமலோகம். நாம வாங்கி அனுபவிக்க முடியுமா கஷ்டத்தை?"

"ஏன் தாத்தா, நான் பள்ளிக் கூடத்திலே விளையாடற போது, கீழே விழுந்து காலை ஒடிச்சுனூட்டேன்னு வச்சுக்குங்கோ."

"போறும், ரொம்ப அழகாப் பேசறியாக்கும்"-ன்னு பாட்டி பழிப்புக் காட்டினா. "தாத்தா-பேத்தி ரண்டு பேர் வாயிலியும் ஒரு நாள், ஒரு நல்ல வார்த்தை!"

"ஏம் பாட்டி?"

"சரி. புரிஞ்சு போயிடுத்து. சினிமா பேத்தி மாதிரி மேலமேல பேச வேண்டா"ன்னா பாட்டி.

"நீ தான் சினிமாப் பாட்டி மாதிரி சென்ட்டெல்லாம் போட்டுண்டிருக்கே. மரணக் கொழுந்து சென்டு"-ன்னேன் நானும் வெடுக்குன்னு.

பாட்டி என்னை ஓசைப்படாம கிள்ளினா.

"பேசாம இருடி. உனக்கும் குழந்தைக்கும் அம்பத்தி மூணு வயசு வித்யாசம். ராட்-"னு தாத்தா பாட்டியைப் பார்த்து பல்லைக் கடிச்சா.

வீடு வந்தது. தாத்தா செக்கு பணம் எல்லாம் எடுத்து லக்ஷ்மி படத்துக்கு முன்னாலே வச்சா, "கீழே

வைப்பானேன்-சேப்பங்கிழங்கை கொட்றாப்பல-"ன்னு பாட்டி ஒரு பெரிய பலகையைக் கொண்டுவந்தாள். அதிலே ஏற்கனவே இழைகோலம் போட்டிருந்தது. பிள்ளையார் சதுர்த்திக்காகப் போட்டிருந்த கோலம். பாட்டி எல்லா பணத்தையும் செக்கையும் அதிலே அள்ளி வச்சா.

தாத்தா கொஞ்ச நாழி லக்ஷ்மி படத்தைப் பார்த்துண்டு நின்னா. பலகையிலே இருந்ததையெல்லாம் எடுத்து, ஆபீஸ் உள்ளே பீரோவிலே வச்சுப் பூட்டினா. அப்படியே கதவைச் சாத்திண்டா.

பாட்டி கதவண்டை நின்னா,

"உங்களைத்தானே."

"என்ன?"

"தினம் தினம் விழுந்து விழுந்து சொல்லிட்டு, இப்ப மறந்து போயிட வாண்டாம். ஏழு மணிக்கெல்லாம் குளிச்சுண்டு கனகதாரா ஸ்தோத்ரத்தை வாசிக்கட்டும். அப்பறம் நன்றி கெட்ட ஜன்மம்னு ஆயிடும்"னு வெளியிலே நின்னுண்டே சொன்னா பாட்டி.

"எல்லாம் தெரியும்."

"பில்ஸ்"ன்னு சோடா சத்தம்.

ஏழரை மணிக்கு தாத்தாவோட காரிலே ஏறிண்டு சிவாவிஷ்ணு டெம்பிள், வடபழனி, பார்த்தசாரதி கோவில் எல்லாத்துக்கும் போய் அர்ச்சனை பண்ணிண்டு வந்தோம். திரும்பி வர்றபோது வாசல்லே ஜோஸ்யர் மாமா காத்துண்டிருந்தார்.

அவரும் தாத்தாவோட சாப்பாடு சாப்பிட்டார். அப்பறம் ரண்டுபேருமா ஆபீஸ் உள்ளுக்குள்ளே போயி கதவைச் சாத்திண்டா, தாத்தா. சீதாபதே, எனக்கினி யமபயம்-எல்லாம் பாடினா.

# மாப்பிள்ளைத் தோழன்

இது என்ன வைக்கோல் லாரியா, பஸ்ஸா? முன் முறுக்குகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன-கம்பி, சட்டம், திருகு ஆணி என்று கையில் கிடைத்ததைப் பற்றிக் கொண்டு, ஒரு ஆள், இன்னொரு ஆளைக் கீழே விழாமல் அணைத்துக் கொண்டிருக்கிறான்- இத்தனை கொல்லு கொலைப் போட்டியில் கருணை வேறு, விரல் விண்டு விடும் போல் நசுங்குகிறது. காலில் ஏதோ பூட்ஸ் மிதிக்கிறது. விரலா சதைக் குழலா என்று ஒரு நிமிஷத்தில் புரியாமல் போகிறது. இந்த வதைகள் பெட்ரோலுக்குத் தெரியாது. டீசல் எண்ணெய்க்குத் தெரியாது. ஆக்சிலேட்டருக்குத் தெரியாது, அதை மிதிக்கிற காலுக்குத் தெரியாது. உயிருள்ள வைக்கோல்களை ஏற்றி இழுத்துப் போகத்தான் தெரியும் அதற்கு.

பதின்மூன்று பஸ்கள் இப்படிப் போவதைப் பார்த்தான் மாப்பிள்ளைத் தோழன்.

இப்படியே நின்று கொண்டிருந்தால் மாப்பிள்ளை அழைப்புக்குப் போய்ச் சேர முடியாது. மணி ஆறு பத்து. ஏழரை மணி வரையில் இப்படித்தான் பஸ் போகும். பிறகு சுமாராக இடம் கிடைக்கலாம். பதினெட்டு கி.மீ. போக வேண்டும். இரண்டு பஸ் மாற வேண்டும். ஏழரை மணிக்குப் பிறகு ஏறினால் பத்துபத்தரை மணிக்குத்தான் போய்ச் சேரலாம், மாப்பிள்ளை அழைப்பு முடிந்து சாப்பாடு, எச்சில்களை எடுக்கும் நேரமாக இருக்கும்.

மாப்பிள்ளைத் தோழனாக இருக்கவேண்டும் என்று கல்யாணப் பையனின் அம்மா வருந்திவருந்திக் கூப்பிட்டிருக்கிறாள். இந்த அம்மாளுக்காகவாவது நேரத்தில் போய்ச் சேர்ந்தாக வேண்டும்.

மூன்றரை மணிக்கு நாற்காலியை விட்டு எழுந்து எசமானிடம் போய் "சார் இன்னிக்கு ஒரு கலியாணம். நான் போகாமலிருக்க முடியாது. அவ்வளவு நெருக்கம்" என்று தரையில் கால் படாமல் நின்றான்

எசமான் பதிலே பேசவில்லை. "இதை அடித்துக் கொடுத்துவிட்டுப் போய்விடு. பார்லிமெண்ட் கொஸ்ச்சினுக்குப் பதில், இன்னிக்குத் தபாலில் போகாவிட்டால், நான் என்ன சொல்ல? பார்லிமெண்டுக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் தெரியாதா நமக்கு? கடவுள் மன்னிப்பார்.. சீக்கிரம்."

"நான் மாப்பிள்ளைத் தோழன், சார். இருபது மைல் போகவேண்டும். இன்னும் அரைமணியாகி விட்டால் பஸ்ஸில் இடம் கிடைக்காது... சாப்பாட்டுக்குக் கூடப் போய்ச் சேர முடியாது."

"வெல்...கலியாணத்தை ஒத்திப் போடச் சொல்லலாம். பார்லிமெண்ட் கேள்வியை ஒத்திப்போட மாட்டார்கள்."

ஒரு பக்கத்தை டைப் அடித்து, கையெழுத்து வாங்கி டெஸ்பாட்ச் பிரிவில் கொண்டு சேர்க்க வேண்டியிருந்தது.

காரியம் முடிந்ததும் எசமானர் கையெழுத்துப் போட்டு விட்டுக் சொன்னார்: "இப்போதுதான் எனக்கு உயிர் வருகிறது. மலையைத் தோளைவிட்டு இறக்கின விடுதலை, உனக்கு ரொம்ப மனவேதனை. உன்னை நிறுத்திவிட்டேன், சமயத்திற்கு, நிஜமாகவே, மனப்பூர்வமாகவே வருந்து.. டிஸ்பாட்சில் உன் கைபடக் கொடுத்து விட்டுப் போய்விடு."

எப்படி! இதே உடுப்போடா? இதே எண்ணெய் வழிவோடா?-அதுவும் மாப்பிள்ளைத் தோழனாகவா?

பரவாயில்லை. மாப்பிள்ளையின் சோப்பு, சீப்பு, தைலம், வேட்டி-ஏதாவது இருக்கும்.

பஸ் ஸ்டாப்புக்கு வந்ததும் வயிற்றைப் பற்றிக் கொண்டு வருகிறது.

கண்ணகியாக சிறிது நேரம் நின்றான். நகரம், பஸ்ஸுகள், ஆள்பவர்கள் எல்லாரையும் ஒரே பார்வையில் தீயிலிட வேண்டும் போலிருக்கிறது.

சந்தைக்குப் போகிற சட்டிப்பானை வண்டிகளாக, எல்லாப் பஸ்களிலும் பக்கம், முதுகு எல்லாம் மனிதர்கள் ஒண்டல்.

அழுகை வருகிறது. இப்போது பிடித்துக்கொள்ள ஒரு கைதான். இன்னொரு கையில் மாப்பிள்ளைக்காக வாங்கிய பரிசுப் பொட்டணம்.

நேற்று இரவுதான் ஒரு புத்தகத்தில் படித்தோம்- முக்தி என்றால் என்ன, உண்மையான ஆனந்தம் என்றால் என்ன என்று. கடமை உணர்ச்சி இல்லாமல் இருப்பதுதான் ஆனந்தமாம். யாருக்கும், எதற்கும், எப்போதும் கடமைப்பட்டிருக்கக் கூடாதாம்.

இதை நினைத்து நினைத்து, விரித்து விரித்து, மனிதர்களாகவும் செய்கைகளாகவும் அலுவல்களாகவும் மனப் படங்களாகவும் மாற்றி மாற்றிப் பார்த்ததில் இரவு ஒரு மணி வரையில் தூக்கம் போய்விட்டது,.

கலியாணம் எதற்காகச் செய்து கொள்கிறார்கள்? செய்து கொள்ளட்டும், எதற்காக பத்திரிகை போட்டு அழைக்கிறார்கள்? பேசாமல் புதுப்புடவை ரவிக்கை நகை வாங்கிக் கொடுத்து, புது வேட்டி வாங்கிக் கட்டி, யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் உள்ளே போய் படுத்துக் கொள்ளக்கூடாதோ? என்னை எதற்காகக் கூப்பிடுகிறான் இவன்? டாக்சிக்கோ ஆட்டோ ரிக்ஷாவுக்கோதான் என்னிடம் காசில்லையே. நான் ஏன் பரிசு என்று இதை வேறு வாங்கி பஸ்ஸில் ஏற வகையில்லாமல் தவிக்கிறேன்! ஏன் திரும்பிப் போய்விடக்கூடாது?

இப்போதுதான் பதினாலாவது பஸ் வருகிறது! என்ன ஆச்சரியம்! பிடித்துக்கொள்ள கம்பி கிடைத்துவிட்டது! பொட்டணம் நசுங்குகிறது! கால் விரல் தவளை.

இடது கையில் மார்போடு அணைத்திருக்கிற பரிசுப் பொட்டணம் ஒரு ஆறு மாதக் குழந்தையாக இருந்தால்?

"கால் விரல்! விரல்! விரல் சார்!"

எங்கே? எங்கே?

மூன்று மைலுக்கப்பால் பஸ் நின்றது.

திடு திடுவென்று கூட்டம் இறங்குகிறது. இறங்கி மறுபடியும் ஏறியபோது, உள்ளே இரண்டடி நகர்ந்து வேறு கம்பி பிடித்துக்கொள்ளக் கிடைக்கிறது. பரிசுப் பொட்டலம்

வலது கைக்கு மாறுகிறது. ஆனால் தலையைக் குனிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வேறு ஏதோ கை கம்பியை சற்று மேலே பிடித்துக்கொண்டிருக்கிறது. அதன் கமுக்கட்டு அடிக்கடி முகத்தின் பக்கம், மூக்கின் பக்கம் வருகிறது. இது என்ன மணம்? கற்றாழை மணமா! எதைச் சாப்பிட்டால் உடம்பு இத்தகைய வாடை வீசும்? முருங்கைக்காயா? வெங்காயமா? மீனா? அல்லது செத்த எலியா? ஏய்! நீயும் கலியாணம் செய்து கொண்டிருக்கிறாயா? அந்தப் பெண் எதற்காக இந்த உடம்பு வாடையைப் பொறுத்துக் கொண்டிருக்கிறது? எத்தனை காலம்! எப்படி உன் பீஜத்தை வயிற்றில் வாங்கி, சாச்வதத் தன்மையை ஸ்தாபிக்கப் போகிறது? இது தவிட்டு நாற்றமா? இது என்ன ரசாயன அதிசயம்?

பஸ் நிற்கிறதா, போகிறதா? திடீர் என்று மேலே தலையில் ஒரு கொத்து சில்லென்று தண்ணீர் தெளிக்கிறது! சார்! சார்! ஒரு குடை! பஸ் நின்றுதான் அந்தக் குடை ஏறியிருக்கிறது! வெளியே மழை! எப்போது ஆரம்பித்தது?

பஸ்ஸைக் காலி செய்ய வேண்டியிருக்கிறது! பஸ்ஸின் பயணம் முடிந்துவிட்டது!

கடைச் சார்ப்பில் ஒண்டிக்கொண்டு பாதி மழையை ஒரு தோளில் தாங்கி அடுத்த பஸ்ஸுக்கு முக்கைப் பார்த்தால்...

இருபது நிமிஷம் கழித்து ஒரு பஸ்.

மூன்றாவது பஸ்ஸைவிட்டு இறங்கும்போது கடைத் தெரு மாதிரி இருக்கிறது. எல்லாக் கடைகளிலும் மெழுகுவர்த்தி மினுக்குகிறது. மின் சக்தி நின்றுபோய் விட்டதாம்.

மழை ஓய்ந்து விட்டது, போகிற வழியில் மட்டும் கணுக்கால் ஜலம்-குதிகால் உளை-குதிரை முகம் வரையில் சேறு. அதே சேற்றில் நடத்தி அழைத்துப் போனான் யாரோ. அவனுக்குக் கல்யாணம் நடக்கிற தெருவிலேயே வீடாம்.

"ஏன் இவ்வளவு சேறு?"

"இது புதுக்காலனியாச்சே. இந்த வீடுகள் கட்டி ஆறு வருஷம்கூட ஆகவில்லை. இனிமேல்தான் நல்ல ரோடு. பம்பாய் லெட்ரீன், கண்படாத சாக்கடை எல்லாம்

வரப்போகிறது. அதோ பாருங்கள் குழாய்கள் சுரங்கச் சாக்கடைக்கு."

நசுக்கென்று என்னவோ மிதிபடுகிறது.

நடந்தது அரை மணியோ, முக்கால் மணியோ? கால் களைப்பைக் கணக்குப் போட்டால் இரண்டு மணி நடையாக இருக்கலாம்.

"இதுதான் கலியாண வீடு, போங்கள்,"

மாப்பிள்ளை அழைப்பு அவசர அவசரமாக முடிந்து விட்டதாம் - மழைக்குப் பயந்துகொண்டு நனைந்து கொண்டு கூட. பாண்டுக்காரர்கள் கூடப் போய்விட்டார்களாம். எல்லாரும் சாப்பிட்டு, கடைசியில் சமையல்காரரும் ஆட்களும் இருக்கிற மிச்சத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"மாப்பிள்ளை எங்கே?"

"சம்பந்திகள் ஜாகையில் இருக்கிறார். நீங்கள் சாப்பிட்டு விட்டுப் போங்க சார்."

அந்த ஜாகை எங்கிருக்கிறதோ? மாப்பிளையைப் பார்த்துவிட்டு வருவதற்குள் சாப்பாடு தீர்ந்து விடலாம். மாப்பிள்ளைத் தோழன் தலையில் தங்கியிருந்த தூற்றல்களைத் துடைப்பதற்காக, கைக்குட்டையை எடுத்துக் கையைத் தூக்கினபோது, ஏதோ கொடி மாதிரி கட்டியிருந்த கயிற்றில் கைபட்டது.

அவ்வளவுதான், என்னவோ கூட்டமாகப் பறந்து ஒருசுற்றுச் சுற்றி மீண்டும் கயிற்றுக் கொடியில் வந்து ஒட்டிக் கொண்டன. பார்த்தான். ஈ..ஈஈ ஈ...ஈக்கள் பத்து, நூறு ஆயிரம்...பதினாயிரமா...கலியாணத்திற்கு வந்திருக்கிற ஈக்கள்.

கீழே ஈரம். இரண்டே அறை. இங்கேதான் சாப்பிட்டார் களாம். மழையால் ரொம்ப லாச்சாராம்.

"சாருக்கு ஒரு இலை கொண்டா-ஆறுமுகம்!"

இலை போட்டார்கள். வாழை இலை இல்லை. வாழையின் கோவணம்.

உட்கார்ந்தான். சாப்பிட ஆரம்பித்தான். கலியாணச் சாப்பாடு சாப்பாடுதான். தினம் சாப்பிடுகிற வீட்டுச் சாப்பாடில்லை. கறி, சாம்பார், ரசம்-எல்லாம் அப்போது அறைத்து விட்ட மசாலை மணம்.

கொடியில் இருந்த ஈக்கள் சாப்பிட்டுவிட்டாற் போலிருக்கிறது. பண்டங்களை இலையில் வைக்க வைக்க புது ஈக்கள் வந்து மொய்க்கின்றன. பரிசுப் பொட்டணத்தை மடியில் வைத்துக்கொண்டு, இடது கையால் ஈக்களை ஓட்டிக் கொண்டே சாப்பிட்டான்.

எழுந்ததும் ஒரு தொண்டர் வந்து மாப்பிள்ளைத் தோழனை மாப்பிள்ளை இறங்கியிருக்கிற ஜாகைக்கு ஒரு சந்து வழியாக அழைத்துச் சென்றார். ஒரு பெட்ரோமாக்ஸ் புஸ் என்று பாதி மஞ்சளும், பாதி வெள்ளையுமாக ஒளிவிட்டு மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது.

"மாப்பிள்ளைத் தோழன் வர நேரத்தை பார்த்தியாம்மா?"

மாப்பிள்ளையின் குரல்தான்.

"பார்லிமெண்ட் கொஸ்ச்சின், பாஸ் மகாபாவி" என்று என்னென்னமோ சொன்னான்.

"அதுக்குத்தான் லீவு போட்டு, எங்க வீட்டுக்கு வந்துடு. சேர்ந்து வந்துடலாம்னேன். ரொம்ப இது மாதிரி.."

"எது மாதிரி?"

"ப்பெ...அதுசரி, அம்மா! கொண்டு வச்ச சமையல் பாக்கியிருக்கா?"

மாப்பிள்ளை அழைப்பு-நிச்சயதார்த்தம் எல்லாம் ஆகி விட்டதாம். பெண்ணைப் பார்க்கவில்லை என்று குறை மாப்பிள்ளைத் தோழனுக்கு. மாப்பிள்ளையின் கண்மை, கோடிவேட்டி, தலையில் தைலம், லேசாகச் சட்டையில் எழுந்த 'செண்ட்டு'-எல்லாம் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் தெரிந்தன.

வெளியே தாழ்வாரத்தில் படுக்கை. உள்ளே இரண்டு அறைகள். அங்கு பெட்டிகளும் பெண்களும் கிழவிகளும் மாப்பிள்ளையும் தூங்கினார்கள். வெளியே தாழ்வாரத்தில்

பெரிய ஆண்கள் ஒரு அழுக்குப் பிச்சாணாவைப் போட்டுத் தூங்குகிறார்கள். இரவின் மாலை வெளிச்சத்தில் காலிமனைகள், தெருவில் எல்லாம் மழைநீர்க் குட்டை. குட்டைகளுக்குள் மப்பு நீங்கிய வெள்ளை மேகங்கள். எங்கும் தவளைகள் கல்யாண இரைச்சலாகக் கத்துகின்றன. மாப்பிள்ளைத் தோழன் வேட்டிக்குள் புகுந்த ஈக்களை கால் மாற்றி மாற்றித் தேய்த்துக் கொண்டே தூங்கினான்.

"சார், காபி" என்றது ஒரு குரல்.

கிழக்கு வெளுத்திருந்தது.

"சுடச்சுட வெந்நீர் இருக்கு. காபியைச் சாப்பிடுங்கோ. போய்க் குளிச்சிடலாம்"-என்று யாரோ வந்து உபசாரம் பண்ணினார்கள்.

காபியை ஊற்றிக்கொண்டு அவர் பின்னால் ஓடினான்.

"இதோ லட்ரீன்-பாத்ரூம். பல்பொடி, சோப்பெல்லாம் பாத்ரூமில் இருக்கிறது. சுருக்கக் குளியுங்கள். மாப்பிள்ளை உத்தரவு, உங்களை முதலில் கவனிக்கச் சொல்லி."

"சரி-இதோ வந்துடறேன்" என்றான் அவன்.

கக்கூஸுக்கு அப்பால் கலர்படுதா கட்டியிருந்தது. புகை வந்தது. குரல் கேட்டது. எட்டிப் பார்த்தான். சமையல் செய்து கொண்டிருந்தார்கள். திறந்த வெளியில். கலர் படுதாவில் ஒரு பதினாயிரம் ஈக்கள் எழுந்து எழுந்து இடம் மாறி புது டிசைன்கள் போட்டுக் கொண்டிருந்தன. திடீர் திடீர் என்று பறந்து பறந்து பாத்ரூமுக்கும் லெட்ரினுக்கும் சமையலிடத்திற்குமாகத் தத்தித் தத்தி விளையாடிக் கொண்டிருந்தன.

சோப்புப் போட்டுக் குளித்த பிறகும் ஈக்கள் அவனை விடவில்லை. அவன் கணுக்கால், ஆடுசதை, காதெல்லாம் உட்கார்ந்து ஆகாரம் தேடின.

தலை துவட்டுவதற்குள் அதே ஆசாமி வந்து கூப்பிடுகிறார்.

"சார், சார், வாருங்கோ. மாப்பிள்ளை கூப்பிடுகிறார் பரதேசக் கோலம் புறப்படப்போறது. சட்டுனு வாங்கோ."

"எட்டு மணிக்குத்தானே சார் முகூர்த்தம்?"

"மப்பாயிருக்கு சார், சீக்கிரம் ஆரமிச்சாகணும்?"

அவசர அவசரமாக ஓடினான் மாப்பிள்ளைத் தோழன். சட்டை மாற்றி வேட்டி மாற்றினான்-அதாவது ராத்திரி படுத்திருந்த சட்டை வேட்டியைப் போட்டுக்கொண்டான். மாப்பிள்ளைக்கு பெண்கள் அலங்காரம் செய்து விட்டார்கள். கண்ணுக்கு மை, பஞ்சகச்சம். கையில் விசிறி, புத்தகம், காலில் செருப்பு....

மாப்பிள்ளைத் தோழன் வெயில் படாமல் குடையை வாங்கி மாப்பிள்ளையின் முகத்தை மறைத்தான்.

வாத்தியம் இல்லை.

வாத்தியத்திற்குச் சொல்லவில்லையாம். பெண் வீட்டுக் காரர்கள் அத்தனை ஏழைகளாம். நேற்று இரவு மாப்பிள்ளை அழைப்பு பாண்டுக்கே இரு நூறு ரூபாய் கொடுத்தாகி விட்டதாம்.

மாப்பிள்ளையும் தோழனும் இன்னும் இருபது முப்பது ஆண்களும் பெண்களும் நடந்தார்கள்.

"வாத்தியம் இல்லாம மூளியாயிருக்கே" என்றாள் மாப்பிள்ளையின் தாயார். அவள் குரல் சூடாகப் பொருமிற்று. நடுங்கிற்று.

"ஏழை ஏழைன்னு இப்படியா சுழிக்கணும்"

மாப்பிள்ளைத் தோழனுக்குப் பாடவேண்டும் போலிருந்தது. "வாத்தியம்தான் இல்லை. நீங்கள்ளாம் உரக்க ஒரு பாட்டாவது பாடுங்களேன்" என்று மன்றாடினான்.

ம்ஹும்.

பெண் வீட்டுவாசலில் நின்றார்கள். பெண்ணின் தகப்பனார் இரண்டு தேங்காய்களை மாப்பிள்ளையின் கையில் கொடுத்து "காசிக்குப் போக வேண்டாம். என் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக இருங்கள். சர்வாலங்கார பூஷிதையும் அழகியுமான என் பெண்ணைத் தருகிறேன்." என்றார்.

பிறகு பெண் வந்தது.

மாப்பிள்ளைத் தோழன் கண்ணை அகட்டிப் பார்த்தான். சந்தன வர்ணத்தில் மேனியும் கண் வீச்சுமாக-பிழைத்தோம் என்று பெருமூச்சுவிடுவதற்குள்-

வேறு ஏதோ ஒன்று மாப்பிள்ளையின் முன்வந்து நிற்கிறது.

அதன் கையில் மாலையைக் கொடுத்தார்கள்.

மாப்பிள்ளைத் தோழன் விக்கித்துப் போய்ப் பார்த்தான்.

இதுவா பெண்? இதுவா என் சிநேகிதனுக்குப் பெண்டாட்டி!

அட்டைக் கறுப்பு. வத்தல் உடம்பு. கறுப்பில் ஒரு சாம்பல். ஆறு மாசம் பட்டினி கிடந்த ஒல்லி-தோலிலாவது மழு மழுப்பு இருக்க வேண்டுமே-சருகுக் காய்ச்சல்.

சிவப்பு வேண்டாம். ஒரு நல்ல மூக்கு, ஒரு நல்ல முழி ஏன் இல்லை?

மாப்பிள்ளைத் தோழன் மேட்டுக்குடி மனத்தை வழித்தெறிந்தான். கறுப்பாக இருப்பவர்களும் பெண்கள்தான்.

நீக்ரோக்கள் கறுப்பு. பல பழங்குடிகள் கறுப்பு. இன்னும் எத்தனையோ கறுப்புகள்.

ஆனால் மூக்கு ஏன் இல்லை? முழி ஏன் இல்லை?

இது என்ன கலியாணம்? காதல் கலியாணம் இல்லை. ஏற்பாடான கலியாணம். அப்படியானால் இந்தப் பெண்ணைப் பார்த்து எப்படி சரி என்று சொன்னான் இவன்?

தாலி கட்டினார்கள். பெண்ணைப் பாடச் சொன்னார்கள். ஓமம் வளர்த்தார்கள். மழை எங்கிருந்தோ வானத்தைப் பொத்துக்கொண்டு வந்தது.

"அரிசி தின்னியா?" என்று கேலி செய்யக்கூட வாய் வரவில்லை.

அவசர அவசரமாக அக்னியை-உள்ளே கொண்டு போனார்கள். வீட்டுக்குள் சாக்கடை ததும்பி பாதங்கள் நனைய குளம் கட்டிற்று. பேய் மழை.

திறந்த வெளியில் சமைத்துக் கொண்டிருந்தவர்கள் சமையல் பாத்திரங்களை அண்டா அண்டாவாகப் பிடித்து இருக்கிற இரண்டு அறைகளில் ஒரு அறையில் கொண்டுவந்து நிரப்பினார்கள்.

இதற்கு நடுவில் ஆபீசுக்குப் போகிறவர்கள் சாப்பாட்டுக்கு வந்தார்கள்.

“மழை நிக்கட்டும்.”

மழை நிற்க ஒரு மணி ஆயிற்று.

கால் மணி கழித்துத்தான் வீட்டுக்குள்ளே இருக்கிற சாக்கடைகள் கண்ணுக்குத் தெரிந்தன.

சாப்பாடு போட்டார்கள். ஈக்கள் ஆயிரமாயிரமாகச் சாப்பிட வந்தன.

மாப்பிள்ளைத் தோழன் மாப்பிள்ளையைப் பார்த்தான். நினைத்தான். அழுகையை மறைத்துக் கொண்டான். என் சிநேகிதனுக்கா இப்படிக் கலியாணம்?

“சார், இன்னும் கொஞ்சம் பாயசம்” என்று அதட்டினார் சமையற்காரர் அவனைப் பார்த்து. சமையற்காரன் என்றால் இப்படி ஒரு அழுக்குத் துண்டைத்தான் உடுக்க வேண்டுமா? அதுவும் முழங்காலுக்கு மேலும் அடித்தொடையும் கோவணமும் தெரியும்படியாகத்தான் பரிமாற வேண்டுமா?

என் நண்பன் கலியாணத்திற்கு இத்தனை ஈக்கள் வரவேண்டுமா?

இந்தப் பையன் ஏன் யாரையும் கூப்பிடாமல், புது வேட்டி கட்டி அவளுக்குப் புதுப்புடவை கட்டி ஏன் நேராகப் படுக்கை உள்ளுக்குப் போகவில்லை? ஏன் இத்தனை பேரைக் கூப்பிட்டு இந்த மழையில் இந்தச் சங்கடத்தில் இம்சைப்படுத்தினான்? ஏன் இப்படி ஒரு தட்டு பொட்டுகூட இல்லாமல் தாலி கட்டினான்? ஏன் இப்படி ஈச் சாப்பாடு போடுகிறான்?

“சார், பட்சணம்!”

“சார் ஊறுகாய்!”

சமையற்காரர் மாப்பிள்ளைத் தோழனைப் பார்த்து உபசாரம் செய்கிறார்.

சாப்பாடு ஆனதும் மாப்பிள்ளை, பெண்ணைக் கையைப் பிடித்துக்கொண்டு ஜாகைக்கு அழைத்து வந்தான். பெண்ணைக் கொண்டுவிட பெற்றவர்களும் சுற்றமும் வந்தார்கள். வாத்தியம் இல்லை. இரைச்சல் இல்லை.

உள்ளே வந்து உட்கார்ந்ததும் அதே நிசப்தம்.

ஒரு பையன் ஓரத்தில் கண், கன்னம் எல்லாம் சவுங்கிப் படுத்திருந்தான். வயிற்றுப்போக்காம்! வாந்தியாம்! ஈக்களின் கொடையோ என்னவோ!

"யாராவது பாடுங்கோளேன்" என்கிறாள் மாப்பிள்ளையின் தாயார்.

பெண்கள் நாணிக் கோணுகிறார்கள்.

"வாத்யம்தான் இல்லை. ஒரு பாட்டாவது பாடுங்களேன்" என்கிறாள் அந்த அம்மாள். குரலில் மீண்டும் பொருமல்.

ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், ஐந்து நிமிஷம். யாரோ பாடப்போகிறார்கள் என்று பகல் இறுக்கமாகக் காத்துக் கொண்டிருந்தது. மழை பெய்து ஓய்ந்த புழுக்கமும் ஊமை வெயிலும் பாட்டுக்காகக் காத்துக் கொண்டிருந்தன

மாப்பிள்ளைத் தோழனாக அத்தனை பெண்களையும் பார்த்து, "ஆம்பளையை உறிஞ்சிக் குடிக்கிற ஜன்மங்களா, வாயைத் திறந்து ஏதாவது இழுங்களேன்" என்று கத்த வேண்டும் போலிருந்தது. அவன் உடம்பு படபடத்தது கண் ஜிவு ஜிவு என்றது.

"சனியன்கள்" என்று முணுமுணுத்தான். மனதிற்குள் முணுமுணுத்ததாக எண்ணம். ஆனால் கதவோரமாக அவனுக்குப் பக்கத்தில் நின்ற சமையற்காரன் அவனைத் திரும்பிப் பார்த்தான். அப்போது தான் வாய்விட்டு முணுமுணுத்துவிட்டதாகத் தோன்றிற்று.

"பாடமாட்டேன்" என்றான் சமையற்காரன்.

"நீர்தான் பாடுமேங்காணும். அவர்களுக்கெல்லாம் வாயடைச்சுப் போச்சு" என்றாள் மாப்பிள்ளையின் தாயார். அவர் குரலில் சூடு.

"இதோ" என்றான் சமையற்காரன்.

"வாழி நீ மருகா,

வாழி எம் மருகீ"-

குரல் பிய்த்துக்கொண்டு கிளம்பிற்று. அது என்ன பாட்டோ தெரியவில்லை. யார் பாடின பாட்டோ-? சமையற்காரன் குரல் வரவரத் தடித்துக் கனத்துக் கொண்டேயிருந்தது. குரலில் சூடு ஏற ஏறக் கதவில் சாய்ந்து நின்றவன், தனித்து நின்றான். கையை ஆட்ட, பக்கத்தில் நின்றவர்களை ஒதுக்கிவிட்டான்.

பாட்டுக் கச்சேரி பாங்கு இல்லை. ஆனால் தாளமும் சுருதியும் புரிந்துகொண்ட பாட்டாகத்தான் இருந்தது. ஏழெட்டு சரணம் பாடினான். பாட்டு முடிந்தது. அதே கையோடு ஒரு மங்களமும் பாடினான். அந்தப் பாட்டு முடிந்ததும், உரக்கப் பேசினான்.

"எல்லாரும் சந்தோஷமாயிருக்கணும். எல்லாரும் திருப்தியாயிருக்கணும். எத்தனையோ கிடைக்கும். கிடைக்காம இருக்கும். எத்தனையோ வரும். எத்தனையோ போகும். அதுக்காக சந்தோஷமா இருக்கறதை விடப்படாது. முயற்சி பண்ணி சந்தோஷமா இருக்கக் கத்துக்கணும். நூறு இல்லாம இருக்கலாம். பத்து இல்லாம இருக்கலாம். காசு இருக்கலாம். இல்லாம இருக்கலாம். வயித்துக்கு இருக்கலாம். இல்லாம இருக்கலாம். வெயில் கொளுத்தலாம். மழை கொட்டலாம். எதாயிருந்தாலும், எல்லாரும் முயற்சி பண்ணி சந்தோஷமா இருக்கப் பாடுபடணும். சந்தோஷமா இருக்க முயற்சி பண்ணணும். சந்தோஷமாகத்தான் இருப்பேன்னு பிடிவாதமா இருக்கணும். பிடிவாதமா சிரிக்கணும். அப்படி ஒரு பிடிவாதம் இருந்தா நீங்க அந்த அம்மா சொன்ன உடனே விடாம பாடியிருப்பேள். சந்தோஷமா இருக்கக் கத்துக்கணும். கங்கணம் கட்டிக்கணும். சிரிச்சுண்டே யிருப்பேன்னு பிடிவாதம் பண்ணணும். சிரிக்கிறதிலே

சண்டித்தனம் பண்ணணும். அதாவது சிரிக்கிறதை நிறுத்த மாட்டேன்னு சண்டித்தனம் பண்ணணும். பல்லு வலிக்கச் சிரிக்கணும். மனசு கொள்ளாம சந்தோஷமா இருக்கணும். எங்கே சிரிங்கோ பார்ப்போம். பெரியவாளுக்குக் கூச்சமாயிருக்கும். நீங்கள்ளாம் சிரிங்கோ பார்ப்போம். குழந்தைகளா! நீங்க சிரிங்கோ, நான் சிரிக்கிறேன். என்னோடு சேர்ந்து சிரிங்கோ பார்ப்போம்....."

சமையற்காரன் சிரித்தான். குழந்தைகள் ஒன்று இரண்டு-என்று எல்லாம் சிரித்தன. மாப்பிள்ளைத் தோழன் அழுது கொண்டே சிரிக்கத் தொடங்கினான்.

# மேரியின் ஆட்டுக்குட்டி

"மேரியிடம் ஒரு சின்ன ஆட்டுக்குட்டி இருந்தது. அதன் ரோமம் வெள்ளை வெளேரென்று பனி மாதிரி இருக்கும். மேரி எங்கு போனாலும் அது கூடவே போகும். ஒரு நாள் அவளோடு பள்ளிக்கூடத்திற்குப் போயிற்று அது. ரூல்ஸுக்கு விரோதம். பள்ளிக்கூடத்தில் ஒரு ஆட்டுக் குட்டியைப் பார்த்ததும் குழந்தைகள் உடனே சிரித்து விளையாடத் தொடங்கி விட்டதுகள்..,"

இங்கிலீஷில் நெட்டுருப் போட்டுக் கொண்டிருந்த சாவித்திரி, நிறுத்தி நிறுத்தி புத்தகத்தைப் பிரித்துப் பார்ப்பாள். வர்ணப் படத்தில் ஒரு சின்னப் பள்ளிக்கூடம். முன்புறம் பூ பூத்த மரங்கள். மேரிக்குப் பக்கத்தில் ஆட்டுக் குட்டி துள்ளிக்கொண்டு இருக்கிறது. அதைச் சுற்றிப் பத்துப் பதினைந்து குழந்தைகள். எல்லாம் வெள்ளைக்காரக் குழந்தைகள். அதுவும் வெள்ளைக்கார ஆட்டுக் குட்டி போல் தான் இருக்கிறது. சின்ன மூஞ்சி, கொழுத்த உடல்; மேகம், பஞ்சுகளை வைத்து மூடினாற்போல் புஸு புஸுவென்று ரோமம்.

புத்தகம் அரதப்பழசு. யாரோ விடுதிக்குத் தந்த நன்கொடை. பக்கத்திற்குப் பக்கம் பென்சில் கிறுக்கல், மைச்சுட்டி-இல்லாவிட்டால் அழுக்கு விரல் பதிவுகள். ஆனால் இந்தப் படம் கொஞ்சம் தெளிவாக இருந்தது. சாவித்திரி இங்கிலீஷ் புத்தகத்தைத் திறந்தால் இதைத் தான் பார்த்துக் கொண்டிருப்பாள். குழந்தைகளோடு குழந்தையாக ஆட்டுக்குட்டியோடு குட்டியாக மரத்தோடு மரமாக, பூவோடு பூவாக, மரத்திலிருந்து பார்க்கும் குருவியோடு குருவியாக ஆகிவிடுகிறாள்.

நினைத்து நினைத்து விழித்துக் கொள்வாள். மீண்டும் முதல் வரியிலிருந்து மனப்பாடம் ஒரு தடவை முழுவதும் படிப்பாள்.

"பள்ளிக்கூடத்திற்குள் ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும் ஆசிரியர் அதை வெளியே ஓட்டிவிட்டார். ஆனால் அது வாசலில் மேரி வரும்வரையில் காத்துக்கொண்டிருந்தது. ஏன் மேரியிடம் அதுக்கு அத்தனை ஆசை?" என்று குழந்தைகள் கேட்டன. "ஏன்னா? மேரி அது மேலே அத்தனை ஆசை வச்சிருக்கா. அதுனாலேதான்" என்றாராம் வாத்தியார்.

மீண்டும் வரி மறைந்தது, படம் மறைந்தது. ராஜா மணியும் அவளோடு பள்ளிக்கூடத்திற்குள் வருகிறான். கைக்குழந்தை வருவது ரூல்ஸுக்கு விரோதம், ஆனால் பள்ளிக்கூடத்தில் குழந்தை தவழ்ந்தும் தத்தியும் வருகிறது. உடனே குழந்தைகள் சுற்றி வளைத்துக் கொண்டு சிரித்தன. ஆசிரியர் ராஜாமணியை வெளியே ஓட்டுகிறார். ராஜாமணி 'கிஹிஹோ' என்று சிரிக்கிறது. வெளியே கொண்டுவிட்டதும் தவழ்ந்து சாலை நடுவே போகிறது. 'ஐயோ எத்தனை கார்! ஐயோ!' என்று கத்திக்கொண்டு சாவித்திரி வகுப்பிலிருந்து வெளியே ஓடி, சாலை நடுவிலிருந்து குழந்தையை வாரித் தூக்கிக் கொண்டு ஓடி வருகிறாள்.

ஒரு தடவை வேர்த்துவிட்டது சாவித்திரிக்கு. பயமாக இருந்தது. குழந்தை இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கும்? விளையாடிக் கொண்டிருக்கும். குழந்தை வேறு என்ன செய்யும்! ஏட்ரின் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருப்பாள்.

நிசப்தமாகத்தான் இருந்தது ஹாஸ்டல். சமையல் கட்டில் தாம்பாளம் அலம்பி வைக்கும் சத்தம். "பொன்னுசாமீ" என்று ஹாஸ்டல் வார்டன் காவல்காரனைக் கீச்சுக் குரலில் கூப்பிடுகிறாள். சாயங்காலம் தூறின ஒருதூறலுக்காக தோட்டத்தின் மூலைக் குப்பைப் பள்ளத்திலிருந்து இரண்டு மூன்று தவளைகள் சவுலாகக் கொர கொரத்தன.

'குழந்தை சற்றுக் கழித்துப் பால் சாப்பிடும். பிறகு வாயில் விரல் போட்டுத் தூங்கும். தூக்கத்தில் ஒரு புன்சிரிப்பு வரும்...அவ்வளவு வராது...சின்னக் குழந்தை இல்லை. ஒன்பது மாதக் குழந்தை அப்படித் தூக்கத்தில் சிரித்து நான் பார்த்ததில்லை.'

"ஹப்பாடா!" சாவித்திரி சட்டென்று விழித்துக் கொண்டாள். அறையின் ஓரமாக, தேசப்படங்களுக்கும் மெழுகு வர்ணக் குச்சிகளுக்கும் நடுவில் உட்கார்ந்திருந்த அன்னம்மா முதுகை நிமிர்த்திக் கையிரண்டையும் சேர்த்து மேலே தூக்கி விறைத்து சோம்பல் முறித்துக் கொண்டிருந்தாள். அன்னம்மா இரட்டை நாடி. வயிறும் தொடையுமாகப் பொத பொதவென்ற உடம்பு. "ஒரு வழியா முடிச்சாச்சு" என்று பொட்டென்று கைகளைக் கீழே போட்டாள் அவள். இனிமேல் உலகத்தில் கவலையே கிடையாது என்பது போலிருந்தன அவளது பெருமூச்சும் பல் தெரிகிற புன்சிரிப்பும். சாது மூஞ்சி அது. ஆனால் கஷ்டப்பட்ட மூஞ்சி. சிரிப்பில் இரண்டும் தெரியும்.

காமு அத்தை இப்படித்தான் மூட்டை கட்டினாற் போல் பொதபொத வென்றிருப்பாள். 'அடி பாவி' என்று வாயை வீங்கிப்போன யானைக்கையால் பொத்திக் கொள்கிறாள் அவள். சாவித்திரிக்கு இப்பொழுது அத்தை, அம்மா, அண்ணா யாரை நினைத்தாலும் ஒரே ஒரு தோற்றம்தான் மனதில் வருகிறது. 'அடி பாவி' என்று அத்தை திகில் விழுந்த கண்களுடன் வாயைப் பொத்திக் கொள்கிறது, "அம்மா! அம்மா!" என்று அம்மா ஓங்கி ஓங்கித் தன் வயிற்றில் அடித்துக் கொள்கிறது. "கத்தாதேடி கத்தாதே" என்று மெய்மறந்து அம்மாவை 'டீ' போட்டு அதட்டி, அண்ணா அவள் கையைப் பிடித்துத் தடுக்கிறது, பிறகு அதே அண்ணா நடுவாசலில் நின்று "உருப்பட மாட்டேள்டா பாவிகளா! உங்களுக்கும் நாளைக்கே வந்துவிடப் போறதடா" என்று பேரைச் சொல்லாமல் வீட்டைச் சொல்லாமல் குமுறக் கத்தினது...அந்தப் படங்கள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. அம்மா சிரிப்பதில்லையா? பேசுகிறதில்லையா? அண்ணா சிரிக்கிறதில்லையா? அரட்டை அடிக்கிறதில்லையா? ஈரத்துண்டுடன் ஆற்றில் குளித்துவிட்டு வந்து "சாவித்ரி கொஞ்சம் வேட்டி கொண்டாடி!" என்று கேட்கிற தில்லையா? ஆனால் அந்தப் படங்கள் எல்லாம் கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் அடித்துப் போகிறார் போல் போய்விட்டன. இப்பொழுது அவர்களை நினைத்தால் இந்த வயிற்றடி, தெருக்கூச்சல்தான்.

அண்ணா தெருவில் நின்று ஒரு மணி நேரம் கூப்பாடு போட்டான். அடிவயிற்றிலிருந்து குமைந்து குமுறச் சாபங்க ளிட்டான். "பணத் திமிரா! உங்களைப் பூண்டோட பொணமா அடிக்கிறேனா இல்லையா பாருங்கடா! மானமிருந்தா வெளியிலே வாங்களேண்டா!"

வாசல் வாசலாகக் குழந்தையும் குஞ்சும் பெண்ணும் ஆணுமாக வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். ஊரில்லாத, பேரில்லாத சத்தம். ஆனால் யாரைச் சொல்லுகிறான் என்று ஊருக்கெல்லாம் தெரியும். கடைசியில் ராது மாமா அவனைக் கையைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வாசல் கதவைத் தாழிட்டு உள்ளே அழைத்து வந்தார். "ஏண்டா, நடந்தது நடந்தாச்சு, நடுத் தெருவிலே நின்னு கத்தினா சேதி ஊர் ஊரான்னா பறக்கும்? இப்ப கத்தி யாருக்கு என்ன லாபம்?" என்று அடிக் குரலில் அவனை அதட்டுகிறார்.

"இனிமே என்ன மாமா? தலைக்கு மேலே போயாச்சு. சாண் என்ன, முழம் என்ன? இந்தக் கிராதகன் இப்படிப் பண்ணுவன்னு நினைக்கலே மாமா-கைமேலே அடிச்சுச் சத்தியம் பண்ணினானாம் மாமா அந்தப் பய! அந்தக் கை அழுகிச் சொட்ட" என்று சொல்லும்போது அண்ணாவுக்குத் தொண்டை உடைந்து அழுகையாகிவிட்டது. காமிரா அறையில் குருவி மாதிரி விழித்து விழித்து நடுங்கிக் கொண்டிருந்த சாவித்திரியும் தாங்க முடியாமல் நீண்ட கேவலோடு அடக்கி அடக்கி அழுதாள். அந்த நொடியே அந்த உள்ளுக்குள்ளேயே தூக்குமாட்டிக் கொண்டு தொங்கியிருக்க வேண்டும். "அந்தக் கையை நான் முறிக்கத்தான் போறேன் மாமா" என்று மீண்டும் அண்ணாவின் குரல் கேட்டது.

செல்லப்பா அவள் கைமீது அடித்துத்தான் சொன்னான். இந்தக் காமிரா அறையில் தான். பாத்திரம் வைக்கற இதே பெட்டி மீது அவளை உட்கார்த்தி வைத்துத்தான். கோயில் கர்ப்பக்கிரகத்திற்கு முன்னுள்ள நடையில் பூஜைப் பாத்திரங்களை வைத்திருப்பார்களே அந்த மாதிரி கனமான பெட்டி அது. ஒரு முழத்திற்கு இரும்புத் தாழ்ப்பாள். அதன் மேல் அவளை உட்கார்த்தி வைத்து, "சாவித்ரி. நீ பயப்படாதே, இந்த செல்லப்பா முன்வச்ச காலைப் பின்வைக்க மாட்டான்!" என்று சற்று

நகர்ந்து ஒருக்களித்த கதவு வழியாக யாராவது வந்து விடுகிறார்களோ என்று கூடத்தைக் கூடத்தைப் பார்த்தான் செல்லப்பா.

"மூணு தடவை வெளியே உட்கார்ராப்பல உட்கார்ந்து அம்மாவை ஏமாத்தியாச்சு. எத்தனை நாள் இது பலிக்கும்?" என்று கழுத்து நாளம் பக் பக்கென்று அடிக்க, மீண்டும் அடித்தொண்டையில் அதை வெளியிட்டாள் சாவித்திரி.

அவன் முகம் சற்று வெளிறிற்று. முகம் சுளித்தது. "கைமேலே அடிச்சுச் சொல்றேன். கவலைப்படாதே. நான் உன்னைக் காப்பாத்தறேன். உன்னைத்தான் கலியாணம் பண்ணிக்கப் போறேன்...நான் வரட்டுமா?"

சாவித்திரி பதில் சொல்லாமல் கோத்த கையைப் பற்றிக் கொண்டே நின்றாள்.

"சடையன் வரேன்னான், ஆடுதுறையிலிருந்து லாரி கொண்டுண்டு, நெல்லு பிடிக்க. நீ எங்கியும் போயிடா தேன்னார். அப்பா தேடுவர். நான் வரட்டுமா?" என்று விலக்கிக் கொள்வதிலேயே குறியாக அவசரப்பட்டது அந்தக் கை.

அப்போது அவள் பதில் சொல்லவில்லை.

"சொல்லேன், போய்ட்டு வா'ன்னு. அப்புறம் பார்த்தியா? நான் சத்யம் பண்ணிக் கொடுத்திருக்கேன். பயப்படாதே. பயப்படாதே...போ யாரும் வரலியே பாரு" என்று அவள் முதுகைப் பிடித்து லேசாகத் தள்ளினான் செல்லப்பா.

அப்போது அண்ணா ஊரில் இல்லை. அம்மா கொல்லைத் திண்ணையில் விலகி வைக்கோல் மீது சாக்கைப் போட்டுக் கொண்டு பசுங்கன்றோடு கன்றாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். உச்சி வேளை. பசுங்கன்று திண்ணைக் கோடியில் அரைத் தூக்கமாக அசை போட்டுக் கொண்டிருந்தது. பசு மேயப் போயிருந்த சமயம். சாவித்திரிக்கு கன்று, வெயில், அம்மா, நிழல் எல்லாம் தன்னை விட்டு எங்கோ விலகிப் போகிறாற் போலிருந்தது. மீண்டும் உள்ளே வந்தாள். காமிரா அறைக்குள் நுழைந்தாள். அங்கு எப்போதும்

அஸ்தமித்திருக்கும். சுற்றிலும் வெள்ளை பூசாத மண் சுவர், அந்த அந்தி மங்கலை இன்னும் இருளச் செய்திருக்கும். இப்போது எங்கிருந்தோ ஓட்டுக் கூரையில் சின்னக் கண்ணாடி வழியாக வெயில் மண்சுவர் மீது இறங்கிச் சாய்ந்திருந்தது. நிமிர்ந்து பார்த்த போது வெள்ளித் தூசி பறந்தது. கண்ணாடியின் கீழே சிலந்தி வலை அறையில் லேசாக ஒட்டடை நெடி. அண்டாவில் பழுக்கிற வாழைப் பழத்தின் நெடி வேறு. பெட்டியைப் பார்த்தாள். செல்லப்பா கையடித்துச் சத்தியம் செய்திருக்கிறான். விடமாட்டான். வாழை இலை நடுத்தண்டு மாதிரி நீண்டு எலும்பு தெரியாமல் பூசினாற் போலிருந்த அவன் உடல் மினு மினுவென்று...

அவள் கைகால் கூட மினுமினுக்கத் தொடங்கி இருக்கிறது. பயமுறுத்துகிறது. சட்டை உரித்த பாம்பு மாதிரி, கரப்பு அவிழ்த்துப் போட்ட தோலுடல் போல ஒரு வெளிர் வேறு. சாவித்திரிக்கு வயிற்றை அடிக்கடி லேசாகக் குமட்டிற்று. அடக்கிக்கொண்டு, கொல்லை முழுவதும் பூவரசு, புளி, பவழமல்லி, கருவேப்பிலை மரங்களை எல்லாம் கடந்து நடந்து குப்பைக் குழிக்கு அருகில்போய் ஒக்காளித்துவிட்டு வருவாள். சமையல் கட்டுக்கும் குப்பைக் குழிக்கும் காத தூரம் இல்லை. ஆனால் காது கேட்கிற தூரமுமில்லை.

ஆனால் குற்றவாளிக்கு அவன் முழிக்கிற முழியே பகை. இப்பொழுதெல்லாம் வெள்ளிக்கிழமைகளில் அம்மாவை எண்ணெய் தேய்க்க அண்ட விடுவதில்லை. அவள் “கை அழுந்தாதுரீ! நான் ஒரு கை வச்சுடறேனே” என்று அம்மா கெஞ்சினதெல்லாம் பலிக்கவில்லை. அது தான் அம்மாவின் கண்ணை விளக்கிவிட்டதோ என்னவோ!

மேலும் இரண்டு மாசமாயிற்று. மாசா மாசம் கொல்லைத் திண்ணையில் கன்றோடு கன்றாக உட்கார்ந்து பொழுதைப் போக்கினாள் சாவித்திரி. அவள் நடையையும் விழியையும் பார்த்துவிட்டு அம்மா ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்தாள். காரணமில்லாமல் வெய்யத் தொடங்கினாள்.

அன்றிரவு படுத்து நன்றாகத் தூங்கும் போது யாரோ உடலைப் புரட்டுவது போலிருந்தது. விழிப்புக்கொடுத்த

போது அம்மா சட்டென்று அவள் வயிற்றிலிருந்து கையை எடுத்து விட்டுத் தூக்கத்தில் திரும்பிப் படுக்கிறது போல் படுத்தாள்.

அதே மாதிரி மறுநாள், அதற்கும் மறுநாள், அம்மா தன் பாசாங்கைக் கண்டே அச்சப்படுவது போலிருந்தது. இருவரும் பயந்து கொண்டே இருந்தால்? சற்றுக் கழித்து சாவித்திரி எழுந்து படுக்கையில் உட்கார்ந்து தாவணித் தலைப்பைக் கடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"என்னடீ?"

"___"

"வாயைத் திறந்து சொல்லேண்டீ!"

வாயைத் திறந்து அழுகைதான் வந்தது. அழுது, அழுது, அழுது, நிலைமையைக் காட்டவே சாவித்திரிக்கு ஒரு நாழிகை பிடித்தது.

"அடி மகாபாவி?"

அம்மா அதோடு விடவில்லை. எங்கே, எப்பொழுது என்று சரமாரியாகத் தொடுத்தாள். காமிரா உள், சமையலறை, வெந்நீர் உள்...காமிரா உள்.

"எப்படிடீ துணிஞ்சே பே புடிச்சவளே? எனக்கு வயத்தை என்னமோ பண்றதே..."

செல்லப்பா கைமேல் அடித்துக் கொடுத்ததைச் சொன்னாள் சாவித்திரி. "நெசமாவா, நெசமாவா! பண்றதையும் பண்ணிவிட்டு இது வேறயா? அவன் அப்பன் கிராதகனாச்சேடி! கொல்லு கொலைக்கு அஞ்ச மாட்டானே! பஞ்சைகளாப் பார்த்துப் பாழா அடிப்பனே அவன்! அவன் புள்ளையாச்சேடி இவன்!....பாவி!"

எத்தனை பாவி!

செல்லப்பாவின் முகத்தில் பால் வடியும். இப்பொழுதும் தான். அவனுக்குக் கலியாணம் ஆகிற வயசா? இல்லை என்றுதான் தோன்றும். பையன் மாதிரிதான் இருப்பான்! வாழை நரம்புக் கை கால். பேப்பர் போல வழவழ உடம்பு பையன்தான். காலேஜில் சேர்ந்து இரண்டு வருஷம்தான்

ஆகிறது. பரீட்சையில் தவறி, செப்டம்பர் பரீட்சைக்குப் படிக்க ஊரோடு வந்தான். இரண்டாம் கட்டில் குடி தண்ணீருக்காக பக்கெட்குழாய் வைத்திருந்த இரண்டாம் கட்டில்-உட்கார்ந்து கொண்டிருப்பான். குடி தண்ணீருக்கு அவள் அங்கேதானே போகவேண்டும். சில சமயம் லேசில் தண்ணீர் கிளம்பாது. ஒரு பக்கெட் தண்ணீரைக் கிணற்றிலிருந்து இழுத்து அதன் வாயில் கொட்டி, துதிக்கை மாதிரி தொங்கின பிடியைத் தூக்கி ஏற்றமரத்தில் ஏறுவது போல் பிடித்து அழுத்த வேண்டும். தேருக்கு உலுக்கு மரம் போடும் பாடு.

"முடியலியா? சோனிப்பிச்சான்!" என்று புத்தகத்தை, பிரித்த பக்கத்தில் குப்பிறத்திவிட்டு வருவான் செல்லப்பா. பிடியைப் பிடித்து அமுக்கி அமுக்கி குடம் நிரம்பின பிறகுதான் நிறுத்துவான்.

"சோனிப்பிச்சான், போறுமா?"

"நீ மாத்திரம்...? மூஞ்சியெல்லாம் செவந்து போச்சு ஒரு குடம் அடிக்கிறதுக்குள்ளே! கையெல்லாம் பச்சை நரம்பு நெளியறது!"

"உன் கை மட்டும்!" என்று அவள் கையின் பச்சை நரம்பைத் தடவினான் அவன். அப்பா! சிலீர்! என்று என்னமோ உள்ளே பாய்ந்ததே அப்போது!

அன்று தொடங்கி, முன் கை புஜம், முதுகு...சாவித்திரிக்கு ஒருமுறை முதுகு சொடுக்கிற்று.

"குளுருதா?" என்றாள் அன்னம்மா. தேசப்படங்களைக் காணவில்லை. கலர் மெழுகு, பென்சில், பேனா ஒன்றையும் காணவில்லை. அவளுக்கு வேலை முடிந்து விட்டது. பரத்தலைக் காணவில்லை..

"என்ன படிச்சிக்கிட்டிருக்கே?" என்று அருகே வந்தாள் அவள்.

"இந்தப் பாட்டை நெட்டுருப் பண்ணறேன். வரவே மாட்டேங்கறது-"

"மேரி ஹாட் அ லிட்டில் லாம்பா? ஒரு தடவை படிச்சாலே வந்திடுமே!"

அன்னம்மாளுக்கு அவள் கதையெல்லாம் தெரியும். "ஒரே கவனமாப் படிச்சா நெட்டுருவாகாமெ என்ன பண்ணும்?"

"பச்சைக் குழந்தை படிக்கிறதெல்லாத்தையும் படிக்கச் சொன்னா? ஏழெட்டு வயசிலே படிக்கிற பாடத்தை இப்ப படிச்சா?"

"உனக்கு என்ன ஆயிடுச்சு அப்படி வயசு? என் வயசிலே பாதி இருக்குமா? எனக்கு முப்பத்திரண்டு வயசு."

"பதினேழு வயசிலேயே கிழவியாயிட்டேனோ என்னமோ? மண்டையிலே ஏற மாட்டேங்கறதே" என்றாள் சாவித்திரி.

"சீச்சி-எல்லாத்தையும் மறந்துட்டுப் படி" என்று அவளை வந்து அணைத்துக் கொண்டாள் அன்னம்மா. இது ஒரு பல்லவி.அவளுக்கு ஞாபகப்படுத்துவதற்காகவே பாடுகிறாற் போன்ற பல்லவி.

சாவித்திரி படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பார்க்கறே?"

"அன்னம்! எனக்கு ராஜாமணியைப் பார்க்கணும் போல இருக்கு. இந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்தா ராஜாமணி மாதிரி இருக்கு.

"ஆமாண்டா கண்ணு! நாளன்னிக்குத்தான் சனிக் கிழமையாச்சே."

"ஆட்டுக்குட்டியை டீச்சர் வெளியிலே ஓட்றதை வாசிக்கிறபோது, எனக்கு ராஜாமணியை வெரட்றாப்பல இருந்தது. அது தவந்துண்டே ரோட் நடுவிலே போயிட்டாப்பல இருந்தது. லாரியும், பஸ்ஸும் வந்துண்டேயிருக்கு.... அப்பா! ஒரு கணம் நெஜம் மாதிரி பதறிப் போயிடுத்து."

அன்னம் அதைக்கேட்டு, அழுகிற புன்சிரிப்புடன் அவள் தலையைக் கோதிவிட்டாள். பெருமூச்சு விட்டாள்.

"ராஜாமணியை எனக்கே பார்க்கணும் போலிருக்கு. யாப்பா, எம்மாம் பெரிய கண்ணு! பலூன் மாதிரி தொப்புள்

புடைச்சிட்டிருக்கும்ல-அதோட அது கையைப் புடிச்சுக்கிட்டு ஏந்துக்கறப்ப சிரிப்பாவரும்! அப்படியே வயறு, மாரு, மூஞ்சி எல்லாத்தையும் புதைச்சி அணைச்சுக்கணும்போல இருக்கும். இந்த இடம் இதுவும்...இதுவும் தான் - உன் சாயல்" என்று சாவித்திரியின் முகவாயையும் கன்ன எலும்பையும் தொட்டுக் காண்பித்தாள் அன்னம். "கண்ணு மூக்கு எல்லாம் அப்பன் மாதிரி தானே இருக்கு?" என்று கேட்டாள்.

சாவித்திரி பதில் சொல்லவில்லை. செல்லப்பாவின் கண்ணும் மூக்கும், உதடும், முற்றாத தோலும், வாழை நரம்பு உடம்பும் தெரிந்தன.

"ம்?" என்றாள் அன்னம்.

தலையை ஆமாம் என்ற அர்த்தத்தில் அசைத்தாள் சாவித்திரி.

"அவனோட அப்பனை இழுத்துகிட்டு வந்து புள்ளையைப் பார்க்கச் சொல்லணும். 'இப்ப சொல்லுடா பாவி, யாருதோ என்னமோ எங்க தலையிலே கட்டப் பாக்கறீங்கன்னு சொன்னியே, இப்ப பாரு. இது உன் மகன் மூக்கா, கண்ணா இல்லியான்னு இப்ப சொல்லுடா'ன்னு அவனைக் கேக்க வாணாம்? காளியாயி கொண்டு போக அந்தக் கூட்டத்தையே!" என்று மூக்கு மலரக் குமுறினாள் அன்னம்.

சாவித்திரிக்கு இப்பொழுது அழுகை வரவில்லை. கிட்டத் தட்ட இது தினசரிக் கதை. அன்னம்மா எப்படியோ அதை யெல்லாம் ஞாபகமூட்டிக் கொஞ்சம் அவளை அழவிடுகிற வழக்கம். தெரிந்து பண்ணுகிறாளோ, தெரியாமல் பண்ணுகிறாளோ! தெரியாமல்தான் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அன்னம் அப்படியொரு பரதை. "ஒண்ணையும் நினைக்கப்படாது. இனிமே படிப்பு ஒண்ணுதான் குறியாயிருக்கணும்" என்றுதான் அவள் பேசுவாள்.

அந்த வார்த்தையைக் கேட்ட பிறகுதான் அம்மா வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டாள். "என்னடா விளையாடறியா? குழந்தை அவன் ராவோ பகலோன்னு

புஸ்தகத்தை வச்சுண்டு உட்கார்ந்திருக்கான். அவன்தான் அகப்பட்டானா, இந்தப் பழியைச் சுமத்தறத்துக்கு? வேற யாராவது சொல்லியிருக்கட்டும். நாக்கை இழுத்து வச்சு அறுத்திருப்பேன். வாரிசு இல்லியேன்னு தலையிலே கட்ட வந்தேளா, அம்மாவும் புள்ளையுமாப் பேசிண்டு?" என்று ஆவேசம் வந்தாற் போல் கத்தினாராம் செல்லப்பாவின் அப்பா.

அண்ணாவுக்குப் பொக்கென்று விளக்கு அணைந்தாற் போலிருந்ததாம். கண் புத்தி எல்லாம் இருண்டுவிட்டது.

"அவனையே கூப்பிட்டுக் கேளுங்கோளேன், மாமா" என்று சற்றுக் கழித்து மெதுவாகச் சொன்னானாம். கோபம் கூட அப்போது வரவில்லை அவனுக்கு. அவ்வளவு செயல் செத்துப்போய் விட்டது மனசு, அவர் சொன்னதைக் கேட்டு.

பிள்ளையைக் கூப்பிட்டு எப்படிக் கேட்கிறது? செல்லப்பாவைத் திருநெல்வேலிக்கு அப்பால், எங்கேயோ கிராமம்-அங்குதான் அவர் தங்கையிருக்கிறாள்-அங்கே அனுப்பிவிட்டார் அவன் அப்பா. முதல் நாள் போய்ச் செய்தியைச் சொன்னான் அண்ணா. அப்போது அவர் சாலையோரமாக ஆட்கள் மாங்கொல்லைக்கு வேலி கட்டுவதைப் பார்த்துக் கொண்டு நின்றாராம். மென்றுமென்று செய்தியை வெளியிட்டான் அண்ணா. சித்தப் பிரமை பிடித்து நின்றாராம் அவர். பிறகு "விசாரிக்கிறேன், கவலைப்படாதே, நாளைக்குப் பேசிக்கலாம்" என்றாராம். அப்போது மத்தியானம் மூன்று மணி இருக்கும். சாயங்காலம் அந்தி மயங்கினவுடன் பிள்ளையைக் கிளப்பிவிட்டார். வீட்டுக் கொல்லைக்கு நேராகச் சாலையில் வண்டியைக் கொண்டு வரச் சொல்லி, அதில் ஏறிப் போய் விட்டானாம் செல்லப்பா. சீர்காழி ரயிலடியில் கொண்டு விட்டு வந்ததாம் வண்டி. மறுநாள் மாலைதான் செய்தி தெரிந்தது. அதுவும் ஊரில் இல்லையென்றுதான். எங்கே போயிருக்கிறான் என்று தெரிய ஒரு வாரமாயிற்று. அதையும் இரண்டு மைல் நடந்து பிராஞ்ச் ஆபீஸ் போஸ்ட் மாஸ்டரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. ஒரே மாதத்திற்குள்

செல்லப்பாவுக்குக் கலியாணமும் ஆகி விட்டது. அத்தை வீட்டுக்குப் போனவன் கலியாணமாகி நாலு மாசம் ஆகிற வரையில் ஊர்ப் பக்கம் தலைகாட்டவில்லை.

அதற்குள்?

அம்மா வயிற்றில் அடித்துக் கொண்டு, அத்தை வாயைப் பொத்திக் கொண்டு, அண்ணா தெருவில் நின்று கூப்பாடு போட்டு...

உடல் பெருத்து, மெருகேறி, மினுமினுத்து, சாம்பல் பூத்து, ஊர் கிசுகிசுத்து, வீடு மூச்சடங்கி, பேச்சடங்கி ஓசைப்படாமல் அழுது...

அவளைப் பட்டணம் கொண்டுவந்து, ஆஸ்பத்திரியில் சேர்த்து, குழந்தையை விடுதியில் விட்டு, அவளைப் பள்ளிக்கூடத்திலும் ஹாஸ்டலிலும் சேர்த்து...

ஹாஸ்டல் சமையல் அறையைப் பூட்டுகிற சத்தம் கேட்கிறது.

"மேரி பாட்டை ராகம் போட்டுப் பாடுவாங்களே. ராகத்தோடு பாடினா, சீக்கிரமா மனப்பாடமாயிடும்" என்று சின்னக் குரலில் பாடத் தொடங்கினாள் அன்னம்மா. சாவித்திரியும் தொடர்ந்து பாடினாள். ஒரு தடவை பாடி முடிப்பதற்குள் வராந்தாவில் செருப்புச் சத்தம் கேட்டது. வார்டன் செருப்பு மாதிரி இருக்கிறது.

"படிக்கிறேளா?" என்று நிலையில் கையை வைத்துக் கொண்டே நின்றாள் வார்டன்.

"இந்தப் பாட்டு நெட்டுருவாக மாட்டேங்குதாம்மா. அதான் பாடிப் பாடி மனப்பாடம் பண்ணுன்னு சொன்னேன்."

வார்டன் பார்த்தாள். "இதானே? நான் சொல்லித்தரேன், வா. நிமிஷம் நெட்டுருவாயிடும்."

புஸ்தகத்தோடு நடந்தாள் வார்டன். அன்னத்தை ஒருமுறை பார்த்துவிட்டு அவளைப் பின்தொடர்ந்தாள் சாவித்திரி. வேறு வழியில்லை.

மாடிப்படி இறங்கி எதிரே இருந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள். அறைக்குள் நுழைந்ததும் "உட்காரும்மா" என்றாள் வார்டன்.

"எப்படி இருக்கே?"

"சௌகர்யமாகத்தான் இருக்கேன்."

"உட்காரேன்."

சாவித்திரி உட்கார்ந்தாள்.

"இங்க இருக்கிறது மனசுக்குப் பிடிச்சிருக் கோல்லியோ?"

"நிம்மதியாயிருக்கு."

"ஊர் ஞாபகம் வரதோன்னு கேட்டேன்."

"இல்லேம்மா. இனிமே ஊர் ஞாபகம் என்னத்துக்கு? ஊர் ஏது? உறவேது? எல்லாம்தான் போயிடுத்தே?"

"நீயாகப் போகச் சொல்லலியே?"

சாவித்திரி பதில் பேசாமல் குனிந்து கொண்டாள்.

"போகச் சொன்னானே, அந்த மட்டி இங்கே வந்திருந்தான் இன்னிக்கு."

"அண்ணாவா?" என்று குழம்பியும் மலைத்தும் கேட்டாள் சாவித்திரி.

"அண்ணாவாவது! ஊர் உறவை எல்லாம் போக அடிச்சவன் என்கிறேன்... என்னமோ பெரிய்ய ஆளாக்கும்னு நினைச்சேன். இத்துனூண்டு பையனா யிருக்கானே."

"யாரும்மா?"

"சத்தியம் பண்ணிக் கொடுத்துவிட்டு ரண்டாம் பேர் தெரியாம ஊரை விட்டு ஓடி, கலியாணம் பண்ணிண்டானே-அவன்தான். அவன் பொண்டாட்டி செத்துப் போய்ட்டாளாம்."

"அ"

"குழந்தை உயிரில்லாம பிறந்துதாம். ரண்டு நாள் கழிச்சு அவளும் போய்ட்டாளாம். நேத்திக்குத்தான் கிரியை எல்லாம் முடிஞ்சுதாம். மறுநாளைக்கு எண்ணெய் தேச்சுண்டுதான் போகணும்னாளாம். அதைக் கூடக் கேட்காம ராத்திரியே கிளம்பிட்டானாம். மத்தியானம் நீங்கள்ளாம் ஸ்கூலுக்குப் போயிருக்கிறபோது எங்கிட்ட வந்தான். பேயறைஞ்சாப்பல நின்னான்."

வார்டன் சொல்வது என்னமோ தினசரித்தாள் படிப்பது மாதிரி இருந்தது.

சாவித்திரிக்கு அவள் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வளவு போகிறபோக்கில், அவ்வளவு சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"பிரசவம் ஆச்சுன்னு தந்தி வந்துதாம். ரண்டு நாளுக்கப்புறம் தாயார்க்காரியும் போய்ட்டாள்னு வந்துதாம் தந்தி. இவன் போய்ப் பார்த்தது வெத்து உடம்புதான்."

சாவித்திரி வெறித்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். "பிரேதம் மாதிரி மூஞ்சியை வச்சிண்டு உட்கார்ந்திருந்தான். கேவிக் கேவி அழுதான்... இப்ப என்னத்துக்கு அழணும்னு கேட்டேன். பதிலே சொல்லலே....சரி, நீ போயிட்டு வரலாம்னேன். பேசாம உட்கார்ந்திருந்தான். நான் எழுந்துண்டேன். அவன் எழுந்திருக்கிற வழியாயில்லை 'என்னப்பா நான் சொல்றது காதிலே விழலியா'ன்னேன். ஒரு வேண்டுகோள்னு ஆரமிச்சான், உன்னைப் பார்க்கணும்னான். 'வெளியிலே போ'ன்னு ஒரு சத்தம்போட்டேன். அதைக் கேட்டு காவல்காரனே ஓடி வந்துட்டான். "நீ போ, உன்னை அப்புறம் கூப்பிடறேன்'னு அவனை அனுப்பிச்சுட்டு, மறுபடியும் அவனைக் கிளப்பப் பார்த்தேன். அவன் அசைஞ்சு கொடுக்கற வகையாயில்லே. 'மாடம், மாடம்'னு எழுந்தான். என் கால்லே வந்து கட்டை மாதிரி நீளமா விழுந்தான். 'நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்னான். "நான் எங்கப்பா பேச்சைக் கேட்டுப் பாழாய்ப் போய்ட்டேன். இனிமே அவர் மூஞ்சியிலேயே முழிக்கமாட்டேன். நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்'னு புருவத்தைத் தூக்கிண்டு நின்னான். குழந்தையைக் காப்பாத்தறானாம் உன்னையும் காப்பாத்தறானாம். ரண்டு மாசத்திலே உன்னை அழைச்சுக்கறானாம்."

"அம்மா!" என்று சூடிழுத்தாற் போல் கத்தினாள் சாவித்திரி. நாற்காலியின் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டது கை. வார்டன் எழுந்து வந்தாள். அவள் முதுகையும் நெஞ்சுக் குழியையும் தடவிக் கொடுத்தாள்.

பாத்திரப் பெட்டியின் மேல் உட்கார்ந்து கைமேல் அடித்துக் கொடுத்த கை, விரலோடு விரலாகக் கோத்திருந்த கை, விடுவித்துக் கொள்வதே குறியாக இருந்த கை.

"அந்தக் கையை எனக்குத் தெரியும்மா!"

"என்ன?"

அப்போதுதான் தன்னையறியாமல் கத்தினது தெரிந்தது சாவித்திரிக்கு.

"சொல்லேன்."

சாவித்திரி கிலி பிடித்த விழியுடன் தலையை அசைத்துக் கொண்டிருந்தாள். ஒட்டடை நெடிக்கு நடுவில் மண் சுவரின் மங்கலில் விலக விலகத் துடித்த அந்த விரல்கள் நீளப் புழுக்கள் நழுவி நகர்வது போலிருந்தன.... சாவித்திரிக்கு இரைத்தது. மார்பும் படபடவென்று ஏறி இறங்கிற்று

நாலைந்து நிமிஷம் பேச்சில்லை.

நழுவி ஓடுகிற விரல். பிடிக்க முடியாத விரல்.

"இப்படியே பெஞ்சிலே படுத்துக்கிறியா?"

"வாண்டாம்மா".

"நாளைக்குத் தெருவிலேயே வந்து நிப்பன். பள்ளிக்கூடத்து வாசல்லே வந்து நிப்பன்.

"அம்மா! அம்மா!"

"சும்மா கத்தப்படாது!"

"என்னை யாரும் பார்க்க வரவாண்டாம்மா. இப்ப எல்லாம் எனக்கு இறுக்கிப் போர்த்திண்டிருக்காப்பல இருக்கு. கண்ணை மூடிண்டு கதவை எல்லாம் சாத்திண்டு இருக்காப்பல இருக்கு. ஒண்ணையும் திறக்க வேண்டாம்மா" வார்டன் அவளை வெறித்துச் சிறிது நேரம் பார்த்தாள். ஒரு இரண்டு நிமிஷம் கழித்துச் சொன்னாள்:

"நாளையிலேருந்து உனக்குப் பாடம் இங்கேயே நடக்கும். நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம்."

"சரிம்மா. நான் என் அறைக்குள்ளே கதவைச் சாத்திண்டு இருக்கேன்மா."

"சரி."

"நான் எங்கேயும் வெளியிலே போகலேம்மா."

"வாண்டாம், உன் டீச்சர் இங்கே வருவ. சொல்லிக் கொடுப்ப. உனக்கு எது வேணும்னாலும் எங்கிட்ட சொல்லு".

"சரிம்மா!"

"இப்ப ஏதாவது வேணுமா?"

"ராஜாமணி - இப்ப வாண்டாம், நாளையிலேர்ந்து..."

"குழந்தையைத்தானே? நீ வெளியிலே போகாட்டா, அதுதான் இங்கே வரணும். காலமே நானே போய் அழச்சிண்டு வந்துடறேன்."

மறுபடியும் ஒரு ஐந்து நிமிஷம் பேச்சில்லை. வார்டன் சூன்யத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்தாள். தவளை பின் ஜன்னலுக்கப்பால் கொரகொரத்தது.

"நீ போய்ப் படுத்துக்கோ" என்றாள் வார்டன்.

"நான் இங்கேயே படுத்துக்கறேம்மா இன்னிக்கி".

"நான் நடுராத்திரி மட்டும் படிச்சிண்டிருப்பேனே?"

"பரவாயில்லேம்மா. விளக்கு இருட்டு மாதிரிதான் இருக்கும் எனக்கு, கதவை எல்லாம் சாத்திப் போத்திண்ட மாதிரி இருக்கும்."

"அப்படின்னா இந்தப் பெஞ்சியிலேயே படுத்துக்கோ" என்று ஒரு தலையணையைக் கொண்டு வந்து கொடுத்தாள், வார்டன்,

சாவித்திரி ஒருக்களித்துப் படுத்துக்கொண்டாள். விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. அதுவே இருளாக இருந்தது. திறந்திருந்த கதவு அவளுக்குச் சாத்தியிருந்தது. போர்வை கண் மூக்கெல்லாம் போர்த்திக்கொண்டது.

ஆட்டுக்குட்டி உள்ளே வரலாம், ராஜாமணி வாசலில் நிற்கவேண்டாம். உள்ளே வந்து தத்தும், தவழும், கையைத் தூக்கும், சிரிக்கும்.

கண் அயர்கிறது. வார்டனே போர்வையாகிறாள். இருளாகிறாள், கதவாகச் சாத்திக் கொள்கிறாள். ஆட்டுக் குட்டியும் சாவித்திரியும் உள்ளே இருக்கிறார்கள். வார்டனே ஹாஸ்டலைச் சுற்றி நாலு பக்கமும் பெரிய மதிலாக நிற்கிறாள். சாவித்திரியும் ஆட்டுக்குட்டியும் அதைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.